# தமிழரசு



1.9.1986

ரூ. 1

தீரர் சத்தியமூர்த்தி

நூற்றாண்டுச் சிறப்பிதழ்

# கப்பல் ஓட்டிய தமிழர்
# வ. உ. சிதம்பரனார்



தோற்றம்: 5-9-1872 மறைவு: 18-11-1936

# விடிவெள்ளி முளைத்த 40வது ஆண்டு



அந்நிய ஆதிக்கத்திலிருந்து இந்தியா விடுபட்ட 40 ஆவது ஆண்டு விடுதலைத் திருநாள தமிழ்நாடு முழுதும் 15-8-'86 அன்று மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது.

சென்னை கோட்டை கொத்தளத்தில் உள்ள வானளாவிய கொடிமரத்தில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் தேசியக் கொடி ஏற்றி வைத்து உரையாற்றினார்.

கோட்டையின் முகப்பில்உள்ள கொடிமர மேடை மலர்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. காமராஜர் சாலையில் இருமருங்கிலும் வண்ணத் தோரணங்கள். கோட்டையின் எதிர்ப்புறம் உள்ள புல்வெளியில் பொதுமக்கள் திரளாகக் கூடியிருந்து நிகழ்ச்சியைக் கண்டு களித்தனர்.

முன்னதாக, கோட்டைக்கு வந்த மாண்புமிகு முதல்வர் அவர்களை அரசு தலைமைச் செயலாளர் திரு ஏ. பத்மநாபன் இ.ஆ.ப., அவர்கள் வரவேற்று முப்படைத் தளபதிகளையும், காவல்துறையின் உயர் அலுவலர்களையும், சென்னை மாநகர ஷெரீப்பையும் அறிமுகம் செய்து வைத்தார்.

சரியாகக் காலை மணி 7.57க்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்தார். தேசிய கீதம் இசைக்கப்பட, கூடி இருந்தோர் கொடி வணக்கம் செலுத்தினர்.

பின்னர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது :—

''என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே!

என்னை வழி நடத்திச் செல்லும் பெரியோர்களே!

என் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்புக்களே!

இந்திய விடுதலைத் திருநாளையொட்டி உங்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள், நம் உள்ளங்களில் நிறைந்து இருக்கிறார்கள்.

இந்தியப் பிரதமர் திரு இராஜீவ் காந்தி அவர்கள் சீரிய முறையில் செயலாற்றி வருகிறார்கள்.

பிரதமர் திரு இராஜீவ்காந்தி அவர்களின் ஆலோசனையை ஏற்று இலங்கை நிலைமைக்குச் சுமுகமான முடிவு காண வேண்டும்.

பிரிவினையைத் தூண்டும் தீய சக்திகளை ஒழிப்போம்.

அமரர் அண்ணா சொன்ன புதிய சமத்துவ, சமதர்ம, சமூக அமைப்பை அடைந்திட அயராது உழைப்போம். கடமைகளைச் சரிவரச் செய்து உரிமைகளைப்பெறுவோம். அமைதி, ஒற்றுமை முன்னேற்றம் இவற்றை முன்னிறுத்தி உழைப்போம்; உயர்வோம்!

வாழ்க சுதந்திரம்!
வெல்க இந்தியா!
அண்ணா நாமம் வாழ்க!
நன்றி, வணக்கம்.''

மாண்புமிகு முதல்வர்அவர்கள் உரையாற்றுகையில் விமானப் படையைச் சேர்ந்த ஹெலிகாப்டர் விமானம் ஒன்று கொடிமரத்தின் மேலே பறந்து பூமாரி பொழிந்தது.

பின்னர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கோட்டை வளாகத்தில் கூடியிருந்த உடல் ஊனமுற்ற பள்ளிக் குழந்தைகளுக்கு இனிப்புகளும், சிற்றுண்டியும் வழங்கினார்.



மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஊனமுற்ற குழந்தைகளுக்கு இனிப்பு வழங்குகிறார்.

கல்ராயன் மலையைச்சேர்ந்த பெண்கள் அளித்த கோரிக்கை மனுவை முதல்வர் அவர்கள் பெற்றுக் கொண்டு ஆவன செய்வதாக உறுதி அளித்தார்.

நிகழ்ச்சியில், மாண்புமிகு சட்ட மேலவை, சட்டமன்றத் தலைவர்கள், மாண்புமிகு துணைத் தலைவர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி மற்றும் நீதிபதிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள், அரசு அலுவலர்கள்அயல்நாட்டுத் தூதர்கள், மற்றும் பொதுமக்கள் ஏராளமான அளவில் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மலைவாழ் மக்களிடையே உரையாற்றுகிறார்.



விடுதலை நாளையொட்டி தமிழ்நாட்டின் பல்வேறு பகுதியிலுமுள்ள ஆயிரம் திருக்கோயில்களில் சிறப்பு வழிபாடும் பொதுவிருந்து நிகழ்ச்சியும் நடைபெற்றன. இதில் ஏறத்தாழ 10 இலட்சம் பேர் பங்கு கொண்டனர்.

சென்னையிலுள்ள மொத்தம் 1,500 கோயில்களில் 800கோயில்களில் சிறப்பு வழிபாடும் பொது விருந்தும் நடைபெற்றன. ஏறத்தாழ 25 ஆயிரம் பேர் இந்நிகழ்ச்யில் பங்குகொண்டனர். சென்னை மயிலாப்பூரிலுள்ள அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற்ற பொதுவிருந்தில் மாண்புமிகு மேலவைத் தலைவர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் கலந்துகொண்டார்கள்.

முதியோர் உதவித்தொகை பெறும் அனைவருக்கும் இந்நன்னாளில் அரசின் சார்பில் வேட்டி சேலைகள் வழங்கப்பட்டன.

—நமது செய்தியாளர்



# சத்தியமூர்த்தி நூற்றாண்டு துவக்க விழா!

**சி. பி. இராமநாதன்**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
புதுக்கோட்டை மாவட்டம்.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள திருமயத்தில் தீரர் சத்தியமூர்த்தி 19.8.1887ஆம் ஆண்டு தோன்றினார். புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த கிரனூர் பள்ளி, புதுக்கோட்டை மாட்சிமை தாங்கிய மன்னர் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்ற தீரர் சத்தியமூர்த்தி சென்னையில் சட்டக் கல்வி பயின்றார்.

சிறந்த நாவன்மையால் அனைவரது உள்ளங்களிலும் சுதந்திர உணர்வைத் தூண்டிய தீரர் சத்தியமூர்த்தி அவர்கள் தனது வாழ்வில் சிறைப் பறவையாக, தியாக வேள்வியாகத் திகழ்ந்தார். இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கென்றே தன்னை அர்ப்பணித்துக் கொண்ட தீரர் சத்தியமூர்த்தி இயல், இசை, நாடகம், மேடைப் பேச்சு போன்ற பல்வேறு துறைகளிலும் மிகமிகச் சிறப்பாக விளங்கியதுடன், அத்தனை சிறப்புகளையும் சுதந்திரத்திற்காகவே செயல்படுத்தியவராவார். திருமயத்தில் பிறந்த தீரர் சத்தியமூர்த்தியின் நூற்றாண்டு துவக்க விழா 19.8.86 அன்று மாலை 6 மணிக்குத் திருமயம் அண்ணா சீரணி அரங்கில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு இல. பழமலை, இ.ஆ.ப., அவர்கள் தீரர் சத்தியமூர்த்தி அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துப் புதுக்கோட்டை மாவட்ட அளவில் அனைத்துப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் சார்பில் நடத்தப்பட்ட தீரர் சத்தியமூர்த்தி பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற 9 மாணவ மாணவியருக்குப் பரிசுகளையும், 50 நபர்களுக்குப் பட்டாக்களையும் வழங்கித் தலைமையுரையாற்றினார்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் பங்குகொண்டு தீரர் சத்தியமூர்த்தி நூற்றாண்டு விழாவினைத் துவக்கி வைத்துப் பேருரையாற்றினார்.

தீரர் சத்தியமூர்த்தியின் கனவுகளை நனவாக்கும் வகையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் 100 கூட்டுறவுத் தொழிற் சாலைகளைத் துவங்குதல் வேண்டும் என்ற தமது கோரிக்கையையும் அவர் தெரிவித்தார்.

''ஜவஹர்லால்நேரு அவர்கள் புதுக்கோட்டைக்கு வருகைதந்த சமயம் நேருவின் கார் புதுக்கோட்டை சமஸ்தானத்திற்குள் நுழையக்கூடாது என்று ஓர் உத்தரவு தரப்பட்டது. நேருவுடன் இருந்த தீரர் சத்தியமூர்த்தி அவர்கள், ''நேருவின் கார்தானே செல்லக்கூடாது. கால்லால் நடந்து புதுக்கோட்டைக்குள் நுழைவதைப் பற்றி அந்த உத்தரவில் ஏதுமில்லையே?'' என்று கூறி நேருவை அழைத்துக் கொண்டு புதுக்கோட்டைக்குள் வந்தார்.

''காரில் சென்றால் 10 நிமிடங்களுக்குள் கடந்து செல்லும் தூரத்தை அன்று அவர்கள் 3 மணி நேரம் நடந்தே கடந்து சென்றதால் சுதந்திரப் போராட்டம் தீவிரமாக இருந்த அன்றைய தினத்தில் அச்செயல் மக்களின் சுதந்திர உணர்வைத்தட்டி எழுப்பும் ஒரு செயலாக உருவாக, சாதுர்யமான முறையில் பயன்படுத்திக்கொண்டார்'' என வியந்து பாராட்டியதுடன், தீரர் சத்தியமூர்த்தியின் பேச்சை நேரில் கேட்ட பெருமையும் தமக்கு கிடைத்தது என்றும் தமது உரையில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தெரிவித்தார்.

தீரர் சத்தியமூர்த்தி ராமாயணத்தில் மிக ஈடுபாடு கொண்டிருந்த காரணத்தின் அடிப்படையில் புலவர் இரா. கருப்பையா தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. ''கம்பன்காட்டும் சமுதாயம்'' என்ற தலைப்பில் புலவர் தி.சு. மலையப்பனும், ''கம்பனில் பெண்மை'' என்ற தலைப்பில் புலவர் முத்துவெங்கடேசனும் கலந்துகொண்டு பேசி கருத்தரங்கத்தை நிறைவு செய்தனர்.

புதுக்கோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் திரு என். சுந்தர்ராஜ், திருமயம் சட்டமன்ற உறுப்பினர் திரு த. புஷ்பராஜ், குளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. த. மாரிமுத்து, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு ஜே. முகமது கனி, அரிமழம் ஊராட்சி ஒன்றியப்பெருந்தலைவர் திரு கே. பழனியப்பன் ஆகியோரும், புதுக்கோட்டை நகர காங்கிரஸ் கட்சித் தலைவர் மற்றும் புதுக்கோட்டை விடுதலைப் போராட்ட வீரர்கள் சங்கத் தலைவர் திரு கே. வாசுதேவன், இளைஞர் காங்கிரஸ் அரசம்பட்டி திரு வெ. சின்னையா, ஜனதா கட்சி மாவட்டச் செயலாளர் திரு எம். தண்டாயுதபாணி, மக்கள் கட்சி (லோக்தல்) மாவட்டத் தலைவர் திரு கே. இராமானுஜம், தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சி மாவட்டச் செயலாளர் திரு எம். துரைராஜ், உழவர் உழைப்பாளர் கட்சி மாவட்டத் தலைவர் திரு கிடவன்குடி கணேசன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மாவட்டச் செயலாளர் திரு ப. சண்முகம், திருமயம் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தலைவர் திரு வீர. சுப்பையா ஆகியோரும் அனைத்து அரசியல் கட்சிகளின் சார்பில் விழாவில் பங்குகொண்டு தீரர் சத்தியமூர்த்தியின் தியாக வரலாற்றைக் கூறிச் சிறப்புரையாற்றினார்கள்.

தீரர் சத்தியமூர்த்தி நூற்றாண்டு விழாக்குழுவின் ஒருங்கிணைப்பாளரும், புதுக்கோட்டை மாவட்ட வருவாய் அலுவலருமான திரு எம். அப்துல்லா ஷா விழாவிற்கு வருகைதந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

புதுக்கோட்டை மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு சி.பி. இராமநாதன் அனைவருக்கும் நன்றி கூற விழா இனிதே நிறைவுற்றது.

# என் தலைவர்

**பெருந்தலைவர் காமராஜர்**

சுமார் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால், 1919ல் என்று ஞாபகம், திரு சத்தியமூர்த்தி அவர்கள் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுவதற்காக விருதுநகருக்கு வந்திருந்தபோது, நான் ஒரு சாதாரணத் தொண்டனாக இருந்தேன். அப்போது எனக்கு வயது பதினேழோ பதினெட்டோ இருக்கலாம். அதுவரை சத்தியமூர்த்தியை நேரில் காணவோ, அவருடைய வெண்கல நாதக் குரலைக் கேட்கவோ எனக்கு வாய்ப்புக் கிட்டவில்லை. எனவே, அவரைத் தரிசிக்கும் ஆவலுடன் அந்தப் பொதுக் கூட்டத்திற்குப் போயிருந்தேன்.

அப்போதுதான் திரு சத்தியமூர்த்தியை நான் முதன் முதலாகப் பார்த்தது அதற்குப் பிறகு 1923ஆம் ஆண்டில் திரு சி.ஆர். தாஸ் தலைமையில் சுயராஜ்யா பார்ட்டி தொடங்கப்பட்டபோது அந்தக் கட்சியின் கொள்கை பற்றி விவாதிப்பதற்காக முக்கிய தலைவர்கள் எல்லோரும் மதுரையில் கூடினார்கள். அந்தக் கூட்டம், காலம் சென்ற தேசபக்தர் கே.ஆர். வெங்கட்டராமய்யர் இல்லத்தில் நடைபெற்றது. நானும் அந்தக் கூட்டத்துக்குப் போயிருந்தேன். அச்சமயம் திரு சத்தியமூர்த்தி, சுயராஜ்யா கட்சியின் கொள்கையை விளக்கி மிகத் தெளிவாக ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். காங்கிரஸ், சட்டசபைக்குப் போக வேண்டுமென்பதுதான் சுயராஜ்யா கட்சி கொள்கை. அதுதான் சத்தியமூர்த்தியின் விருப்பமாகவும் இருந்தது. அந்தக் கூட்டத்தில் பலபேர் சட்டசபைப் பிரவேசத்துக்கு எதிரான கருத்தைத் தெரிவித்தார்கள். நான் கூட அப்போது சட்டசபைக்குப் போகக் கூடாது என்ற கட்சியைச் சேர்ந்தவனாகவே இருந்தேன்.

இந்த மதுரைக் கூட்டத்தின் போது தான் எனக்குச் சத்தியமூர்த்தி அவர்களுடன் நெருங்கிப் பழகவும், பேசவும், விவாதிக்கவும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அப்புறம் தலைவர் அவர்களுடன் அடிக்கடி தமிழ்நாட்டில் சுற்றுப் பயணம் செய்வதும் காங்கிரஸ் பிரசாரம் செய்வதுமே என் முழு வேலை ஆயிற்று.

அந்தக் காலத்தில் திருஏ. ரங்கசாமி அய்யங்கார், திரு. எஸ். சீனிவாச அய்யங்கார் போன்ற தலைவர்களின் பெயர்களே தமிழ்நாட்டில் பிரபலமாக விளங்கின. திரு ரங்கசாமி அய்யங்காருக்குச் சொந்தத்தில் பத்திரிகை இருந்ததால் அவர் பிரபலமடைவது சுலபமாயிருந்தது. திரு சத்தியமூர்த்திக்கு அத்தகைய வசதி எதுவும் இல்லாததால், பெரும் தலைவர்களையெல்லாம் மீறிக் கொண்டு முன்னணிக்கு வருவதற்குள் அவர் அரும் பாடுபட வேண்டியிருந்தது.



முன்னணிக்கு வந்த பிறகோ, அரசியல் தலைமையில், அவருக்கும் ரர்ஜாஜிக்கும் இடையே போட்டி இருந்து கொண்டேயிருந்தது.

இந்த நாட்டின் விடுதலைப் போராட்டம் ஒவ்வொன்றிலும் தீவிரமாக ஈடுபட்டுப் பல துன்பங்களையும் தண்டனைகளையும் அனுபவித்த தியாக சீலர்களில் திரு சத்தியமூர்த்தி முக்கியமானவர். போராட்டம், சிறைவாசம் என்ற போதெல்லாம் சற்றும் தயங்காமல் உற்சாகத்தோடு முன்வந்து நின்ற சத்தியமூர்த்தி பதவி என்று வரும்போது மட்டும் அதைத் தாமே அடைய வேண்டும் என்று எண்ணாமல் மற்றவர்களுக்கு விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை கொண்டவராயிருந்தார்.

திரு சத்தியமூர்த்திக்குப் பதவி மீது ஆசையில்லை என்பது இதற்கு அர்த்தமல்ல. அவருக்கு விருப்பம் இருந்தும், தகுதி இருந்தும், சந்தர்ப்பங்கள் இருந்தும் அவ்வப்போது ஏற்பட்ட போட்டி காரணமாக அவருக்குக் கிடைக்க வேண்டிய பதவிகள் கிடைக்காமற் போய்விட்டது. காங்கிரஸ் காரியக் கமிட்டியில் அங்கம் வகிக்க வேண்டுமென்று அவர் ஆசைப்பட்டதுண்டு. ஆனால், அது கிடைக்காமலே போய்விட்டது. மந்திரி சபையில் இடம் பெற வேண்டுமென்ற அவருடைய விருப்பமும் நிறைவேறாமல் போய்விட்டது. இதற்கெல்லாம் யார் காரணம், என்ன காரணம் என்பதை இப்போது ஆராய்ந்து பார்க்க வேண்டிய அவசியமில்லை.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பதாம் ஆண்டில் நடைபெற்ற உப்பு சத்தியாகிரகத்தின்போது, திருச்சி, வேலூர், அலிபுரம் ஆகிய மூன்று சிறைச்சாலைகளிலும் தேசபக்தர்களின் கூட்டம் நிரம்பி வழிந்தது. அப்போது சிறையிலுள்ள தொண்டர்கள் ஒன்று கூடி ஓர் தீர்மானம் செய்தோம்.

விடுதலையாகி வெளியே போனதும், திரு சத்தியமூர்த்தி அவர்களையே தலைவராக்க வேண்டுமென்று நான் வெளியிட்ட யோசனையைத் தொண்டர்கள் அனைவரும் ஆமோதித்தனர்.

வெளியில் சென்றவுடன், மதுரையில் அரசியல் மகாநாடும் மாகாண காங்கிரஸ் கமிட்டித் தேர்தலும் நடைபெற்றன. திரு சத்தியமூர்த்தியிடம் எங்கள் முடிவைத் தெரிவித்தபோது அவர் சரி என்று ஒப்புக் கொண்டார். ஆனால், தலைவர் தேர்தல் நடைபெறுவதற்கு அரைமணி முன்னதாக ராஜாஜியும் போட்டியிடுகிறார் என்று தெரிந்ததும், திரு சத்தியமூர்த்தி தாம் போட்டியிட விரும்பவில்லையென்று விலகிக் கொண்டார். அகில இந்திய சூழ்நிலையில் அது தவறான கருத்தை உண்டாக்கும் என்று சத்தியமூர்த்தி எண்ணியதே அதற்குக் காரணம். அப்போது தலைமைப் பதவியை ராஜாஜிக்கு விட்டுக் கொடுத்தது மட்டுமின்றி, ராஜாஜி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும், தாமே உபதலைவராக இருந்து வேலை செய்யவும் ஒப்புக் கொண்டார்.

1936ல் பொதுத் தேர்தல் வந்தபோது, தேர்தல் பிரசாரத்துக்காக திரு சத்தியமூர்த்தி அவர்களும் நானும் திருவண்ணாமலைப் பகுதியில் சுற்றுப்பயணம் செய்துகொண்டிருந்தோம். அதே சமயம் ராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவர் தேர்தல் நடைபெற இருந்தது. திரு குமாரசாமி



**தொண்டர் உடையில் சத்தியமூர்த்தி; அவரது இடப் பக்கத்தில் காமராஜரும், வலப்பக்கத்தில் முனுசாமி பிள்ளையும் உள்ளனர்.**

ராஜா தலைமைப் பதவிக்குப் போட்டியிட்டதை காங்கிரஸ் கட்சியில் பெருவாரியானவர்கள் விரும்பாததால், அவருக்கு எதிராக இன்னொருவரை நிறுத்த ஏற்பாடு செய்தனர். இந்தப்பிரச்னையைத்தீர்த்து வைக்க உடனே மதுரைக்குப்புறப்பட்டு வரும்படி தலைவர் சத்தியமூர்த்திக்குத் தந்தி கொடுத்திருந்தனர். அதைக் கண்ட சத்தியமூர்த்தி என்னைப் பார்த்து, ''குமாரசாமி ராஜா தான் விட்டுக் கொடுக்கட்டுமே! அவர் போட்டியிடவில்லையென்றால் பிரச்னை தீர்ந்து விடும். நீ என்ன சொல்கிறாய்? ராஜாவுக்குத் தந்தி கொடுத்து ஒதுங்கிக் கொள்ளச் சொல்லலாமா?...'' என்று கேட்டார்.

''இப்போதுள்ள நிலைமையில் குமாரசாமி ராஜா தலைவராயிருப்பது தான் நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது. ஆகையால் நாம் இருவரும் மதுரைக்குச் சென்று ராஜாவையே மீண்டும் தலைவராகத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யலாம்'' என்று கூறினேன். ஆனாலும் அது அவ்வளவு எளிதில் நடந்துவிடக் கூடிய காரியமல்ல என்கிற பயம் என் மனதில் இருந்தது. தலைவரும் நானும் மதுரைக்குப் புறப்பட்டுச் சென்று, கட்சிக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தோம். திரு சத்தியமூர்த்தி, அங்கத்தினர்கள் எல்லாரையும் அழைத்து, ''என்னிடம் உங்களுக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறதா?'' என்று கேட்டார்.

''இருக்கிறது'' என்று அவர்கள் பதில் கூறியும் சத்தியமூர்த்திக்குத் திருப்தி ஏற்படாததால், ''இப்படிச்சொன்னால் போதாது. மீனாட்சி சுந்தரேஸ்வரர் சாட்சியாக என்னிடம் நம்பிக்கை இருக்கிறது என்று கூறினால்தான் நம்புவேன்''என்றார்.

அவர் கேட்டுக் கொண்டபடியே எல்லோரும் உறுதி அளித்னர். அதன்பிறகே அவர், ''உங்களுக்குள் எந்தவித அபிப்பிராய பேதம் இருந்த போதிலும் குமாரசாமி ராஜாவையே நீங்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பதுதான் என் விருப்பம்'' என்றார்.

திரு சத்திய மூர்த்தியின் விருப்பப்படி திரு குமாரசாமி ராஜாவையே தேர்ந்தெடுத்தார்கள்.

1936ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நேருஜி தமிழ்நாட்டில் சுற்றுப் பயணம் செய்தபோதும் அதற்கு முந்திய வருடங்களில் படேலும் ராஜேந்திரப்பிரசாதும் இங்கு வந்திருந்தபோதும் தான், சத்தியமூர்த்திக்குத் தமிழ்நாட்டில் எவ்வளவு செல்வாக்கு இருக்கிறது என்பதையும், மக்கள் அவரிடம் எத்தகைய அன்பும் மரியாதையும் கொண்டுள்ளார்கள் என்பதையும் அறிந்து கொள்ள முடிந்தது.

1939ஆம் ஆண்டு இறுதியில் மாகாண காங்கிரஸ் தலைமைப் பதவியில் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரும் திரு சத்தியமூர்த்தியும் போட்டியிட்டனர். அந்தப்போட்டியில் வகுப்புவாதம் குறுக்கிட்டதால், திரு சத்திய மூர்த்தி தோல்வி அடைய நேர்ந்தது. மனமுடைந்து போயிருந்த திரு சத்திய மூர்த்தி அன்றிரவு என்னைப் பார்த்து, ''காமராஜ்! அடுத்த வருஷம் உன்னைத்தான் காங்கிரஸ் தலைவனாகத் தேர்தலுக்கு நிறுத்தப் போகிறேன். முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும். வகுப்பு வாதத்தைப் போக்க அது ஒன்றுதான் வழி. நீ தலைவனாக இரு. நான் உனக்குக் காரியதரிசியாக இருந்து வேலை செய்கிறேன்'' என்றார்.

''அதற்கு இப்போது என்ன அவசரம்? அப்போது பார்த்துக் கொள்ளலாம்'' என்று நான் பதில் கூறினேன்.

''அடுத்த வருஷம் உன்னையே தான் நிறுத்தப் போகிறேன்.இந்த முடிவு நிச்சயமானதுதான்'' என்று உறுதியாகக் கூறிய சத்தியமூர்த்தி அவர்கள், தாம் கூறியபடியே அடுத்த வருஷம் நடைபெற்ற தலைவர் தேர்தலில் என்னை நிறுத்தவும் செய்தார். பலத்த போட்டி இருந்தபோதிலும் சத்தியமூர்த்தியின் தலைமையில் ஊழியர்களின் ஆதரவுடன் நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். என்னுடைய இந்த வெற்றி சத்தியமூர்த்திக்குப் பெரும் மகிழ்ச்சியை அளித்தது. அந்த ஆண்டு நான் தலைவராக இருந்தபோது, அவரே காரியதரிசியாக இருந்து எனக்கு ஆலோசனை கூறி என்னைப் பெருமைப்படுத்தியது, என் வாழ்நாளில் நான் மறக்க முடியாத நிகழ்ச்சியாகும்.

'குவிட் இந்தியா' போராட்டத்தின்போது திரு சத்தியமூர்த்தியைக் கைது செய்து வேலூர்ச் சிறைக்குக் கொண்டு போனார்கள். அப்போது நானும் அவருடன் வேலூர்ச் சிறையில் இருந்தேன்.

1937ல் ராஜாஜி சென்னையில் முதன் முதலாக மந்திரிசபை அமைத்தபோதுசத்தியமூர்த்திக்கு அந்த மந்திரி சபையில் இடம் அளிக்கவில்லை.

சத்தியமூர்த்தி அவர்கள் நிச்சயம் மந்திரி சபையில் இடம்பெறுவார் என்றே எல்லோரும் எதிர்பார்த்தார்கள். தலைவர் சத்தியமூர்த்தியும் எதிர்பார்த்தார். ஆனால், எல்லோரும் எதிர்பார்த்தபடி நடக்கவில்லை. மந்திரிகளின் பெயர்ப் பட்டியல் பத்திரிகையில் வெளியானபோது, சத்தியமூர்த்தியின் பெயர் அதில் இல்லாததைக் கண்டு பலரும் ஏமாற்றத்துக்குள்ளாயினர்.

இந்த நாட்டின் விடுதலைப் போராட்டம் ஒவ்வொன்றிலும் தீவிரமாக ஈடுபட்டுச்சிறைவாசம் அனுபவித்த தியாக சீலர்களில் சத்தியமூர்த்தி முக்கியமானவர்.

தேசவிடுதலைக்காகப்போராடி உடல் நலம் குன்றி உயிர்த் தியாகம் செய்த அருமைத் தலைவர் திரு சத்தியமூர்த்தி அவர்கள், இந்த நாட்டின் விடுதலையைக் கண்ணால் காணாமலேயே மறைந்துவிட்டார்.

சென்னைக் கோட்டையில் சுதந்திரக்கொடியை ஏற்றி வைத்திருக்க வேண்டிய அந்தத் தியாக புருஷர், கோட்டையில் சுதந்திரக் கொடி பறப்பதைப் பார்க்காமலே போய்விட்டார்.

தீரர் சத்தியமூர்த்தியின் நினைவு என் உள்ளத்தில் எப்போதும்இருந்துகொண்டிருக்கும். அவருடைய கணீரென்ற வெண்கல சாரீரம் என் செவிகளில் எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கும்.

**நன்றி : ஆனந்தவிகடன் (1964)**

# நாவலர் சத்தியமூர்த்தி

## மாண்புமிகு மேலவைத் தலைவர்
## டாக்டர் ம. பொ. சிவஞானம்



சிம்லாவிற்குச் சென்றிருந்த போது மனைவியாருடன் சத்தியமூர்த்தி.

அறிஞர் எஸ். சத்தியமூர்த்தி, மன்னராட்சிப் பிரதேசமாகத் திகழ்ந்த புதுக்கோட்டையிலே பிறந்தார். சென்னையில் குடியேறி, தமது நாவன்மையாலும் தியாகத்தாலும் பாரதப் பெருநாட்டிற்கும், அதன் ஒரு பகுதியான தமிழ்நாட்டிற்கும் புகழ் தேடி வைத்து, சென்னை நகர மண்ணிலேயே மறைந்தார். சென்னை நகரம் அவரது புனித அஸ்தியைத் தாங்குவதற்குத் தவஞ் செய்தது போலும்!

ஆங்கிலத்திலும் தமிழிலும் தமக்கு இணை சொல்வார் இல்லாத வகையிலே சத்தியமூர்த்தி ஐயர் நாவன்மை பெற்றிருந்தார். அதனால், ''நாவலர்'' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார்.

பழைய சென்னை மாகாண சட்டசபையிலேயும், இந்திய சட்டசபையிலேயும் பிரிட்டிஷ் ஆதிக்கத்தை எதிர்த்து வாதாடினார்.

''பிரிட்டிஷ் சிங்கத்தை அதன் குகையிலேயே சந்தித்துப் போராடப் போகிறேன்'' என்று சொல்லி, மக்கள் ஆதரவோடு சட்டமன்றங்களுக்குச் சென்றார். சொன்னதுபோல, பிரிட்டிஷ் சிங்கத்தின் பிடரியைப் பிடித்து ஆட்டினார். அதனால், ''தீரர்'' எனப் புகழ் பெற்றார்.

ஐயருடன் பல ஆண்டுக் காலம் நெருங்கிப் பழகினேன். அவரும் நானும் சென்னை மாவட்டக் காங்கிரசின் தலைவராகவும் செயலாளராகவும் பல ஆண்டுக் காலம் பதவி வகித்தோம். அதை இப்போது நினைத்தாலும் எனதுமெய் சிலிர்க்கிறது. அமைப்புகளைப் படைத்து, அவற்றைக் கட்டி வளர்ப்பதிலே என்னிடம் ஏதேனும் திறமை இருக்குமானால், அது ஐயருடன் சேர்ந்து பணிபுரிந்த காலத்தில் யான் பெற்றதாகும்.

அவர், முன்கோபக்காரர்; ஆனால் பழகுவதற்கு இனியவர்; கள்ளங்கபடமற்றவர்; சிறந்த பண்பாளர்; சொல்லொன்று செயலொன்றாக நடக்கத் தெரியாதவர். அவரது மேடைப் பேச்சைக் கேட்டு, அவரைப் போலப் பேச வேண்டும் என்ற ஆசை எனக்கு ஏற்பட்டதுண்டு.

ஐயர். பாரதப் பெருநாடு முழுவதையும நேசித்த தேச பக்தர்.

''சட்ட சபைக்கு காங்கிரஸ் கட்சியே போகவேண்டியதில்லை; அதன் சார்பிலே சத்தியமூர்த்தி ஒருவர் சென்றால்போதும்'' என்று ஒரு சமயம் காந்தியடிகள் சொன்னார். அப்படிப் புகழ் பெறும் அளவுக்குச் சிறந்த பார்லிமெண்டரிவாதி அவர். இவை நாடறிந்தவையாகும்.

ஆனால், இன உணர்ச்சியுள்ள தமிழர்; தன் தாய்மொழியான தமிழிடத்துப் பற்றுடையவர். தமிழினத்தின்-தமிழகத்தின் தனி நலன்களைக் காப்பதற்கான அவசியம் ஏற்பட்டபோது, காங்கிரஸ் மேலிடத்துடன் போராடியவர்.

---

கலசமங்கலம் - சிங்கமங்கலம் என்று பெயர் பெற்றிருந்த பகுதிக்கு 17-ஆம் நூற்றாண்டில் தொண்டைமான் மன்னர்கள் 'புதுக்கோட்டை' என்று பெயரிட்டு அழைத்தனர். ஆனால் புதுக்கோட்டை 18, 19-ஆம் நூற்றாண்டுப் பதிவேடுகளில் தொண்டைமான் நாடு என்றே அழைக்கப்பட்டதாக அறிகிறோம் சுதந்திரப் போராட்ட காலத்தில் வெளிமாநிலங்களுக்குச் செல்லும் சமஸ்தான மக்களிடம் நீங்கள் 'சத்தியமூர்த்தி புதுக்கோட்டையா?' எனக் கேட்பதுண்டு.

ஆதாரம்—ராஜகோபால விஜயம்

இந்தச் செய்திகள் எல்லாம் தமிழ்நாட்டுடைய கவனத்திற்கு அப்பாற்பட்டவையாகிவிட்டன.

திரு. சத்தியமூர்த்தி சங்கீதப் பிரியர். ஆனால், தமிழகத்திலே-தமிழர் மத்தியிலே இசைவாணர்கள் தமிழில்தான் பாடவேண்டும் என்று கச்சைகட்டிக் கொண்டு போராடியவர். தமிழர் மத்தியிலே பிற மொழிகளில் பாடும் கொடுமையை ''சங்கீத வித்வத்சபை'' மேடையிலேயே -அதன் ஆண்டு விழாக்களிலே எதிர்த்துப் பேசியவர்.

இராயப்பேட்டை காங்கிரஸ் (இன்று சத்தியமூர்த்தி பவன்) திடலிலே கதர் -சுதேசி கண்காட்சியோடு சேர்த்து, ''இசைவிழா'' என்னும் பெயரிலே தனி விழா ஒன்றையும் முதன்முதலில் நடத்திய பெருமை ஐயருக்கே உரியதாகும். அந்த விழாவிலே தமிழில் தான் பாடல்களை மிகுதியாகப் பாடவேண்டுமென்று கட்டளையிட்டார். அதற்கு ஒப்பிய பாடகர்களையும் பாடகிகளையும் அழைத்த பெருமை அவருக்கு உண்டு.

கதர் -சுதேசிக் கண்காட்சி தமிழ்நாடு காங்கிரசின் பெயரால் நடத்தப்பட்டு வந்தது என்பது இங்கு நினைவுகொள்ளத் தக்கதாகும்.

கல்லூரிகளில் பாடங்கள் அனைத்தும் தாய்மொழியிலேயே-அதாவது தமிழ் மாணவர்களுக்குத் தமிழிலேயே கற்றுத் தர வேண்டுமென்ற கொள்கையுடையவர் சத்தியமூர்த்தி.

சென்னைப் பல்கலைக் கழக செனட் சபையிலே, ''பல்கலைக் கழகப் பாடங்களுக்கு தமிழைப் பயிற்று மொழியாக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தைக் கொண்டு சென்ற பெருமை ஐயருக்கே உரியதாகும். ''விரும்புவோருக்கு'' என்ற ஒரு சிறு திருத்தத்தோடு ஐயரின் தீர்மானம் ஏற்கப்பட்டது. ஆங்கிலேயராட்சிக் காலத்திலே இது நடந்தது.

''மதராஸ் மனதே'' என்னும் கூக்குரல் ஆந்திரரிடமிருந்து எழுந்தபோது, ''அப்படியொரு நிலைமை ஏற்படுமானால், சென்னை நகரிலே இரத்த ஆறு ஓடும்'' என்று ஆளுநரைச் சந்தித்துச் சொல்லி, ஆந்திரரை அச்சுறுத்திய பெருமையும் ஐயருக்கு உண்டு.

சென்னை நகரின் குடிநீர்ப் பிரச்னையானது அவர் காலத்தில் கோரத் தன்மையைப் பெற்றிருந்தது. அதனைத் தீர்க்கும் மியாருடட, ''பூண்டி நீர்த்தேக்கத்தை அமைத்த பெருமையும் ஐயருக்கு உண்டு. அதனால், அதற்கு ''சத்தியமூர்த்தி நீர்த்தேக்கம்'' என்று பெயரிடப்பட்டுள்ளது.

நாவலர் சத்தியமூர்த்தி வறட்டு அரசியல்வாதி மட்டுமல்ல; வற்றாத கலைப் பொக்கிஷம்! தமிழ் நாடகக் கலையை வளர்க்க, படித்தவர்கள் எல்லாம் சேர்ந்து, ''சுகுண விலாஸ் சபை'' என்ற ஒன்றை சென்னை நகரிலே நிறுவினர். அதிலே, ஐயருடைய பங்கு அதிகம். நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியார் அதற்குத் தலைமை தாங்கினார். அந்த சபை நடத்தி வந்த நாடகங்களிலே திரு. சத்தியமூர்த்தி பல்வேறு வேடங்களைத் தாங்கி நடித்தார். ''நல்ல குணச்சித்திர நடிகர்'' என்று ஐயரைப் புகழ்வார் பம்மல் சம்பந்த முதலியார். தமிழ் நாடகங்களிலேயும், சமஸ்கிருத நாடகங்களிலேயும்-ஏன்? ஆங்கில நாடகங்களிலேயும் ஐயர் நடித்துள்ளார். நடிப்பதற்குப் பயிற்சியளிக்கும் ஆசிரியர் பொறுப்பையும் சபையில் அவர் ஏற்றதுண்டு. அரசியல் தலைவர் ஒருவர் சிறந்த நடிகராக இருக்க முடியும் என்பது முதன்முதலில் ஐயரிடமிருந்துதான் தொடங்கியதெனலாம்.

நாடகங்களில் தெய்வ வேடங்களைத் தாங்கி நடிப்பது ஐயருக்குப் பிடிக்காத ஒன்றாக இருந்



**ஜவகர்லால் நேருவுடன் சத்தியமூர்த்தி, அவரது மனைவியார், மகள் லட்சுமி ஆகியோர்.**

தது. அது, தெய்வங்களை அவமதிப்பதாகும் என்றும் தமது வானொலிப் பேச்சு ஒன்றில் ஐயர் கூறியிருக்கிறார். இதிகாச-புராண நாடகங்களை திரு சத்தியமூர்த்தி வெறுக்கவில்லையென்றாலும், சமுதாயத்திலுள்ள பிரச்னைகளை எடுத்துக் காட்டும் சமூக நாடகங்களுக்குக் கலைஞர்கள் தங்களை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும் என்று அவர் கூறினார். திரைப்படங்களும் இந்த முறையிலேயே தயாரிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினர்.

தென்னிந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத்தின் தோற்றத்திற்கு ஐயரும் உதவி புரிந்ததுண்டு. சில ஆண்டுகள் அதன் தலைவராகவும் அவர் இருந்திருக்கிறார்.

சிறையில் புகும்போதெல்லாம் அவர் நோய்வாய்ப்பட்டார். அதற்குக் காரணம், சங்கீதம் கேட்பதற்குச் சந்தர்ப்பம் இல்லாமல் போனதுதான் என்று நான் எண்ணுவதுண்டு.

ஆகஸ்ட்டுக்கிளர்ச்சியின்போது அவரும் நானும் அமராவதி (மகாராஷ்டிரா) சிறையில் அடைபட்டிருந்தோம். சிறையில் கூட இலக்கிய நூல்களைப் படிக்கச்செய்து, அதைக் கேட்டு மகிழ்வதிலே, ஆர்வம் காட்டினார். நான் கம்பராமாயணப் பாடல்களைப்பாடிக் காட்டுவது உண்டு. திரு.எம். அனந்தசயனம் ஐயங்கார் வான்மீகி ராமாயணம், வியாச பாரதம் ஆகியவற்றைப் படித்து விளக்கிக் கூறுவார்.

இலக்கியமும் இசையும் ஐயருக்குப் பொழுதுபோக்கல்ல; அவரது உயிரை வளர்க்கும் ஜீவதாரைகள்!

சமஸ்கிருதத்தில் பெரும்புலமை பெற்றவர். அவருடைய ஆங்கிலப் பேச்சும் தமிழ்ப் பேச்சும் சமஸ்கிருத தொனியிலேயே அமையும். அது அவரது பேச்சுக்கு இருந்த தனிச் சிறப்பு. தமிழ்ப் பேச்சிலே சமஸ்கிருதச் சொற்களைத் தேவைக்கு அதிகமாகவே கலப்பார் - காரணம், சமஸ்கிருதத்தில் அவருக்கிருந்த பெரும் புலமைதான்-அதன்மூலம் மணிப்பிரவாளம் என்பதன் சுவையை அவரது பேச்சைக்கேட்போர் அனுபவிக்க முடிந்தது.



நாடகத்தில் ராஜபார்ட் வேடத்தில் சத்தியமூர்த்தி.

''உப்புச் சத்தியாக்கிரகப் போரிலே சென்னை மாகாணம் தனது பங்கைச் சரியாகக் கொடுக்கவில்லை'' என்னும் வாசகத்தைச் சேர்த்து காங்கிரஸ் மகாசபையின் வருடாந்திர அறிக்கை கராச்சி காங்கிரசிலே சமர்ப்பிக்கப்பட்டது. சமர்ப்பித்தவர் பொதுச்செயலாளர் ஜவஹர்லால் நேரு ஆவார். இதைக் கேட்டு தென்னிந்திய உறுப்பினர்கள் அமைதியாக இருந்தனர். ஐயரோ ஆத்திரப்பட்டுவிட்டார்! சென்னை மாகாணத்திலே காங்கிரசுக்குப் பணத்தை அள்ளிக் கொடுக்க பிர்லாக்களோ, டாட்டாக்களோ இல்லை. எங்கள் சக்திக்கேற்ப போராட்டத்தை நடத்தியிருக்கிறோம்'' என்று கூறி, தென்னிந்தியாவைக் குறைகூறும் வாசகத்தை அறிக்கையிலிருந்து அகற்ற வேண்டும் என்று சத்தியமூர்த்தி போராடினார்.

அதன்படி, பொதுச் செயலாளர் மேடையேறி, ''ஐயர் ஆட்சேபித்த பகுதி அகற்றப்படும்'' என்று உறுதி கூறினார்.

பொதுவாக, நாவலர் சத்தியமூர்த்தி ஐயர் உலகனைத்தையும் நேசித்த சர்வ தேசியவாதி; பாரதம் முழுவதையும் தமது தாய் நாடாகக் கொண்ட தூய தேசியவாதி. தமிழர் என்னும் இன உணர்வு படைத்த உண்மைத் தமிழர். தமிழர் வாழ்விலே, எங்கும் எதிலும் தமிழே தலைமை பெற வேண்டும் என்று கருதிய தமிழ்ப் பற்றாளர்.

நெற்றியிலே வெண்ணீறு; உச்சியிலே குடுமி; இடுப்பிலே பஞ்சக்கச்ச வேட்டி! -இப்படி, வைதீகக் கோலத்துடன் காட்சியளிப்பார் என்றாலும், அவர் தம் அரசியல் வாழ்வில் வைதீகத்தைக் கலந்ததில்லை; சாதிவாதம் பேசியதில்லை; சமயச்சார்பற்ற அரசியலை அவர் விரும்பினார். அப்பட்டமான காந்தியவாதி;

அவரது நூற்றாண்டு விழா அடுத்த ஆண்டில் வரும் ஆகஸ்டிலே தமிழக அரசால் நடத்தப்பட விருப்பது அறிந்து, மகிழ்ச்சியடைகிறேன்.

அப்போது இந்திய நாடாளு மன்றத்திலும், தமிழக சட்ட மன்றத்திலும், அவரது திருவுருவப்படம் திறக்கப்பட வேண்டும். இந்த இரு அவைகளிலும் அவர் நிகழ்த்திய சரித்திரச் சிறப்புமிக்க சொற்பொழிவுகளைத் தொகுத்துத் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிட வேண்டும்.

வாழ்க, நாவலர் சத்தியமூர்த்தி புகழ்!

# சத்தியமூர்த்திக்கு வரவேற்பு

நாமக்கல் கவிஞர்

## வெ. இராமலிங்கம்பிள்ளை



நித்திய அறங்கள் நாட்டில் நிலைத்திட உலகம் வாழ
உத்தமன் காந்தி காட்டும் ஒருவழி ஒன்றே உண்டு;
சத்திய சாந்த நோன்பின் தவச்சிறை யிருந்து வந்தாய்
சத்திய மூர்த்தி எங்கள் தலைவனே! வருக! ஐயா!

உடல்நலம் குறைந்தி ருந்தும் ஒருசிறு தயக்க மின்றிக்
கடன்என ஓடி அண்ணல் காந்தியின் ஆணை தாங்கித்
திடமுடன் தேச சேவை தீரர்கள் இனத்தைச் சேர்ந்தே
இடரிடைக் காத்தாய் பெற்ற இந்தியத் தாயின் மானம்!

ஏழைகள் துயரம் போக எளியவர் களைப்பு நீங்கப்
பாழ்பட உலகை வாட்டும் பகைமைகள் குறைய வென்றே
வாழிய காந்தி சாந்த வாய்மையின் வழியில் நின்று
ஊழியம் செய்யு முங்கள் உதவியை உலகம் போற்றும்

தீனரை வதைத்து வாட்டித் தின்றுடல் சுகித்து வாழும்
மானமில் லாத வாழ்க்கை மலிந்த(து) உலகில்; மற்ற
ஞானநல் வழியில் செல்ல நடத்திடும் காந்தி சாந்தச்
சேனையில் சேர்ந்த பேரைச் செகமெலாம் சிறப்புச் செய்யும்.

தஞ்சம்வந் தவரை நம்பித் தன்னர சிழந்து நொந்து
பஞ்சமும் பிணியும் வாட்டப் பலதுயர் பட்டா லேனும்
எஞ்சிய 'சாந்தி'ஞானம் இன்னமும் குறைவி லாத
வஞ்சியாம் பார தத்தாய் வாழ்த்துவள் வாரித் தூக்கி!

பணத்தினை இழந்திட் டாலும் பலத்தினிற் குறைந்திட் டாலும்
குணத்தினிற் குறையக் கூசும் குலத்தினிற் பிறந்தோ மன்றோ?
கணத்தோடும் சிறையில் நொந்தும் கண்ணியம் குறைந்தி டாத
மணத்தொடும் வருவீர் தம்மை மாநிலம் மறவா தென்றும்.

வள்ளுவன் குறளும் வேத வடமொழி வகுத்த யாவும்
தள்ளரும் 'சாந்தி' என்ற தனிப்பதக் கருத்தே யாகும்
கள்ளமில் லாம லெண்ணின் காந்திசொல் அதுவே; காண்போம்
என்னரும் அதுவே யாகும் இந்திய நாக ரீகம்!

வருகவே சத்திய மூர்த்தி! வாழ்கஉன் இனத்தோ ரெல்லாம்
பெருகிநம் சாந்தி சேனை பெற்றதாய் நாட்டை மீட்கும்
அருகிலே அடையும் சொந்த அரசினை அழைத்துக் கொள்ளத்
தருகஉன் திறமை முற்றும் தமிழகம் பெருமை கொள்ளும்!

*தீரர் சத்தியமூர்த்தி 1942 போராட்டத்தின் போது சிறைப்பட்டு, பின்னர் விடுதலை பெற்று வெளிவந்த போது அவரை வரவேற்றுப் பாடியது. ஸ்டார் நிறுவனத்தார் வெளியிட்ட நாமக்கல் கவிஞர் பாடல்கள் என்னும் நூலிலிருந்து எடுக்கப் பெற்றது.*



## சத்தியமூர்த்தியின் கடித இலக்கியம்

அமரர் சத்தியமூர்த்தி அவர்கள் அரசியல் கைதியாக இருந்தபோது (1941 ஆம் ஆண்டு) பொது மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்தார். அச்சமயம் அவரது மகள் லட்சுமிக்குத் தொடர்ச்சியாகக் கடிதங்கள் எழுதுவது வழக்கம். சாப்பிடும் முறையிலிருந்து, கலை, பேச்சாற்றல், சமூக சேவை வரை வெவ்வேறு வகையான கருத்துக்களை அக்கடிதங்களில் எழுதி வந்தார்.

இக் கடிதங்கள் பின்னர் 'At the Threshold of Life என்ற தலைப்பில் நூலாக வெளிவந் துள்ளது. லட்சுமி மட்டுமல்ல எதிர்கால இளந் தலை முறையினர் ஒவ்வொருவரும் படித்துப் பயன்பெற வேண்டிய கருத்துக்களை உள்ளடக்கி யவை இக்கடிதங்கள்.



## மும்மொழிப் புலமை

சத்தியமூர்த்தி அவர்கள் ஆங்கிலம் சமஸ் கிருதம், தமிழ் ஆகிய மூன்று மொழிகளிலும் புலமை பெற்றவர்.

சமஸ்கிருதத்தில் வெகு ஈடுபாடு கொண்ட அவர், சமஸ்கிருத அகாடமியில் முக்கிய தூண் களில் ஒருவராகத் திகழ்ந்தார். மிக இளம் வயதில் அவரது தந்தை தந்த பயிற்சியே சமஸ் கிருதத்தின் மீது அவருக்கு ஈடுபாடு உண்டாகக் காரணம்.

சட்டமன்றத்திலோ, பொது மேடை களிலோ சமஸ்கிருதத்தில் மேற்கோள் காட்டாது இவரது சொற்பொழிவு எதுவும் முடிவு பெற்ற தில்லை.

சமஸ்கிருதத்திற்கு அடுத்தாற்போல் அவர் பெருவிருப்புக் கொண்ட மொழி தமிழ். அவரது தமிழ்ப்பேச்சு, தெளிவான நீரோடை போன்ற எளிய சொற்களால், நேரிடையான கருத்துக் களைத் தெரிவிப்பதாய் அமைந்திருக்கும்.

ஆங்கிலத்தில் அவரது பேச்சாற்றல் பெரும் சிறப்பு வாய்ந்தது. இங்கிலாந்து விஜயம் செய்தபோதும், சட்டமேலவையிலும் இவருக்கு ஒரு நல்ல மதிப்பை மற்றவர்களி டையே உருவாக்கியது இவரது ஆங்கிலப் பேச் சாற்றல்.

தமது இல்லத்தில் தமிழையும் ஆங்கிலத்தையும் சரிசமமாய்ப் பாவித்துப் பயன்படுத்து வார். ஆனால் தாய்மொழி மீதான அவரது பற்று அதிகம். பள்ளிகளில் ஆங்கிலம் விருப்பப் பாடமாக இருக்கட்டும்; ஆனால் பயிற்றுமொழி தாய்மொழியாகவே இருக்க வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தினார்.

## இளைஞரைப் பாராட்டிய இனிய தலைவர்

திருநெல்வேலி, இந்துக் கல்லூரி வகுப்புகள் நடந்து கொண்டிருந்தன. ஒரு சிலர் ஒரு வகுப்பை நோக்கி வந்தனர். அவர் களில் பள பளக்கும் கோட்டு அணிந்து முதன் மையாக வந்தவர் 'செனட்' 'சிண்டிகேட்' உறுப்பினர். அவர் அந்நாளில் புகழ்பெற்று விளங்கிய பெரும் காங்கிரஸ் தலைவர். வகுப்பில் நுழைந்து,பேராசிரியரிடம் உரையாடிக் கொண்டிருக்கும்போது ஒரு மாணவர் அவரை நெருங்கி, ''தங்களிடம் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்'' என்றார். அவர் அனுமதித்ததும் ''தாங்கள் அந்நியப் பொருள்களை வெறுக்கும் விடுதலை இயக்கத்தைச் சார்ந்தவர். ஆனால் தாங்கள் அந்நியத் துணியில் கோட்டு போட்டுக் கொள்ளலாமா?'' என்று கேட்டார்.

மற்றவர்கள், 'என்ன நடக்குமோ' என்று பயந்தனர். அத்தலைவர் வெளியேறி விட்டார். சில நிமிடங்கள் சென்றன. கல்லூரித் தலைவர் அறைக்கு அந்த மாணவரை பணியாள் வந்து அழைத்துச் சென்றார். அங்கு அத்தலைவர் கல்லூரி முதல்வருடன் இருந்தார். மாணவர் பயத்துடன் இருந்தார். அத்தலைவர் மாணவரை அன்புடன் பாத்து ''தம்பி உனது துணிவைப் பாராட்டுகிறேன். இந்நாட்டுக்கு உன்னைப் போன்ற இளைஞர்கள் தான் தேவை. தலை வர்கள் சொல்லுவதைச் செயலிலும் கடைப் பிடிக்க வேண்டும் என்ற உனது எண்ணத்தைப் பாராட்டுகிறேன். ஆனால் நான் அணிந்திருப்பது அந்நியத் துணியல்ல'' என்று கத்தியால் கோட்டின் உட்பகுதியைக் கிழித்துக் காட்டினார். மாணவரும் மற்றவர்களும் திகைத்தனர். அவ்வாறு கோட்டைக் கிழித்துக் காட்டிய தலைவர் தான் தீரர் சத்தியமூர்த்தி.




முழு விவரங்களுக்கு, அருகிலுள்ள நியூ இந்தியா ஆபீஸ் அல்லது ஏஜெண்டோடு தொடர்பு கொள்ளுங்கள்.

**நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்**

(ஜெனரல் இன்ஷ்யூரென்ஸ் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியாவின் துணை நிறுவனம்)

**இன்சூரன்ஸ் — நஷ்ட காலத்தில் நம்பகமான ஆதரவு!**

# தன்னம்பிக்கையுடன் தலைநிமிர்ந்து வாழ்ந்திட



திரு வெ.மோகனகிருஷ்ணன்

அன்று திங்கட்கிழமை!

ஏராளமான ஆடவரும் பெண்டிரும் அந்த அலுவலகத்தின் ஓர் அறைக்கு முன்னால் கூடியிருக்கிறார்கள்.

ஒவ்வொருவராக அறைக்குள்ளே சென்று அலுவலர் ஒருவரைச் சந்திக்கிறார்கள்.

''ரேஷன் கார்டு கொண்டு வந்திருக்கீங்களா?''

''கொண்டு வந்திருக்கோமுங்க...''

''சரி, கீழே கொடுத்து, அப்ளிகேஷன்...ஃபார்ம் வாங்கிக்குங்க....''

அலுவலர் அன்புடன் கூறுகிறார்.முகத்தில் மலர்ச்சியுடன் செல்கிறார் ஒரு பெண்மணி.

ஆம். சென்னை பிரகாசம் சாலையில் (பிராட்வே) உள்ள சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கியில்தான் இந்தக் காட்சி.

வங்கியின் தனி அலுவலர் திரு வெ.மோகனகிருஷ்ணன் அவர்களைச் சந்திக்கிறோம். அவர் கூறுகிறார்:

''சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் - வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள ஏழை எளிய மக்கள்-குறைந்த வருமானமுள்ளவர்கள் இப்படிப் பலதிறத்தார்க்கு எங்கள் வங்கி சிறுதொழில்கள் தொடங்கக் கடனுதவி வழங்கி வருகிறது.

''சென்னை நகரின் பல பகுதிகளில் வாழும் மக்கள் இதனால் பயன்பெறுகிறார்கள். வீட்டிலிருந்தபடியே தொழில்கள் செய்வதற்கும், வெளியில் தனியிடம் அமைத்துத் தொழில்கள் செய்வதற்கும் சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி கடன் தந்து உதவுகிறது.

''1930ஆம் ஆண்டு சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி தொடங்கப்பட்டது. இன்று இது ஆல்போல் வளர்ந்து சென்னை மாநகரில் 35 கிளைகளைத் தோற்றுவித்து, ஏழை எளியோருக்கு நிழல் தந்து கொண்டிருக்கிறது.

''வைர விழாவை நோக்கி வளரும் இந்த வங்கி நகைக் கடன், நுகர்வோர் கடன்களையும் வழங்கி வருகின்றது. 1983-84ஆம் ஆண்டு ரூ. 1,231.39 இலட்சத்துக்கு வழங்கிய நகைக்கடன் 1985-86ல் ரூ. 2486.32 இலட்சமாக உயர்ந்துள்ளது. இதேபோல நுகர்வோர் கடன் 1983-84ல் ரூ. 22.70 இலட்சமாக இருக்க, 1985-86ல் ரூ. 36.69 இலட்சமாக அதிகரித்துள்ளது. சிறுதொழில் கடன் 1983-84ல் ரூ.14.44 இலட்சம் என்பது 1985-86ல் ரூ. 77.41 இலட்சம் என உயர்ந்திருக்கிறது. இவ்வாறு எல்லாரும் எல்லாமும் பெற எங்கள் வங்கி உதவி வருகிறது''.

சுயமாகத் தொழில் செய்ய வேண்டும் என்ற ஆசையும், உழைத்துச் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணமும், மற்றவர்களைப்போல வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற துடிப்பும் இருப்பது இயல்புதானே!

சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கியின் மூலம் கடனுதவி பெற்று பல்வகைத் தொழில்களில் ஈடுபட்டு வரும் சிலரைச் சந்தித்தோம்.



## திருமதி எஸ். பார்வதி

சென்னை மேற்கு மாம்பலத்தைச் சேர்ந்தவர் திருமதி எஸ். பார்வதி (வயது 30). இவர் கண்கவர் காகித பொம்மைகளைச் செய்து வருகிறார். அவற்றுள் நடன நங்கை பொம்மை சிறப்பாக விளங்குகிறது.

''பொம்மைகள் செய்து விற்பனை செய்யலாம் என்ற எண்ணம் பல நாட்களாக இருந்து வந்தது. ஆனால் அதற்கு முதல் போட வேண்டுமே என்ற தயக்கம் ஏற்பட்டது. வெளியில் கடன் வாங்கலாம் என்றாலோ அதிக வட்டி தர வேண்டியிருக்குமோ என்று யோசித்தேன். அப்போது தான் எம்.சி.சி. பாங்க் சிறு தொழில்களுக்குக் கடன் தருகிறது என, தெரிந்தவர் ஒருவர் மூலமாக அறிந்து நாடினேன். கடந்த ஆண்டு இந்த பாங்க் எனக்கு ஐயாயிரம் ரூபாய் கடன் தந்தது'' என்று கூறும் இவர் ஆறு பேருக்கு வேலைவாய்ப்பும் தந்துள்ளார். மாதாமாதம் தவணைத் தொகையை ஒழுங்காகச் செலுத்துவதாகவும், பொம்மைகளுக்கு நல்ல வரவேற்பு உள்ளதாகவும் கூறுகிறார்.

''மாதம் ரூ. 300க்கு மேல் வருமானம் வருகிறது. ஆதனால் துண்டு விழும் எங்கள் குடும்பச் செலவைச் சமாளிக்கிறேன். வறுமை இல்லாமல் வாழ்கிறேன்'' என்று மன நிறைவோடு கூறும் இவர், கலப்பு மணம் புரிந்து கொண்டவர்.



திரு பி. பால்மணி

## திரு பி. பால்மணி

கடந்த 15 ஆண்டுகளாகத் தையல் தொழிலில் ஈடுபட்டு வருபவர், சைதாப்பேட்டையைச் சேர்ந்த திரு பி. பால்மணி (வயது 33). தொடக்கத்தில் இவர் ஒரு கடையில் கூலி வேலை செய்தார். குறைந்த வருமானமே கிடைத்தது. சொந்தமாகத் தொழில் நடத்த வேண்டும் என்று ஆசை மனத்தில் முளைத்தது. ஆனால், அது செடியாக வளர நாள் ஆனது. ஆம். இந்த இளைஞரின் ஆவலை நிறைவேற்றி வைக்கும் வகையில் ரூ.5000 கடனுதவி தந்தது இந்த வங்கி. கடந்த ஏழு ஆண்டுகளாகச் சொந்தமாகத் தொழில் நடத்தினாலும், இந்த வங்கியில் கடனுதவி பெற்றபின் தான் மூன்று தையல் மிஷின்களை வாங்கினார். மூன்று பேருக்கு வேலை வாய்ப்பும் தந்துள்ளார்.

''முன்பெல்லாம் ஒரு நாளைக்குப் பத்து ரூபாய்தான் கிடைக்கும். இப்போது ஒரு நாளைக்கு ரூ. 30லிருந்து ரூ. 40 வரை வருமானம் கிடைக்கிறது. மாதம் ரூ. 100 தவணைத் தொகை செலுத்தி வருகிறேன். காலப்போக்கில் கடையை விரிவுபடுத்தவும்



திருமதி இந்திரா ராமதுரை

எண்ணியுள்ளேன். அப்போது மேலும் சிலருக்கு வேலைவாய்ப்பு தர முடியும். கடனுதவி பெற்ற பின் தன்னம்பிக்கையும் உற்சாகமும் உண்டாகியிருக்கிறது'' என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார் இவர்.

**திருமதி இந்திரா ராமதுரை**

'கையில் வேலை இருக்கிறது. எனக்கென்ன கவலை!' என்று சொல்லும் வகையில், அன்றாடம் வீட்டுக்குத் தேவைப்படும் பல பொருள்களைத் தயாரித்து கணிசமான வருவாய் ஈட்டி வருகிறார், கே.கே.நகரைச் சேர்ந்த திருமதி இந்திரா ராமதுரை (வயது 50).

இவர் கணவனை இழந்தவர். மகனுக்கோ வேலையில்லை. திருமணமான தன்னுடைய பெண்ணுடன் வாழ்ந்து வரும் இவர், வயதானாலும் வீணே பொழுதைக் கழிக்காமல், தமக்கும், மற்றவர்களுக்கும் பயனுள்ள வகையில் பல பொருள்களைத் தயாரித்து வியாபாரம் செய்து வருகிறார்.

பழக்கலவை, ஊறுகாய், மிளகாய்ப்பொடி, ரசப்பொடி, சோப்புப்பவுடர், பாத்திரம் துலக்கும் பவுடர், முந்திரி பிஸ்கட் மற்றும் பிளாஸ்டிக் ஒயர் பைகள் ஆகியவற்றை இவர் தயாரிக்கிறார்.

முதலில் இவருக்கு இந்த வங்கி 'மிக்சி' ஒன்றைக் கொடுத்தது. பிறகு ரூ. 1000 கடனுதவியாக வழங்கியது. இவர் தயாரிக்கும் பொருள்களில் பழக்கலவையே முக்கிய இடம் வகிக்கிறது. பழக்கலவைக்கு மற்ற பழங்களோடு பப்பாளி மிக அவசியமாம்.

''நான் தயாரிக்கின்ற பொருள்களுக்கு நல்ல வரவேற்பு உள்ளது. எங்கள் பாரதிதாசன் காலனியிலே சுமார் ஆயிரம் வீடுகள் உள்ளன. பெரும்பாலோர் இங்கேயே வந்து பொருள்களை வாங்கிக் கொள்கிறார்கள். கடை விலையைவிடக் குறைவாகவும், தரமாகவும் இருப்பதால் இவற்றுக்கு நல்ல 'கிராக்கி' இருக்கிறது. செலவெல்லாம் போக மாதம் நூறு ரூபாய்க்கு மேல் வருமானம் வருகிறது. என்னுடைய மகள் வேலை செய்வதால், ஓய்வு நேரங்களில் எனக்கு உதவியாக இருக்கிறாள். தக்க சமயத்தில் பாங்க் கொடுத்த கடனுதவியால், வருவாயைப் பெருக்கிக் கொள்ள முடிந்தது'' என்று கூறிவிட்டு, தாம் தயாரித்த பொருள்களைக் கொண்டு வந்து வரிசையாக அடுக்குகிறார் இவர்.



திருமதி எம். சிவசங்கரி

# இப்போது! பேன்மின்த்*

(மோரென்ட்டல் சிட்ரேட்)

# நாக்குப் புழுக்களை அழிக்கிறது. நாக்குப் புழுக்கள் உங்கள் லாபத்தை அழிக்கும் முன்பு



நாக்குப்புழுக்கள்—உங்கள் கண்ணுக்குத் தெரியாத எதிரிகள்.

காலநடையின் வயிற்றிற்குள் நாக்குப் புழுக்கள் வளர்ந்து வாழ்கின்றன. அவை கால்நடையின் ஊட்டச் சத்துக்களை. உண்ணுகின்றன. இதன் பலனாக கால்நடை மெலிந்து, உற்பத்தி குறைந்து விடுகிறது, லாபம் குறைந்து விடுகிறது.

மேய்ச்சல் தளத்திலே கால்நடைகள் மேயும்போது நாக்குப் புழுக்கள் தொற்றிப் பரவுகின்றன. அடிக்கடி புழு நோய் வருவதால், நிரந்தரமான, புழுவே அற்ற கால்நடைகள் இருக்க வாய்ப்பே இல்லை எனலாம். ஆகவேதான், கால்நடை மருத்துவர்கள், 3-4 மாதங்களுக்கொரு முறைப்புழுக்களை அப்புறப்படுத்த வேண்டுமென்று சிபாரிசு செய்கின்றனர்.

பேன்மின்த் நாக்குப்புழுக்களை அழிக்கிறது நாக்குப்புழுக்கள் உங்கள் லாபத்தை அழிக்கும் முன்பாக.

பேன்மின்த், உலகெங்கிலும் கால்நடைகளைத்தாக்கும் நாக்குப் புழுக்களை ஒழிக்கிறது.

பேன்மின்த், பாதுகாப்பானது பலகீனமான சோர்வான, கால் நடைகளுக்கும், சினையுள்ள மற்றும் கன்று ஈன்ற கால்நடைக்கும். இதர சில புழுக்கொல்லிகளை போல் இது, பால் நிறத்தில் மாற்றமோ, தீய விளைவுகளோ ஏற்படுத்தாது. பேன்மின்த் கொடுத்த பின்பும், பாலினைப் பயன்படுத்தலாம்.

இப்போது, பேன்மின்த் எளிதான வசதியான புழுக்கொல்லி.

உபயோகிக்க எளிதானது பேன்மின்த்—காரணம், உடனடி உபயோகத்திற்கான கரைசல் மாத்திரை, உருண்டை ஆகிய வடிவங்களிலே கிடைக்கின்றது.

கால்நடை மருத்துவரிடம் ஆலோசனை பெறுங்கள்.

கரைசல் கிடைக்கிறது 100 மி.லி, 500 மி.லி. மற்றும் 4.5 லிட்டர் பேக்குகளில்

சிறிய கால்நடைக்கு மாத்திரைகள்.



பெரிய கால்நடைக்கு உருண்டைகள்.

PF 2169

ஒப்பற்ற **பேன்மின்த்**

புழுக்களை அழித்திடும் ஆரோக்கியம் அளித்திடும்

*யு.எஸ்.ஏ. :பைஸர் இன்கார்ப்பரேட்டடின் ட்ரேட்மார்க்

pfizer

கேட்பதன் பேரில் மேலும் தகவல்கள் கிடைத்திடும்.



திரு மீரான் மொய்தீன்

## இந்த வங்கி...

* கடந்த ஆண்டு புயல் மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சுமார் ஒரு இலட்சம் உறுப்பினர்களுக்கு ரூ. 4.00 கோடி வரை வங்கியின் மூலம் கடன் வழங்கப்பட்டது. இது தவிர, மக்களின் எதிர்பாராத செலவிற்கு வெள்ளி அணிகலன்களுக்கு ஒரு நபருக்கு ரூ. 250 வரை கடன் வழங்கப்படுகிறது. இதற்காக ரூ. 10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

* சென்னை மத்திய கூட்டுறவு வங்கியில் முத்தாரம், செல்வக் களஞ்சியம், கற்பகம், ஓய்வு காலப் பென்சன் போன்ற பல்வேறு வைப்புத் திட்டங்கள் உள்ளன. இதைத்தவிர, தற்போது கலைமகள் கல்வித் திட்டம், ஒரு இலட்சம் வைப்புத் திட்டம் போன்ற நல்ல திட்டங்களை ஏற்படுத்தி மக்களிடையே சேமிக்கும் பழக்கத்தை வளர்த்து வருகிறது.

* வேலையற்றோர், ஆதரவற்றோர், வாழ வழியின்றி வாடும் விதவைகள் முதலானோருக்குத் தையற் பயிற்சி பெற இந்தியத் தையற் கருவி கம்பெனி மற்றும் உஷா நிறுவனம் மூலம் இலவசப் பயிற்சிக்கு இவ்வங்கி ஏற்பாடு செய்து, வெற்றிகரமாகப் பயிற்சி முடித்து வருவோர்க்கு வாழ வகை செய்ய ரூ. 7,000 வரை கடன் உதவி தருகிறது.

### திருமதி எம். சிவசங்கரி

மூங்கில் பத்தைகளைக் கொணடு அழகிய மேசை மின் விளக்குகளைத தயாரிக்கிறார் கே.கே. நகரைச் சேர்ந்த திருமதி எம்.சிவசங்கரி (வயது 35). இவரது கைவண்ணத்துக்கு மூலப் பொருள் மூங்கிலால் ஆன பாய் தான் முக்கியம். இது கேரளாவிலிருந்து தருவிக்கப்படுகிறது. சிறிய பெரிய அளவுகளில் இந்த மேசை விளக்குகள் பார்க்க அழகாய்க் காட்சியளிக்கின்றன. இந்த மேசை விளக்குகள் காதி கிராப்டுகளிலும், காதி பவனிலும் விற்பனைக்குக் கிடைக்கின்றன.

''இந்தத் தொழிலை என் சகோதரியிடமிருந்து நான் கற்றுக் கொண்டேன். ஒரு மாதத்துக்கு நூறு விளக்குகளைத் தயாரிக்கிறேன். ஒரு விளக்கின் விலை ரூ.20. எங்கள் காலனியில் உள்ளவர்களும் திருமணம், பிறந்த நாள் போன்ற விழாக்களில் அன்பளிப்பாகக் கொடுப்பதற்காக இங்கே வந்து வாங்கிக் கொள்கிறார்கள்.

''எம்.சி.சி. பாங்க் எனக்கு ஐயாயிரம் ரூபாய் கடன் தந்தது. மாதம் ரூ.120 தவணை செலுத்துகிறேன். மாதம் ரூ. 400 வருமானம் கிடைக்கிறது'' என்று கூறும் இவர் பள்ளி இறுதி வகுப்பு வரை படித்துள்ளார். அது மட்டுமல்ல, இவர் ஒரு ஓமியோபதி டாக்டரும் கூட! இவருக்குத் தையல் தொழிலும் தெரியும்.

''வேலை கிடைக்கவில்லை... வேலைக்காகக் காத்திராமல் வேலையே என்னைத் தேடிவரும்படி சுயதொழிலில் இறங்கிவிட்டேன்!'' என்று சிரித்துக் கொண்டே கூறும் இவர், மூன்று தையல் மிஷின்களை வாங்கியிருக்கிறார். ஒரு பக்கம் அந்தத் தொழிலும் நடக்கிறது. நான்கு பேர்களுக்கு வேலைவாய்ப்பும் தரப்பட்டிருக்கிறது. 'வங்கியின் உதவியால் தொழில் நஷ்டமில்லாமல் நடந்து கொண்டிருக்கிறது' என்று கூறும் இவருக்கு இருப்பது ஒரே ஒரு மகள்.

### திரு மீரான் மொய்தீன்

வீனஸ் ஸ்டுடியோவில் உடைகள் தைக்கும் தொழிலாளியாக அதாவது 13வது வயதில் வாழ்க்கையைத் தொடங்கியவர், வடபழனியைச் சேர்ந்த திரு மீரான் மொய்தீன்(வயது 60). ஸ்டுடியோ மூடப்பட்டதால் வேலை இழந்த இவர் சொந்தமாகக் கடை வைத்தார். அப்போதும் குறைந்த வருமானமே கிடைத்தது. மேற்கொண்டு தையல் மிஷின்களை வாங்கவோ பணமில்லாத சூழ்நிலை. கடந்த ஆண்டு எம்.சி.சி. வங்கி இவருக்கு ரூ. 3003 கடனுதவி வழங்கியது. இப்போது மேற்கொண்டு ஒரு தையல் மிஷின் வாங்கியுள்ளார். தனக்கு உதவியாகத் தன் மகனையும், ஒரு பையனையும் வைத்துள்ளார். ஒரு நாளைக்குச் சுமார் முப்பது ரூபாய் வருமானம் கிடைக்கிறது என்று கூறும் இந்த முதியவர், கடையை விரிவுபடுத்தவும் திட்டமிட்டுள்ளார்.

இவ்வாறு, குறைந்த வருமானம் உள்ளோர் - சுயதொழில் செய்ய விருப்பமுள்ளோர் தன்னம்பிகையுடன் தலை நிமிர்ந்து வாழ்ந்திட வழிவகை செய்து, அவர்கள் வாழ்க்கையில் மறுமலர்ச்சி தோன்றவும் உதவி வருகிறது சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி.

— பி. வி. கிரி

# மெத்த வளருது சுற்றுலாத் துறை



புறநானூற்றுக் காலத்திலேயே 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பரந்த சுற்றுலா மனப்பான்மை நம்மிடையே இருந்திருக்கிறது. அந்தக் குறிக்கோள்தான் இன்று சுற்றுலாவாக மலர்ந்து உலகத்திலேயே எண்ணைத் தொழிலுக்கு அடுத்து, இரண்டாவது பெருந்தொழிலாக மலர்ந்து உள்ளது. சுற்றுலா வளர்ச்சியினால் கிடைக்கக்கூடிய பலன் இன்று யாவராலும் உணரப்பட்டுள்ளது. எனவேதான், உலக நாடுகள் யாவும் சுற்றுலா வளர்ச்சியில் தனிக்கவனம் செலுத்தி வருகின்றன. குறிப்பாக வளர்ந்து வரும் நாடுகளும், சிறிய நாடுகளும் தங்களது பொருளாதார மேம்பாட்டிற்குச் சுற்றுலா வளர்ச்சியைப் பெரிதும் நம்பியுள்ளன.

ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு வகையில் சிறப்புப் பெற்றிருந்தாலும் இந்தியா அதனின்றும் பல்வகையிலும் மாறுபட்டது. உலகிலுள்ள சுற்றுலாச் சிறப்பு அம்சங்கள் யாவும் நமது நாட்டில் ஒருங்கே அமைந்துள்ளன. அதேபோல் இந்தியாவின் பிற பகுதிகளில் உள்ள சிறப்பு அம்சங்கள் யாவும் தமிழகத்தில் நிறைந்துள்ளன.

''கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்தகுடி'' என்ற சிறப்பு தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் உண்டு. இத்தகு சிறப்புள்ள தமிழகத்தில் கவின்மிக்க கலைகள், பாரம்பரியம் மிக்க கலாச்சாரம், வரலாற்றை எடுத்தியம்பும் தொன்மையான சின்னங்கள், நெடிதுயர்ந்து நிற்கும் கலையிற் சிறந்த கோயில்கள், அதை ஒட்டியே வளர்ந்த நாட்டியம், நாடகம், களம் பலவற்றைச் சந்தித்த கோட்டைகள், நீண்ட மணற்பரப்புடைய கடற்கரை, அதனையொட்டி அமைந்துள்ள கடற்கரை வளாகங்கள், மருத்துவப் பயன் நிறைந்த அருவிகள், மிதமான தட்ப வெப்பமுடைய மலைவாழ் இடங்கள் மற்றும் மயில்களுக்கென்று விராலிமலை, புலிகளுக்கு என்று முண்டந்துறை, பறவைகளுக்கு என்று வேடந்தாங்கல், பல்வகை விலங்குகளுக்கென முதுமலை- ஆனைமலை எனத் தமிழகத்தில், சுற்றுலாச் சிறப்பு இருப்பதைப்போல இந்தியாவில் வேறெந்த மாநிலத்திலும் இல்லையென்றே கூறலாம்.

சுற்றுலா மேம்பாட்டில் மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டியது சுற்றுலாப் பயணிகளுக்கான அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவது ஆகும். தேவையான அடிப்படை வசதிகள் இங்கே இருந்தால்தான் அதிக அளவு சுற்றுலாப்பயணிகள் வருவார்கள்.

சுற்றுலா வளத்துக்கு உதவும் பல்வேறு துறைகள் அனைத்தையும் கருத்திற்கொண்டு, சுற்றுலாவிற்குரிய அடிப்படை வசதிகளை மேம்படுத்த கடந்த பத்தாண்டுகளில் அரசு முனைப்பான கவனம் செலுத்தி வருகிறது. இம்மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ற வாய்ப்பை சுற்றுலா பயன்படுத்துகிறது.

1975-76-ஆம் ஆண்டில் சுற்றுலா மேம்பாட்டிற்கான வரவு செலவு திட்ட முதலீடு ரூபாய் 22.70 இலட்சமாக இருந்தது. 1983-84-ஆம் ஆண்டில் ரூபாய் 180 இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

1985-ஆம் ஆண்டு தமிழகத்தில் உள்நாட்டு சுற்றுலாப் பயணம் 1984-ஐ விட 30.4 சத வீதம் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1985-ல் இந்தியாவிற்கு வருகை

புரிந்துள்ள வெளிநாட்டுப் பயணிகள் 8,36,908 என்னும் எண்ணிக்கை கடந்த ஆண்டை விட 0.2 சதவீதம் அதிகரித்துள்ளது எனவும் புள்ளிவிவரம் கூறுகிறது. இவர்களில் தமிழ் நாட்டிற்கு 29.3 சதவீதம் வருகை தந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த வருகை 1984-ஆம் ஆண்டை விட 2.2 சதவீதம், 1985-ல் அதிகரித்துள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. தமிழகம் நோக்கி அதிக அளவில் சுற்றுலாப்பயணிகள் வருவதால் அவர்களுக்குத் தேவையான வசதி வாய்ப்புகளை இம்மாநிலத்தில் தரவேண்டி உள்ளது.

தமிழகத்தின் சுற்றுலா வளர்ச்சி ஒருங்கிணைந்த முறையில் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு அனைத்துலகப் புகழ் பெற்ற சுற்றுலா மையங்களான மாமல்லபுரம், இராமேஸ்வரம், கன்னியாகுமரி, உதகமண்டலம் ஆகிய இடங்களுக்கு வல்லுநர்களைக் கொண்டு நீண்டகால நோக்கில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள முதன் முதலாகப் பெருந்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அதோடு மைய அரசு கேட்டுக் கொண்டபடி பயண - வட்டங்கள் அடிப்படையில் தமிழகம் தழுவிய ஒருங்கிணைந்த பெருந்திட்டம் ஒன்று 148 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இப் பெருந்திட்டங்களுக்குப் பெரிய அளவில் நிதி உதவி தரும்படியும் அனைத்து நாட்டு நிதி நிறுவனங்களிலிருந்தும் தக்க நிதி உதவி பெற்று உதவுமாறும், இந்திய அரசிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. மேற்குறிப்பிட்ட நான்கு மையங்களின் வளர்ச்சிக்கு உலக வங்கி போன்ற நிறுவனங்களிடமிருந்து ரூ. 28 கோடி நிதி உதவி பெற்றுத் தந்து உதவுமாறும், இந்திய அரசிடம் கோரப்பட்டது. ஆனால் இந்திய அரசின் சுற்றுலாத் துறை தமது நிதிக் குறைபாட்டின் காரணமாக இவ்வேண்டுகோளுக்கு இசைய இயலவில்லையெனவும், உலக வங்கியின் கோட்பாடுகளுக்கும், நிதி வழங்கும் முறைகளுக்கும் பொருந்தும் வண்ணம் நமது வேண்டுகோள்கள் அமையவில்லை ஆகையால் அங்கிருந்தும் நிதிபெற இயலாது எனவும் தெரிவித்தது.

ஆயினும் நமது சுற்றுலாத் துறையின் இடையறாத நன்முயற்சியின் விளைவாக இதுகாறும் இல்லாத ஒரு புதுப்பலனாக மைய அரசிடமிருந்து முதன் முதலாக இம்மாநிலத்திற்கு மாமல்லபுரத்தில் நிலச்சீரமைப்பு (Land Scaping) செய்ய ரூ. 15.32 இலட்சமும், சென்னைக்கருகேயுள்ள முத்துக்காட்டில் புனல் விளையாட்டு வளர்ச்சிக்கென ரூ. 6.39 இலட்சங்களுமாக மொத்தம் ரூபாய் 21.71 இலட்சம் நிதி உதவி கிட்டியுள்ளது. இந்நிதியாண்டிலேயே தமிழகத்தில் மேலும் பல புதிய முயற்சிகளுக்கு இந்தியப் பேரரசின் நிதியுதவி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் கன்னியாகுமரியிலிருந்து விவேகானந்தர் நினைவாலயத்திற்குச் செல்ல ரூ. 20 இலட்சம் மதிப்பீட்டில் புதிய விசைப்படகு வாங்கும் திட்டத்திற்கு நிதியுதவி அளிப்பதற்குக் கொள்கையளவில் ஏற்றுள்ளது. காஞ்சிபுரத்தில் பல்லவபுரம் என்ற வரலாற்றுச் சித்திர அமைப்புக் கட்ட ரூ.20 இலட்சம் தரவும் முன் வந்துள்ளார்கள்.





1984-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுவின் ஒப்புதல் பெற்ற திட்டக்குழுவின் 7-வது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது:

''இந்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்கான வளங்கள பெருமளவில் உள்ளன. சுற்றுலாவிற்கு ஒரு 'தொழிலுக்கு' உரிய அந்தஸ்து தரப்பட வேண்டும். சுற்றுலா வளர்ச்சியில் தனியார் துறை முதலீடுகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். அடிப்படை வசதிகளைப் பெருக்குவதில், குறிப்பாகப் பொதுத்துறை முதலீடுகள் பயன்படுத்தப்படவேண்டும்.''

—இந்தப் பரிந்துரையின் அடிப்படையில் சுற்றுலா மற்றும் அத்துடன் இணைந்த பிற செயல்களுக்கும், 'தொழிலுக்கு' உரிய அந்தஸ்தை வழங்கிட தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது. அரசு எடுத்த இந்த முடிவின் பயனால் தொழில் துறையில் வழங்கப்படும் சலுகைகள், ஊக்குவிப்புகள் மற்ற பயன்கள் சுற்றுலாவிற்கும், சுற்றுலா சார்ந்த பிறசெயல்களுக்கும் கிடைத்திடும் வாய்ப்புள்ளது. அரசின் சம்பந்தப்பட்ட பிற துறைகளுடன் கலந்து ஆலோசித்து இது குறித்த விவரங்களை சுற்றுலாத்துறை தீவிரமாக ஆராாய்ந்து வருகிறது.

மாமல்லபுரம் கடற்கரையிலுள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் உள்ள வளாகத்தில் அதிக அளவில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வண்ணம் அனைத்து நாட்டுத் தரத்திற்கு ஏற்ப வசதிகளைப் பெருக்கி உயர்த்தப்பட உள்ளது. சென்னையிலிருந்து மாமல்லபுரம் செல்லும் வழியில் உள்ள முத்துக்காட்டிலும், திருவிடந்தையிலும் உலக அளவில் உள்ள சிறந்த சுற்றுலா மையங்களில் ஒன்றாக அமைந்திடும் வகையில் புதிய அனைத்து நாட்டு சுற்றுலா ஓய்வு இடங்கள் ஏற்படுத்திடத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

சென்னையில் வள்ளுவர் கோட்டத்திற்கருகில் தமிழ்ப்பண்பாட்டின் பல கூறுகளைச் சித்திரிக்கும் வண்ணம் 'சர்வதேசச் சுற்றுலா மையம்' அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை பிராட்வேயிலுள்ள சட்டக்கல்லூரி பழைய விடுதி இருக்குமிடத்தில் குறைந்த வருவாய்ப் பிரிவு சுற்றுலாப் பயணிகள் தேவையை ஈடு செய்ய புதிய ஓட்டல்வளாகம் ஒன்று அமைத்திடத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. சென்னை வேப்பேரியில் கண்ணப்பர் திடல் அருகிலுள்ள இடத்தில் நட்சத்திர ஓட்டல் ஒன்று கட்டப்படும். அதன் அருகிலுள்ள பழைய மிருகக்காட்சிச் சாலை அமைந்த இடம் மனமகிழ் பூங்காவாக மேம்படுத்தப்படும். இது ஓட்டல் வளாகத்தில் ஒரு பகுதியாக அமையும்.

இத்தகைய பொழுது போக்கு வசதிகளால் வடசென்னையில் வாழும் மக்கள் பெரிதும் பயன்பெறுவார்கள். சுற்றுலாத் துறையில் தீவிர பரிசீலனையில் உள்ள இத் திட்டங்கள் வெளிநாடு வாழ் இந்தியர்களுடன் இணைந்து செயல்படுத்தப்பட உள்ளன. இவற்றிற்கான திட்ட மதிப்பீடு சுமார் ரூ.40 கோடியாகும். இத்திட்டங்கள் நிறைவு பெறும்போது இன்னும் அதிக அளவில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தமிழகம் நோக்கி வருவார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது.

முதலீடுகள் அதிகமின்றி, குறைந்த முயற்சியில் அதிக பயனைத் தந்து ஆண்டுக்கு சுமார் ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அந்நியச் செலவாணி ஈட்டித்தரும் சுற்றுலாத் துறைக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு அதிக நிதி ஒதுக்கீடு செய்து தர வேண்டுமென்று தமிழ்நாடு அரசு கோரி வருகின்றது. மேலும் சுற்றுலாவை ஒரு தொழிலாக அறிவித்ததற்கு இணங்க அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியது இன்றியமையாததாகும்.

பெருந்திட்டங்களில் உள்ள பணிகளை ஏற்றுச் செயல்படுத்தப்போதுமான அளவு நிதி உதவி வழங்கிட மத்திய அரசு முன்வர வேண்டுமென்று கடந்த ஏழு எட்டு ஆண்டுகளாய்க் கோரி வந்துள்ளோம். ஆனால் இந்த ஆண்டுதான் மத்திய அரசு கன்னியாகுமரியில் கடற்கரைக் குடில்கள் கட்டுவதற்கும், காஞ்சிபுரத்தில் தங்கும் இடம் அமைப்பதற்கும், இராமேஸ்வரத்தில் சுற்றுலா வரவேற்பு மையம் ஏற்படுத்துவதற்கும், மாமல்லபுரத்தில் நிலச்சீரமைப்பு செய்வதற்கும் சம்மதித்து மற்றும் சில சில்லரை இனங்களையும் ஏற்றுக் கொண்டு ரூ. 170 இலட்சம் நிதியுதவி வழங்கிட ஒத்துக் கொண்டுள்ளது.

கிடைத்துள்ளது மிகக் குறைவாக இருந்தாலும் மாநில அரசு இதற்கென மகிழ்ச்சி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது.

சுற்றுலா வளர்ச்சிக்குத் தமிழக அரசு இரு வழிகளில் உதவுகிறது. ஒன்று சுற்றுலா

வளர்ச்சிப் பணிகளைப்பல துறைகள் மூலம் மேற்கொள்வது. மற்றொன்று, முக்கியமாகத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து தருவது. தமிழ்நாடு சுற்றுலாவளர்ச்சிக் கழகம் தனது திட்டப்பணிகளைச் செவ்வனே நிறைவேற்ற சுற்றுலாத் துறை அதற்குப் பங்கு மூலதனமும், கடன் உதவியும் வழங்குவதுடன் பல திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பினையும்ஒப்படைத்து வந்துள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1971ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்குமிட வசதி செய்து கொடுப்பதிலும் உல்லாசப் பேருந்துகளில் சுற்றுலாப் பயணங்கள் நடத்துவதிலும் இக் கழகம் ஆரம்பத்தில் கவனம் செலுத்தி வந்தது. ஆண்டுகள் பலவாக இக்கழகம் விரைந்து முன்னேறி இதன் பணி இன்று பல்கிப் பெருகி இருக்கிறது. தமிழ்நாட்டைக் காண வருகின்ற சுற்றுலாப்பயணிகள் இந்தக் கழகம் அளிக்கும் போக்குவரத்து வசதிகளையும், தங்குமிட வசதிகளையும் பாராட்டியுள்ளனர். இக்கழகத்தின் ஆண்டு வரவு செலவு இப்போது சுமார் ரூ. 5 கோடிக்கு உயர்ந்துள்ளது.

இக்கழகத்தில் உள்ள போக்குவரத்துப்பிரிவிலுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை வருமாறு:

குளுமை வசதி கொண்ட பேருந்துகள் 3-சொகுசுப் பேருந்துகள் 15-சிறு பேருந்துகள்-3, குளுமை வசதிகொண்ட அயல்நாட்டுக் கார்கள் 5, சுற்றுலா வாடகைக் கார்கள் 3.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏழு நாட்கள் தென்னிந்திய சுற்றுலா; ஏழு நாட்கள் தமிழ்நாடு சுற்றுலா, அன்றாட திருப்பதி சுற்றுலா; அன்றாட காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், மாமல்லபுரம், சுற்றுலா; அன்றாட சென்னை நகரச் சுற்றுலா; திருவேற்காடு, மாங்காடு, மேல்மருவத்தூர் சுற்றுலா, ஆறுபடை வீடுகள் சுற்றுலா போன்ற பல்வகைச் சுற்றுலாக்களை நடத்தி வருகிறது. சுற்றுலாப் பயணிகளிடையே இச் சுற்றுலாக்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது.

சுற்றுலாப் பயணிகளுக்குப் பொருத்தமாக சிறு நினைவுப் பரிசுகள், வண்ணப்படங்கள், அஞ்சல் பட அட்டைகள், சுற்றுலா தழுவிய ஓவியங்கள் இவற்றினைத் தொடர்ந்து நினைவுப் பொருள் பகுதி தயாரித்து வருகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் வெளியீடு, அஞ்சல்பட அட்டைகளும், தமிழ்நாடு சுற்றுலா வரைபடமும், சுற்றுலாப் பயணிகளால் பெரிதும் விரும்பி வாங்கப்படுகின்றன.

ஓட்டல் வசதி: நட்சத்திர ஓட்டல்கள் கோயம்புத்தூர், மதுரை ஆகிய ஊர்களிலும், ஓட்டல்கள் சிதம்பரம், மதுரை, கன்னியாகுமரி, ஒகனேக்கல், இராமேஸ்வரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருச்செந்தூர், உதகமண்டலம், கொடைக்கானல், ஏர்க்காடு ஆகிய ஊர்களிலும்-திறந்தவெளிஉணவகம் சென்னையிலும், பயண வழி இல்லங்கள் இராணிப்பேட்டை, உளுந்தூர்பேட்டை, கிருஷ்ணகிரி போன்ற இடங்களிலும், கடற்கரை ஓய்வு வளாகங்கள் மாமல்லபுரம், கன்னியாகுமரி ஆகிய ஊர்களிலும், படகு இல்லங்கள் உதகமண்



இளைஞர் விடுதி

டலம், ஏர்க்காடு, முத்துக்காடு, பிச்சாவரம் இடங்களிலும், தொலைநோக்காடி இல்லங்கள் கொடைக்கானல், உதகமண்டலம், ஏர்க்காடு மலைகளிலும், இளைஞர் இல்லங்கள் ஒகனேக்கல், முதுமலை, கன்னியாகுமரி, மண்டபம், இராமேஸ்வரம், பிச்சாவரம், உதகமண்டலம், ஏர்க்காடு, கொடைக்கானல் போன்ற ஊர்களிலும், முகாமிடம் மாமல்லபுரத்திலும் உள்ளன.

ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு: தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஊழியர்களின் ஊதியம் உயர்த்தப்பட்டுள்ளது. இதன் பயனாகக் குறைந்த அளவு ஒருவருக்கு ரூ. 50ம் அதிக அளவு ரூ.100ம் கூடுதலாகக் கிடைக்கும் வகையில் ஊதிய விகிதங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இந்த ஊதிய உயர்வால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு நிதியாண்டு ஒன்றிற்கு ரூ. 5.50 இலட்சம் கூடுதல் செலவினம் ஏற்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறை ஊழியர்க்கு ஊதிய உயர்வு மட்டுமின்றிப் புதுமையான ஊக்குவிப்புத் திட்டமொன்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. லாபத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு ஊக்க போனஸ் அளிப்பது என்பதை மாற்றி அமைத்து, மொத்த விற்பனையின் பேரிலேயே ஊக்க போனஸ் அளிக்கும் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த முறையினால் நிதியாண்டு ஒன்றிற்கு ஒரு இலட்சம் ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்பட்டுள்ளது. நேரடியாக, உடனடியாகக் கிடைக்கும் இந்த ஊக்குவிப்புத்தொகை அனைவரும் வரவேற்பதாகவும் அமைந்தது.

தமிழ்நாட்டு மக்களிடையே சுற்றுலா உணர்வு பெரிதும் வளர்ந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது ஒன்றாகும். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு கடந்த ஒன்பது ஆண்டுகளில் அரசு, சுற்றுலா வளர்ச்சிக்குப் பெரும் அளவு ஊக்கமளித்து வருகிறது. சுற்றுலாத் தலங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி, சுற்றுலாப் பயணிகள் இத்தலங்களைக் கண்டு களிப்பதற்கு வழிவகைகளைச் செய்கிறது. சுற்றுலாத் தலங்களில் வாழும் மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு இம்முயற்சிகள் பெரிதும் உதவுகின்றன. சுற்றுப்புறச்சூழ்நிலையை எந்த விதத்திலும் பாதிக்காமலும் இயற்கை எழிலைப் பாதுகாக்கும் வகையிலும், சுற்றுலாத்துறை தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# மாவட்டச் செய்திகள்

## நீலகிரி மாவட்டம்

நீலகிரி மாவட்டத்தில் சுவீடன் நாட்டு உதவியுடன் சமூக வனவியல் திட்டத்தின் கீழ் திருப்பூர் சமூக வனவியல் கோட்டத்தால் 1982-83-ஆம் ஆண்டிலிருந்து 1985-86-ஆம் ஆண்டு வரை 1080 ஏக்கர் பரப்பளவுள்ள விவசாயத்திற்கு அருகதையற்ற தரிசு நிலங்களில் மரச்சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதுவரை 17.5 கி. மீட்டர் நீளத்திற்குச் சாலை ஓரங்களில் இயற்கை எழில் கொஞ்சும் அலங்கார மரங்கள் நடப்பட்டுள்ளன. இதே போல 17.5 கி.மீ. நீளத்திற்கு இருப்புப் பாதை ஓரத்தில் அழகு தரும் மரங்கள் நடப்பட்டுள்ளன.

சிறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற மலைசாதி மக்களுக்கு அவர்கள் தங்கள் நிலங்கள் மற்றும் வீடுகளில் வளர்ப்பதற்கென்று16,35,000 மரக்கன்றுகள் இலவசமாகவும் மற்றும் மானிய விலையிலும் தரப்பட்டுள்ளன. திருப்பூர் சமூக வனவியல் கோட்டத்தால் 1982-83-ஆம் ஆண்டிலிருந்து 1985-86-ஆம் ஆண்டு வரை 19,23,663.30 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

1986-87-ஆம் ஆண்டில் சுமார் 9 இலட்சம் ரூபாய் செலவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 100 எக்டேர் நிலப் பரப்பில் மலைத் தோட்டங்கள் எழுப்பவும், 6 இலட்சம் மரக்கன்றுகள் மானிய விலையில் கொடுக்கத் திட்டமிடப்பட்டு ஆக்கப்பணிகள் பூர்த்தி அடையும் நிலையில் உள்ளன. இது தவிர இந்த ஆண்டு, அலங்கார வகைக்கென்று 20,000தொட்டிச் செடிகள் பொதுமக்கள் விநியோகத்திற்கென உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனைக்குத் தயார் நிலையில் உள்ளன.

பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர் தங்களின் விவசாயத்திற்குப் பயன்படாத நிலங்களில் மரப்பயிரை ஊக்குவிப்பது, அதன் மூலம் அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்துவது, கிராமத்திற்குத் தேவையான சிறு மரம் சார்ந்த பொருட்கள் நிரந்தரமாகக் கிடைக்க உதவுதல், காடுகளை உருவாக்குதல், பராமரித்தல், பாதுகாத்தல், போன்றவற்றால் ஏற்படும் வேலைவாய்ப்புகள் தொடர்ந்து பல்லாண்டுகளுக்குக் கிடைக்க வழி வகைகள் செய்வதுடன் அதன் மூலமாக அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதும் சமூக வனவியல் திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். எனவே, சமூக வனவியல் திட்டத்தின் கீழ் நடத்தப்படுகின்ற ஆக்கப்பணிகளில் பங்கு கொண்டு பயன்பெறுவது நமது கடமையாகும்.

**வி. ஜி. பிரசாத்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர், நீலகிரி மாவட்டம்.**

## பெரியார் மாவட்டம்

கடந்த ஜூலை மாதத்தில் கிராமிய இளம்புழு வளர்ப்பு மையத்தின் மூலமாக 2850 முட்டைத் தொகுதிகள் இரண்டாவது பருவம் முடிய வளர்த்து இளம் புழுவாகப் பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. அரசு பட்டுக்கூடு அங்காடியின் மூலமாக 699.600 கிலோ பட்டுக்கூடு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. எட்டு நூற்பகத்தின் மூலம் 56 கிலோ கச்சாப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

தாராபுரம் கிராமிய பட்டு நூற்பகத்திலிருந்து 36 நபர்களுக்குப் பட்டு நூல் எடுக்கும் பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது. நடப்புத் திட்ட ஆண்டில் 825 ஏக்கர் புதிய நடவின்கீழ்கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது. பட்டு வளர்ப்பதற்கும் 100 நபர்களுக்கு மட்டும் பட்டு நூல் பயிற்சியும் அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 250 விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டத்தின் கீழ்ரூ.5.00 லட்சம் வங்கி மூலம் கடன் வழங்கவும், இத்துறையின் கீழ் ரூ.1.25 லட்சம் மானியம் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் பிரதமரின் 20 அம்சத் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 50 தாழ்த்தப்பட்ட குடும்பங்கள் பட்டு வளர்ச்சித் துறையில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

நடப்பாண்டு 6 லட்சம் முட்டைத்தொகுதிகள் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. சுமார் 2.50 லட்சம்கிலோகிராம் பட்டுக்கூடுகள் உற்பத்தி ஆகுமென எதிர்பார்க்கப்படுகிறது. தனியார் மற்றும் அரசுத்துறை நூற்பகங்களின் மூலம் நடப்பாண்டு 20,000 கிலோ கச்சாப்பட்டு உற்பத்தி செய்யப்படும், எனத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுவரை சுமார் 770 ஏக்கர் பரப்பில் 845 விவசாயிகள் முசுக்கொட்டைசாகுபடிசெய்துள்ளார்கள். நடப்பாண்டில் மேலும் 825 ஏக்கரில் நடவு மேற்கொள்ள ஏற்பாடுகள் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே அதன் மூலம் நடப்பாண்டு முடிவில் சுமார் 1600ஏக்கர் பரப்பளவுக்கு முசுக்கொட்டைச் செடி சாகுபடியில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பெரியார் மாவட்டத்தில் 9 மற்றும் 10வது வகுப்புகளில் படிக்கும் தகுதிவாய்ந்த பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் இன மாணவர்களுக்குப் பள்ளிப் படிப்பிற்கான கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. பயனடைந்த மாணவர்கள் எண்ணிக்கை 2025.

இராயர்பாளையம், வேடர் நகர் ஆகிய இரு இடங்களில்



உள்ள அரசு பிற்படுத்தப்பட்டோர் நல சீர் மரபினர் பள்ளிகளில் படிக்கும் சீர் மரபினர் இன மாணவர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள்வழங்கப்பட்டுள்ளன. பயனடைந்தமாணவர்கள் மொத்தம் 436. இராயர்பாளையம் 131 பேர். வேடர்நகர் 305 பேர்.

இலவச சீருடைகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 2 சீர் மரபினர் பள்ளிகளிலும் மற்றும் 20 பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியருக்குப் பள்ளி திறக்கப்பட்டவுடன் சீருடைகள் வழங்கப்பட்டு விட்டன.

பயனடைந்தவர்கள் மொத்தம் 1753. பள்ளிகளில் 693 பேர், விடுதிகளில் 1060 பேர்.

நடப்பு நிதி ஆண்டிலிருந்து ஈரோடு கல்லூரி மாணவர் விடுதிக்குப்பழைய விறகு அடுப்புக்குப் பதிலாக நவீன சமையல் எரிவாயு சிலிண்டர் வழங்கப்படவுள்ளது.

**—கா. சம்சுதீன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெரியார் மாவட்டம்.**

## அண்ணா மாவட்டம்

உருளைக்கிழங்கு, பேரி, பிளம், காபி, வாழை போன்றவை பயிராகும் கொடைக்கானல் மலைப் பகுதி சரிவுகளில் அண்மைக் காலமாக அதிக அளவில் தேயிலையின் மணம் வீசத் தொடங்கியுள்ளது. இம்மலைப் பகுதி விரைவில் பசுமைத் தேயிலைத் தோட்டங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும். இது வரை நீலகிரி மலைப் பகுதிகளில் மட்டும் பயிராக்கப்பட்டு வந்த தேயிலை கொடைக்கானலில் பயிராகும் என்பது அறியப்பட்டு அதனைப் பெருமளவில் பயிராக்கும் திட்டம் முடிவாக்கப்பட்டுள்ளது. அரசுத் துறையின் சார்பில் இம்மாநிலத்தில் உருவாகும் இரண்டாவது தேயிலைத் தோட்டமாகும் இது.

அண்ணா மாவட்டம், கொடைக்கானலில் ரூ. 258.55 இலட்சம் செலவில் ஒரு தொழியல் கூட்டுறவுத் தேயிலைத் தோட்டம் அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்தோட்டம் அமைப்பதற்காக விவசாயிகள் மற்றும் நிலம் தேர்ந்தெடுத்தல், பங்குத் தொகைகளைச் சேகரித்து சொசைட்டி உறுப்பினர்களைச் சேர்த்தல் போன்ற பூர்வாங்க வேலைகளைச் செய்வதற்காகத் தொழில் மற்றும் வணிகத் துறை பணிக்கப்பட்டுள்ளது.

கிடக்கும் நிலம் மற்றும் ஏனைய பொருள் பற்றிய விரிவான ஆய்வுக்குப்பின் கொடைக்கானல் வட்டத்திலுள்ள கூக்கல் மற்றும் மன்னவனூர் கிராமங்களில் தற்போது காலியாக உள்ள 2000 ஏக்கர் நிலம் தேர்தெடுக்கப்பட்டுள்ளது. இதில் முதல் கட்டமாக 1000 ஏக்கர் நிலப்பரப்பு எடுத்துக் கொள்ளப்படும். இதில் 900 ஏக்கர் தேயிலை பயிரிடுவதற்காகவும் 100 ஏக்கர் தொழிற்சாலைக் கட்டடம், சாலை அமைப்பு மற்றும் அடிப்படைத் தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்படும். உத்தேசிக்கப்பட்ட தேயிலைத் தோட்டத்திற்காக 900 ஏழை ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் பழங்குடி மக்களுக்கு வழங்கப்படும். தேயிலைத் தொழிற்சாலைக்குப் பச்சை இலைகளைக் கட்டாயமாக வழங்க வேண்டுமென்று நிப்ந்தனையுடன் இந்த நிலம் வழங்கப்படும்.

உத்தேசிக்கப்பட்டுள்ள இந்தத் தேயிலைத் தோட்டமானது தேயிலை உற்பத்தியை ஆண்டொன்றுக்கு 10 இலட்சம் கிலோகிராம் கூடுதலாக்கி தேசிய உற்பத்தித் திறனைக் கூடுதலாக்கும் வகையில் தனது பங்கினை ஆற்றும். தேயிலை உற்பத்தியினால் இப்பகுதி மண் அரிப்பைச் சிறந்த வகையில் தவிர்த்து இப்பகுதி பாதுகாப்பைக் காத்திடும்.

இத்தகைய தேயிலைப் பயிர் விவசாயத்தினால் ஆதிதிராவிடர், பழங்குடி மக்கள் மற்றும் இலங்கை அகதிகள் போன்றோர் குடும்பங்களில் ஆண்டு வருமானம் ரூ.8000 வரை உயர்ந்து பொருளாதார மற்றும் நிதி வசதி ஆதாயம் பெறுவார்கள்.

இந்திய அரசு மத்திய சுங்க வரியின் மூலமாக ஆண்டொன்றுக்கு 7.40 இலட்ச ரூபாய் கூடுதல் வருமானமாகப் பெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. தேயிலை வாரியமும் ஆண்டொன்றுக்கு செஸ் வரியாக ரூ. 80,000 வருமானம் பெறும். இது தவிர ரூ. 2.625 இலட்சம் அளவில் மாலநி அரசு விற்பனை வரி மூலம் பெறும்.

இவற்றோடு கூட மாநில அரசு வேளாண்மை வருமான வரி மூலமாகக் கணிசமான அளவு வருவாயும் பெறலாமென எதிர் பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தில் உத்தேச செலவினம் ரூ. 258.55 இலட்சமாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இத்தேயிலைத் தோட்ட அமைப்பிற்கான முழு முதலீட்டையும் 'தேயிலை வாரியம்' ஏற்றுக் கொள்கிறது. தேயிலைத் தொழிற்சாலை அமைப்பதற்கான செலவினம் "தேசீய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம்" வழங்கும் நிதியிலிருந்து ஏற்றுக் கொள்ளப்படும். இத்தேயிலைக் கூட்டுறவுச் சங்கத்தில் இலங்கையிலிருந்து குடிபெயர்ந்தோரும் உறுப்பினர்களாகவிருப்பதால், தமிழ்நாடு அரசு மறுவாழ்வுத்துறையினரிடமிருந்து கணிசமான அளவு நிதி பெறப்படும்.

**டி.பி.எஸ். சுந்தரநாதன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**அண்ணா மாவட்டம்.**

## இராமநாதபுரம் மாவட்டம்

இராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்புல்லாணி, மண்டபம் வட்டாரங்களில் நிலத்தடி நீர் சிக்கனமாகப் பயன் படுத்தப்படுகிறது. இம்மக்கள் மண் கிணறு தோண்டி, ஏற்றம் இறைத்துப் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுகிறார்கள். கிணற்றின் சுற்றுப்புறம் நனைந்தவுடன் கரை இடிந்து, கிணறு மூடப்படுகிறது.

சிலர் தண்ணீரை வாளிகளில் இறைத்துச் செடிக் குழிகளில் ஊற்றுகிறார்கள். நீர்ப்பாசனத்தில் உள்ள சிரமங்களை ஆய்வு செய்து இராமநாதபுரம் மாவட்ட வளர்ச்சி முகமை ஒரு சிறப்புத் திட்டத்தை ஏழைகள் பயன் பெறும் வகையில் செயல்படுத்துகிறது.

இத்திட்டத்தில் 15 அடி முதல் 20 அடி ஆழத்துக்குக் கிணறுகளைத் தோண்டி, கிணற்றில் ஏற்படும் சரிவுகளைத் தடுக்க சிமெண்ட் உறை வளையங்களை அமைத்து, பரப்புக்குத் தகுந்தாற்போல் மூன்று அல்லது நான்கு சிமெண்ட் நீர்த் தொட்டிகளை அமைத்து, இணைப்புக் குழாய்கள் மூலம் நீர்த் தொட்டிகளும் பயிர்க் குழிகளும் இணைக்கப்படுகின்றன.

இத்திட்டத்தால் நீர் வீணாவது இல்லை. உழைப்பும் நேரமும் மிச்சப்படுகிறது. பெரும் அளவிலான விவசாயப் பெருக்கத் திட்டத்தின் கீழ் ரூ. 2,000 அரசு மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் ரூ. 6,000 விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் மாங்கன்று வளர்ந்து மல்லிகை ஊடுபயிராகப் போடப்படுகிறது. பயிர்ப்பருவமாக உள்ள மாங்கன்று, முதல் மூன்று வருடத்திற்குப் பலன் கொடுப்பதில்லை. மூன்று வருடத்துக்குப்பின் மா மரங்களின் மூலம் ஆண்டுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 8,000 வரை வருவாய் கிடைக்கும். மாங்கன்று பலன்தராத பருவங்களில் மல்லிகைப்பூ ஜனவரி முதல் ஏப்ரல் வரை 10 சென்ட் பாத்திக்கு, நாள்தோறும் ரூ. 50 வரை வருவாய் கிடைக்கும். ஏப்ரலுக்குப் பின் ஒரு நாளுக்கு ரூ. 10 வருவாய் கிடைக்கும். மூன்று ஆண்டுகளுக்குப் பின் மல்லிகையும் மாங்கனியும் சுமார் ஒரு ஏக்கருக்கு ரூ. 40,000 மதிப்பு வரை பலன் கொடுக்கும்.

திருப்புல்லானி வட்டாரத்தில் வண்ணான்குண்டு கிராமத்திலும் மண்டபம் வட்டாரத்தில் தங்கச்சி மடம் கிராமத்திலும் இராமநாதபுரம் வட்டாரத்தில் சித்தார் கோட்டை, அம்மாரி கிராமத்திலும் மொத்தம் சுமார் 162 விவசாயிகள் 217 ஏக்கர் பரப்பில் இத்திட்டத்தின்கீழ் மாங்கன்று வளர்ப்பு மற்றும் மல்லிகை ஊடு பயிர் செய்து வருகிறார்கள்.

**கோ. தி. மோகன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**இராமநாதபுர மாவட்டம்.**

# கொடுமணல் அகழாய்வில் புதிய கண்டுபிடிப்புகள்



கண்ணன் ஆதன் - பழைய தமிழ் எழுத்து

**த**மிழ்ப் பல்கலைக் கழகக் கல்வெட்டியல் துறை கொடுமணலில் இவ்வாண்டு மே-ஜூன் மாதங்களில் நடத்திய இரண்டாம் அகழாய்வில் பல புதிய கண்டுபிடிப்புகள் செய்யப்பட்டு உள்ளன.

இந்த அகழாய்வில் சென்னைப் பல்கலைக் கழகத் தொல்லியல் துறையினரும் பங்கேற்றனர். இங்குக் கிடைத்த பொருள்களிலிருந்து, அரிய அணிமணிகளும் இரும்பு, செம்புப் பொருள்களும் செய்த தொழிற்கூடமாக இவ்வூர் கி.மு. 3-ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி.3-ஆம் நூற்றாண்டு வரை விளங்கியது என்பது தெளிவாகிறது.

ஊர் இருக்கைப் பகுதியில் மொத்தம் பதின்மூன்று இடங்களில் அகழாய்வு செய்யப்பட்டது. இக்குழிகளில் பல அடுக்ககுகளில் சுண்ணாம்புச் சரளைக் கல்லும், செம்மண்ணும்கொண்டு கெட்டிப் படுத்தப்பட்ட வீட்டுத்தரைகள் காணப்பட்டன. இவற்றோடு சேர்ந்து தூண்கள் நட்டிருந்த குழிகளின் அடையாளங்களும் மண் சுவரின் அடிப்பகுதி சிறிதும் காணப்பட்டன. சில நிலைகளில் செங்கற்களும் வரியிட்ட கூரைத் தட்டோடுகளும்கிடைத்துள்ளன. தானியங்களைச் சேமித்துவைக்க நிலத்திற்கடியில் வெட்டப்பட்ட வட்டவடிவமான பெரிய குழிகள் காணப்படுகின்றன.

மேற்கூறிய ஆய்வுக் குழிகளில் வண்ணக் கோடுகள் தீட்டப்பட்ட கறுப்பு, சிவப்புப் பானை ஓடுகள் நிறைய கண்டெடுக்கப்பட்டன. இவற்றோடு உரோமானிய நாட்டுத் தொடர்பைக் காட்டும் வகையில் அந்நாட்டுப் பானைச் சில்லுகளும் (Rouletted pottery) இருந்தன. கறுப்பு, சிவப்பு ஓடுகள் பலவற்றில் பழைய தமிழ் எழுத்துக்கள் (தென் பிராமி) கீறி எழுதப்பட்டு இருந்தன. இவற்றில்-

'கண்ணன் ஆதன்', 'வருணி' யகல்

'கலந்தை வம்பன் அகல்'-முதலிய சொற்றொடர்கள் காணப்படுகின்றன.

இரும்பினால் செய்யப்பட்ட மணிகள், அம்பு நுனி, கத்தி, அரம், உளி, கம்பி, ஆணி, வளையங்கள் முதலான பொருள்களும், செம்பினால் செய்யப்பட்ட சிறிய ஒலிமணி, துளையிடும் ஊசிகள், மீன் தூண்டில்கள், சுருள் வடிவமான காதுத் தொங்கட்டான், கை விரல் மோதிரம் ஆகியவையும் கிடைத்துள்ளன.

பளிங்குக்கல், கார்னீலியன், நீலம், பெரில் ஜேஸ்பர் முதலிய அரிய கற்களைக் கொண்டுசெய்த மணிகள் (பாசிகள்) கிடைத்தன: இவை யாவும் இந்த ஊரிலேயே செய்யப்பட்டனஎன்பதை மெய்ப்பிக்கும் வகையில் இக்கற்களின் கட்டிகளும், சில்லுகளும் பல நிலைகளில் காணப்பட்டன.

பவள மணிகளும், சங்கு, வளையல்களும் கிட்டியுள்ளன. சுடுமண்ணால் சிறிய பம்பரங்கள் போல் செய்யப்பட்ட நூற்கும் கருவியான தக்ளியினுடைய அடிப்பகுதி பல இருந்தன. இவற்றில் ஓரிரண்டு, இரும்புக் கம்பிகள் பொருத்தப்பட்ட நிலையில், பழையபடியே இருந்தன.

ஒரு குழியினுள் கி.மு. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த வெள்ளியால் செய்யப்பட்ட முத்திரை நாணயம் (Punch marked coin) கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

ஈமக்காட்டில் அகழப்பட்ட மூன்று கற்பதுக்கைகளில் (நீத்தோர் நினைவுச் சின்னம்) பல படையல் பொருள்கள் இருந்தன. இவற்றுள் இரும்பினால் செய்த கிண்ணம், கரண்டி; ஈயத்தால் செய்த கம்பிச்சுருள், மணிகள்; தங்க மோதிரம் ஆகியனவும் கார்னீலியன் கல்லில் செய்த ஏறக்குறைய ஈராயிரம் மணிகளும் அடங்கும்.

**—கல்வெட்டியல் துறை**

**நன்றி: தமிழ்ப் பல்கலைக் கழகச் செய்தி மலர்.**

# அப்படியிருந்தது அந்தக் கால நாடகம்



தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறையின் சார்பில் சென்னை அருங்காட்சியகக் கலை யரங்கில் 30.7.86 அன்று திரையுலக நட்சத் திரங்கள் திரு கே. ஏ. தங்கவேலு அவர்களும் திருமதி சி.டி. ராஜகாந்தம் அவர்களும் தமது பழைய நாடக அனுபவம் குறித்துக் கலந்துரை யாடல் நிகழ்த்தினர். அந்த உரையாடலின் முக்கிய பகுதிகளை 'தமிழரசு' வாசகர்களுக்கு விருந்தாக்கி மகிழ்கிறோம்.

தங்கவேலு: கலை ஆர்வம் காரணமா நீங்க எப்ப நாடகத்திலே நடிக்க வந்தீங்க?

ராஜகாந்தம்: 1933 ஆம் வருஷத்தில நான் நாடகத்திலே நடிச்சேன்! கலை ஆர்வம் காரணமில்ல! வயித்தைக் கழுவுறதுக்காக! எஸ். ஆர். ஜானகி இருக்காங்களே அவங்க அம்மா ரத்னாம்பா நாடகக் கம்பெனியில நான் மொதல்லே நடிச்சேன். நான் நேரடியா போயி வசனம், பாட்டு இதையெல்லாம் கேக்கலே! எங்க அம்மா போயி அதை எல்லாம் வாத்தியார்கிட்டே வாங்கி வருவாங்க! அதை நான் நல்லா படிச்சுகிட்டு நாடக மேடையிலே நடிப்பேன். கம்பெனி கோயம்புத்தூர்லே யிருந்து ஆலப்பேய்க்கு மாறிச்சு. அப்ப நான் பால கண்ணகி வேஷம் போட்டேன்.

அப்ப நான் ஒரு பாட்டுப் பாடுவேன்:

எங்கு செல்லுகிறீர்
இப்போது எழுந்துமே
என்னாசை மன்னா நீர் (எங்கு)

என்று பாடுவேன்.

உடனே கோவலன் வேடம் போட்ட அந்த அம்மாள்

வந்து சேருகிறேன்
சென்று துரிதமாய் (வந்து)

தங்: ஆமா இந்தப் பாட்டு, சாமி பாட்டுத் தானே!

ராஜ: ஆமா! அவரு பாட்டுத்தான்!

(சாமி என்று இங்கு சொல்லப்படுபவர் தமிழ் நாடகத் தந்தை என்று புகழப் பெற்ற சங்கரதாஸ் சுவாமிகள் ஆவார்).

தங்: சாமிகள் நாடகம் எழுதுறதுக்குப் பேனாவைப் பிடிச்சார்னா அடித்தல் திருத்தல் இல்லாம எழுதுவாரு - நாடகத்தை முடிச்சிட்டுத்தான் பேனாவைக் கீழே வைப்பாருன்னு சொல்றாங்களே!

ராஜ: ஆமா அதெல்லாம் உண்மைதான்! அவரு எழுதுன வசனத்தை நடிகர்கள் மாத்திப் பேசினாலும், பாட்டை மட்டும் அப்படியே தான் பாடுவாங்க! ஒரு எழுத்தைக் கூட மாத்த மாட்டாங்க!

சாமிகள் மாதிரி பாட்டெழுத முடியாது! அவருலே பாதி நாராயண கவி - அவருல பாதி சுந்தர வாத்தியார், அவருலே பாதி கவிகுஞ்சரம்; அவருல பாதி குசாகி வாத்தியார் - இப்படி ஒரு பரம்பரையே இருக்குது.

தங்: ஆமா நீங்க பார்த்த மொதல் நாடகம் எது?

ராஜ: நவாப் ராஜமாணிக்கம் பிள்ளை நாடகம்தான்! அவரு நவாபா நடிச்ச நாடகத்தைப் பார்த்திருக்கிறேன்.

தங்: நாடகக் குழுவில நீங்க எத்தனை ஆண்டு இருந்திருக்கிறீங்க?

ராஜ: என் குருநாதர் கம்பெனியில 3 மாசம்தான் இருந்தேன். அப்பொறம் கொஞ்சம் கொஞ்சமா சின்னச் சின்ன வேஷத்தில இருந்து ராஜபார்ட் வரை வந்தேன். அப்பொறம் 1935லே நாடகத்தை நிறுத்தினேன்.

தங்: எந்த ஊருல நாடகத்திலிருந்து நின்னீங்க?

ராஜ: இடைப்பாடியிலே: அப்ப அந்த நாடகத்திலே பாலையா சேட் வேஷம் போடுவார்.

தங்: அந்தக் கால நாடகத்தில புகழ் பெற்றவங்க யாரு?

ராஜ: சாப்ஜான், சுப்பையா பாகவதர், கழுதை மாணிக்க முதலியார் இப்படிப் பல பேரை நான் சந்திச்சிருக்கிறேன்.

தங்: ஆமா அவருக்கு ஏன் அந்தப் பேரு வந்துச்சு?

ராஜ: அதுவா! அவரு ஒரு நாடகத்தில எமன் வேஷத்தில நடிச்சப்போ ஜனங்கள்லாம் உள்ளே போன்னு கத்துனாங்க! அவரு, ''அய்யா! என்னை உள்ளே போகச் சொல் றீங்க! மறுபடி மேடைக்கு வர இங்கே யாரும் கெடையாது! நானே தான் திரும்பி வரணும்! அதை ஞாபகம் வச்சுக்குங்க'' அப்படீன்னா ராம்! உடனே ஜனங்கள்லாம் ''ச்சீ' கழுதைப் பயலே! உள்ளே போடா!'' அப்படீன்னாங் களாம். அன்னயிலேயிருந்து அவருக்கு கழுதை மாணிக்கம்னு பேரு ஏற்பட்டுப் போச்சாம்!

தங்: அது எந்த ஊரு?

ராஜ: இடைப்பாடிப் பக்கத்திலே உள்ள மேச்சேரி!

தங்: அப்படியா! அங்கெ நானும் போயி நடிச்சு அந்தப் பேரை வாங்கிட்டு வரணும்னு ஆசையாயிருக்கும்மா!

ஏன்னா, கழுதை கத்தறது சுப சகுனம்னு சொல்றாங்க! கழுதைப் பாலைக் குடிச்சா பல வியாதிகள்லாம் நீங்குதுன்னு சொல்றாங்க! அவ்வளவு பெருமைக்குரியது கழுதை, இல் லியா?

....ஆமா நீங்க யாருக்கும் நாடகத்திலே 'டீச்சு' பண்ணினதுண்டா?

ராஜ: நான் யாருக்கும் டீச்சு பண்ணினது கெடையாது!

தங்: சொந்தமா நாடகம் ஏதாவது...?

ராஜ: ஒங்களுக்குத் தெரியாத விஷயமா? அதுதான் பழனிவேலுப் பத்தரைக் கூட்டி வந்து விநோத சாமிகள் நாடகம் நடத்தி அது சரியா வரலியே....

தங்: ஆமா... கலை ஆர்வம் உள்ள நீங்க,பொழுதை எப்படிக் கழிக்கிறீங்க?

ராஜ: நான் எங்க அம்மாவுக்கு ஒரே பொண்ணு. எனக்கு,ஒரே பொண்ணு. அது ஆல விருட்சமா பெருகி இருக்குது. தினமும் வீட்டுக்கு நாலு நல்ல மனுஷங்க வர்றாங்க, போறாங்க! அதுனால் பொழுது போகுறது எனக்கு சிரமமா இல்லே!

முன்னெ வி.கே.ஆர். நடத்துன பம்பாய் மெயில் டிராமாவில் நடிச்சேன். அந்த நாட கத்துக்கு அழைக்குறதுக்காக எம்.ஜி.ஆர். வீட் டுக்குப் போயிருந்தேன். 'எங்க கம்பெனி நாட கத்துல நடிக்கக்கூடாதா'ன்னு அவரு கேட் டாரு. அதனாலே அவரு கம்பெனியில 1952 முதல் 1960 வரை இன்பக்கனவு, சுமைதாங்கி, அட்வகேட் அமரன் ஆகிய நாடகங்கள்ல நடிச்சேன். அப்படி நடிச் சுக்கிட்டு வர்றபோது 1958ல திருக் காட்டுப் பள்ளியில நாடகம் ஆடிட்டு, சீர் காழியில நாடகம் ஆடுறதுக்கு வந்தோம். சீர்காழியிலெ பெரிய மாலை தயாரா வச்சிருந் தாங்க எம்.ஜி.ஆருக்குப் போடுறதுக்கு!

அதைப் பார்த்த எம்.ஜி.ஆர். ''இந்த மாலை என் கழுத்தில விழாது'' என்று சொன் னார். ''அபசகுனம் மாதிரி சொல்லாதிங்க'' என்று அவருகிட்டே சொன்னேன்.



அந்த நாடகத்தில ஒரு காட்சியில நாலு ரௌடிங்க அவரைத் தாக்க வருவாங்க! அவங் களை எதிர்த்துச் சண்டைபோடுவாரு. எம்.ஜி.ஆரு. மொதல்ல புத்தூர் நடராஜனை தூக்கி எறிவாரு. அடுத்தாப்புல குண்டு மணியைத் தூக்கி எறியும்போது, அவரு புத் தூர் நடராஜன் மேலே போய் விழுந்திரக் கூடாதுனு நெனைச்சாரு! அதனால குண்டு மணியைத்தூரத்திலே தூக்கி எறிய முடியலே. எம்.ஜி,ஆர். காலிலேயே குண்டுமணி விழுந் திட்டாரு! அன்று தலைமை தாங்க வந்திருந்த இரா. செழியன் 'சீனை விடுங்க,' என்று கூற, சீனை விட்டுட்டாங்க.

''ஈரத்துணி கொண்டாங்க அண்ணேன்' என்று திருப்பதிசாமியிடம் சொன்னார் எம்.ஜி.ஆர். உடனே அவர் கொண்டு வந்தார். காலிலே அடிபட்ட இடத்தில் கட்டுப்போட் டார் எம்.ஜி.ஆர். அவரது கால் எலும்பு முறிந்துவிட்டது. நாடகம் தொடரவில்லை. அவர் மொதல்லே சொல்லியபடியே தோழர் கள் கொண்டு வந்திருந்த மாலையை அவர் அணிந்து கொள்ள முடியலே!

எல்லோரும் அழுறோம்! ஆனா அவர் மட்டும் ''இப்ப என்ன ஆச்சு''!என்று கேட்ட வாறு சிரித்தார்.

தங்: அதுதான்ம்மா அவருகிட்டெ இருக் கும் விசேஷமான குணம்: அடிக்க அடிக்க அவர் மேலே போய்க்கிட்டே இருக்கிறாரு. ஏதோ ஒரு கடவுள் தனிப்பட்ட முறையில அவரைக் காப்பாத்திக்கிட்டு வர்றாரு!

ராஜா: ஆமா தம்பி நீங்க எப்படி நடிக்க வந்தீங்க?

தங்: தங்க வேலை செய்றதுக்காக என்னெ காரைக்காலிலே உள்ள எங்க மாமா வீட்டுக்கு அனுப்பிச்சிருந்தாங்க. அங்கெ ரெண்டு மாடு இருந்துச்சு! அதுக நல்லா பால் கறக்கும். எங்க மாமா எனக்கு தங்க வேலை யைச் சொல்லித் தரலே! பால் குவளையில பாலை எடுத்துக்கிட்டு, வீடு வீடாகப் போயி



ஊத்துவேன். அப்ப, பல வீட்டுல உள்ளவங்க என்னெப் பார்த்து 'ஒன் குரல் நல்லா இருக்குதெ! நீ சினிமாவிலே நடிக்கலாமே' என்று சொல்லி என் மனசுலெ நடிப்பு ஆசையைத் தூண்டி விட்டாங்க!

அப்ப எல்லாம் நாடக டிக்கெட் அரை அணாதான். அதைச் சேர்க்குறதுக்கே மாசம் ஆறு ஆகும்!

எதார்த்தம் பொன்னுசாமி பிள்ளை காரைக்காலுக்கு வந்திருந்தாரு! அவரு சிபாரிசுல ராஜாம்பாள் நாடகததிலே திருவாரூரில போய்ச் சேர்ந்தேன்.

எனக்கு கொடுத்த வேஷம் பிரமாதம்! யாரும் அவ்வளவு பெரிய வேஷத்திலே நடிக்க முடியாது! இந்த சீதை ராமர், அவங்க தம்பிங்க அவங்க காலடியிலே உக்காந்திருக்கிற வேஷம். அதான் அனுமாரு....!

ராஜ: நீங்க மட்டுமா தம்பி! எல்லாருமே குட்டி அனுமார் வேஷம் போட்டு, அப்புறம் தித்தித்தை போட்டு, காலுல அடிபட்டு, குத்துச்சண்டை போட்டு, கத்திச் சண்டை பழகி, கடைசியில சாரீரம் போன உடனே சீன் இழுக்க வந்துருவாங்க.

தங்: ஆமாம்மா எனக்கும் மகரக்கட்டு வந்தது. வேலூரிலே நாடகம் ஆடிக்கிட்டிருந்தப்போ சாரீரம் போச்சு. 1941லே சிதம்பரத்தில எங்க கம்பெனி நாடகம் நடத்திக்கிட்டிருந்தது. பிரமாதமா நாடகம் நடந்தது! ஒரு 2000 ரூபாய் தகராறிலே போலீஸ் ஸ்டேஷன் வரைக்கும் நாங்கள்லாம் போக வேண்டியதாயிடுச்சு

எங்க நாடக முதலாளி டி.பி.பொன்னையா,

சிறுவர்கள் நாடகம்
சிதம்பரத்தில் நடத்தவந்தோம்
வறுமைஎனும் பேய்
வழிமறித்து நிற்குது ஐயோ!

என்று எழுதினார்.

அன்னிக்கே கம்பெனி குளோஸ். அன்னிக்கி மத்தியானமே போலீஸ் வந்து கம்பெனியே நின்னு போச்சு. நாங்க சிதம்பரத்திலேயிருந்து மெட்ராசு வரை ரயில் தண்டவாளத்திலேயே ஓடிவந்தோம்.

யானை கவுனியிலே போலீஸ் ஸ்டேசன் பக்கத்தில எம்.ஜி.ஆரும் அவங்க அண்ணனும் குடியிருந்தாங்க! ஆறு ஏழு மாசம் எங்க வயித்துக்குச் சோறுபோட்டவரு எம்.ஜி.ஆர் தான். இந்த விசுவாசம் எனக்கு எப்பவும் உண்டு.

அப்புறம் நான் தேவி நாடகக் கம்பெனியில நடிச்சுக்கிட்டிருந்தேன். ஒருத்தரு சினிமாவிலே சேர்த்து விடுறேன்னு சொல்லி என்னைக் கூட்டிக்கிட்டு வந்தாரு. அவரு என்னை அம்போன்னு விட்டுட்டுப் போயிட்டாரு! அந்தச் சமயத்தில ராஜகாந்தம் அம்மா என் கிட்டே ஒரு கதை கேட்டாங்க! என் சிற்றறிவுக்கு எட்டின வகையில ஒரு கதையை எழுதி அவங்களுக்குக் கொடுத்தேன். ஒரு நேரம்தான் சாப்பாடு; ரெண்டு நேரம் பட்டினி. அவங்க எனக்கு உதவி செய்தாங்க! ஒருநாள் ஒருத்தரு ரிக்ஷாவில வந்து, என் வீட்டு முன்னால இறங்கினாரு. காய்கறி, அரிசி, பருப்பு எல்லாத்தையும் ரிக்ஷாவிலே இருந்து எடுத்துக்கிட்டு வந்து 'ராஜகாந்தம் அனுப்பிச்சாங்கன்னு' சொல்லி எங்கிட்டெ தந்தாரு! அந்த அம்மா எனக்குச் செய்த உதவியை நெனச்சு நான் பெருமைப்பட்டேன்.

அப்புறம் எம்.கே.ராதா அவங்க அப்பா கந்தசாமி முதலியாரு நடத்தின நாடக கம்பெனியில நடிச்சேன். ராதா என்னை கலைவாணர் என்.எஸ்.கே.கிட்டே சேர்க்க முயற்சி செய்தார். 1937ல் சதி லீலாவதிபடத்திலேயே அவரு கூட நான் பழகியிருக்கிறேன்.

அப்ப ஒரு நாடகத்துக்கு 15 ரூபாய் சம்பளம் கெடைச்சது. மாசம் 4 நாடகம் நடக்கும். இதுல நானும் என் குடும்பமும் ஒரு நாயும் வாழ்க்கையை நடத்தி வந்தோம். ஆர்.ஆர்.சபாவிலே மணமகன்னு ஒரு நாடகம் 1950லே நடந்திச்சு.

ராஜ: லோகநாதன் ஹீரோவா அதில நடிச்சாருல்லே...

தங்: ஆமா! அந்த நாடகத்தைப் பார்க்க என்.எஸ்.கே. வந்தாரு. என் நடிப்பைப் பார்த்து ரொம்பப் பாராட்டினாரு. மத்தவங்கன்னா வயித்தில ஒண்ணு,வாயில ஒண்ணுன்னு நடந்துக்குவாங்க! ஆனா என்.எஸ்.கே. மனமாரப் பாராட்டினாரு.





அங்கெ என்னைச் சந்திச்சு, வீட்டுக்கு வந்து பாருடான்னு சொன்னார்.

நான் அவரைப் பார்க்க அவரோட வீட்டுக்குப் போனபோது; "வா வா வா" என்று அன்பு ததும்ப வரவேற்றார்.

நீ நடித்த மணமகன் நாடகத்தைத்திரைப் படமாக்கப் போறேன். அதிலே நீதான் ஆடிய பாதமா நடிக்கப் போறே! மதுரம் உட்பட எல்லாரும் எதிர்த்தாங்க. ஆனா, தங்கவேலு இந்தப் பாத்திரத்திலே நல்லா நடிப்பான்! அவனை கண்டிப்பா நடிக்க வக்கிறேன்னு நான் சபதம் எடுத்துக்கிட்டேன் என்றார் என்.எஸ்.கே.

''இன்னியிலேயிருந்து உனக்கு அதிர்ஷ்டம் பொறந்துட்டுதுடா'' என்றார். பிறகு, 'சாப்பிடுடா' என்றார். 'சாப்பிட்டுட்டேன்' என்றேன்.

''பொய் சொல்லாதேடா! சாப்பிடு' என்று சொல்லிச் சாப்பிட வச்சார்.

சினிமாவிலே நடிக்க ஆரம்பிச்சதுக்கப்புறம் ஒருநாள் அவருகிட்டே போயி ''280 ரூபா தாங்கன்னு'' கேட்டேன். உடனே கொடுத்தாரு.

அந்தப் பணத்தை நான் கண்ணிலே ஒத்திக்கிட்டேன்.

''என்னடா இது, பணத்தை கண்ணுல ஒத்திக்கிறே''ன்னு கேட்டார்.

''பணம்னா லட்சுமியாச்சே! அதனால தான் கண்ணிலே ஒத்திக்கிட்டேன்னு'' சொன்னேன்.

''அப்படியா! அப்படின்னா அது ஒங்கிட்டயே இருக்கட்டும்''னார்.

அவருடைய ஆசி பலிச்சிருச்சி. காசு என் கிட்டே நெலைச்சிருக்குது! நான் நல்லாவே இருக்குறேன்.

ஒரு ஊர்ல நாங்க நாடகம் நடத்துனோம்; கரண்ட் கிடையாது. பெட்ரோமாக்சு கூட கெடையாது! தீப்பந்தத்தை ஸ்டேஜுக்கு ரெண்டு பக்கமும் நிறுத்தி வச்சு, நாடகத்தை நடத்தினோம். பி.ஜி.குப்புசாமி நாயுடுங்குறவரு அந்த நாடகத்தை நடத்தினாரு!

ராஜ: சம்பளம் என்ன?

தங்க: பேரீச்சம்பழம் -அதாவது 3 ரூபாய் சம்பளம்

பல நடிகர்கள் இரட்டை அர்த்தம் தொனிக்கும்படியாக கொச்சையான வார்த்தைகளைப் பேசுறாங்க. நான் அப்படிப் பேசுறது கெடையாது.

ஒருமுறை கே.கே. பார்வதின்னு ஒரு நாடக நடிகையோட டிரஸ் பெட்டியில நான் உட்கார்ந்துட்டேன். அதுக்கு அந்த அம்மா என்னை ரொம்ப கோவிச்சுக்கிட்டாங்க! நான் பேசாம மன்னிப்புக் கேட்டுக்கிட்டேன். சமயத்தை எதிர்பார்த்துக்கிட்டிருந்தேன். அன்னக்கி நாடகத்திலேயே அல்லி தர்பார் சீன்ல அந்த அம்மாளை ரெண்டே ரெண்டு வார்த்தை கேட்டேன். அதோட அழுதுகிட்டே எழுந்து உள்ளே போயிட்டாங்க. ஜனங்க, கை தட்டிக்கிட்டே இருந்தாங்க.

அவன் வெளியே போனாத்தான் நான் மேடைக்கு வருவேன்னு சொல்லிட்டாங்க, அந்த அம்மா.

வாழ்க்கையிலே ஒரே ஒரு முறைதான் அந்த மாதிரி நான் அசிங்கமா பேசியிருக்கிறேன்.....

வாய்க்கு அசிங்கமா பேசுனதுனாலே வருஷக்கணக்கா வயித்துக்குச் சோறில்லாமே அலைஞ்சிருக்கிறேன். அதுனால இந்த டபுள் அர்த்தத்தோட—ட்ரிபிள் அர்த்தத்தோட நான் பேசுறது கெடையாது.

மத்தவங்களெ மாதிரி அடுத்த நடிகர் தலையில அடிக்கிறது — காலை இழுத்து விடுறது போன்ற காமெடியை நான் செய்றது கிடையாது.

தாய்மார்கள்கிட்டெ எனக்கு ஒரு நல்ல பேரு இருக்குது! தங்கவேலு அசிங்கம் பேச மாட்டான்னு அவங்க நெனைக்கிறாங்க.... அதை நான் காப்பாத்துவேன்.

அனைவரும் வாழ்க, வளர்க, பல்லாண்டு வாழ்க என்று சொல்லிக்கிறேன்.

**விழாத் தொடக்கத்தில் பழங்கலை இயக்குநர் திரு புத்தனேரி சுப்ரமணியம் வரவேற்புரையாற்றினார். இறுதியில் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறைச் செயலர் டாக்டர் ஔவை நடராசன் அவர்கள் நன்றி நவின்றார்.**

**—நமது செய்தியாளர்**

குடும்ப நலம் வீட்டைக் காக்கும், தொழில்வளம் நாட்டைக் காக்கும்

TAMIN

# தமிழ்நாடு கனிம நிறுவனம்

## சென்னை-600 005

## (தமிழ்நாடு அரசு நிறுவனம்)

உலகப் புகழ் பெற்ற குன்னம், பைத்தூர் கரும்பாறைகளோடு செந்தாரப்பள்ளி சாம்பல் நிறப் பாறைகளேயும் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஏற்றுமதி செய்கிறது.

தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்குச் சொந்தமான நூறு விழுக்காடு ஏற்றுமதி நோக்குடைய ''டாமின் கிரானைட்ஸ்'' 2-3 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட கற்பலகைகள் மற்றும் சுவர்களில் பதிக்கவல்ல கற்பலகைகள் மற்றும் 10-15 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட நினைவுக் கற்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்கிறது.

இந்நிறுவனம் உற்பத்தி செய்து விற்பனை செய்துவரும் இதர உயர்வகைக் கனிமங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | இந்திய தர மணல் | : | ஐ.எஸ். 650/1966 |
| 2. | சுண்ணாம்புக் கல் | : | கெமிகல் கிரேடு சராசரியாக $+91\%\ CaCo_3$ |
| 3. | வெங்கக் கல் (குவார்ட்ஸ்) | : | $+99.8\%\ SiO_2$ |
| 4. | பெல்ட்ஸ்பார் | : | $+12\%\ K_2O$ |
| 5. | ரோஸ் குவார்ட்ஸ் | : | ஆபரணங்கள் செய்யும் தரம் உடையது |
| 6. | சிலிகா மணல் | : | $+99.7\%\ SiO_2$ |
| 7. | வெப்பந்தாங்கும் களிமண் | : | ரிப்ராக்டரி கிரேடு $32.1\%\ A1_2O_3$ |
| 8. | வெர்மிகுலைட் | : | சராசரியாக 14 மடங்கு கனபரிமாணம் விரிவடையும் தன்மையுடையது |
| 9. | விரிவுபடுத்தப்பட்ட வெர்மிகுலைட் | : | பொன் நிறமானது |
| 10. | சுண்ணாம்புச் சிப்பி | : | சராசரியாக $CaCo_3 + 94\%$ |

**தேவைக்கு அணுக வேண்டிய முகவரி:**
தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு கனிம நிறுவனம்,
TWAD HOUSE, 31, காமராஜர் சாலை,
தபால் பெட்டி எண். 2961,
சேப்பாக்கம், சென்னை-600 005.
தொலைபேசி எண்: 848932
டெலக்ஸ்-41 6081TNML IN

**தொழிற்சாலை:**
டாமின் கிரானைட்ஸ்,
மணலி — பொன்னேரி ரோடு,
மணலி,
சென்னை-600 068

தந்தி - MINESALITE

DIPR/26231/363/86-27/SAS

## மாணவர் பக்கம்

# மருத்துவ விந்தைகள்



* சில மருந்துகளை வாய் மூலமாகக் கொடுப்பதைவிட மூக்கினுள் செலுத்துவதால் நல்ல பலன் ஏற்படுவதாக அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

* வியட்நாமில் மூளைக்காய்ச்சல் கண்டு கண்பார்வை இழந்தவர்களுக்கு அக்குபஞ்சர் சிகிச்சைமூலம் மீண்டும் கண்பார்வை கிடைக்கச் செய்து இருக்கிறார்கள். ஒரு மாதம் சிகிச்சை பெற்றால் போதும்.

* நீரிழிவு நோய்க்கு இன்சுலின் ஒன்றுதான் மருந்து. தற்போது ராஜஸ்தான் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்கள் இன்சுலின் போன்ற மருந்தைப் பாகற்காயில் தயாரித்து உள்ளனர்.

* பப்பாளியிலிருந்து 100 வகையான மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. பப்பாளியின் பாலிலிருந்து தயாரிக்கப்படும் 'பாபைன்' என்ற மருந்து தோல் வியாதிகளையும் கண் நோயையும் குணப்படுத்துகிறது.

* சுத்தமான பாலில் கால்சியம் சத்தும், வைட்டமின்-டி சத்தும் இருக்கிறது. தினமும் 3 கிளால் பால் சாப்பிடுவதன் மூலம் எலும்புகளைப் பலப்படுத்துவதோடு புற்றுநோயும் வராமல் தடுக்க முடியும் என்று டாக்டர்கள் கூறுகிறார்கள்.

* வாரம் இருநாட்கள் மீன் சாப்பிட்டால் மாரடைப்பு ஆபத்து குறைவு என்று அமெரிக்காவின் பாஸ்டன் நகர மருத்துவ நிபுணர்கள் ஆராய்ச்சியில் கண்டுபிடித்துள்ளனர். மீன் இறைச்சி ஆஸ்துமா நோயாளிகளுக்கும் நல்லதாம்.

* ''எம்பைசிமா'' என்ற ஒரு நோய் புகை பிடிப்பவர்களைத் தாக்கும். இவர்கள் வெள்ளை வெங்காயத்தை அதிகமாகச் சாப்பிட்டால், புகை பிடிக்கும்போது ஏற்படும் பாதிப்புகளைப் போக்கும்.

* சிறுநீரகத்தில் உருவாகும் கற்களை அப்புறப்படுத்த ஜெர்மனியில் 'நெஃப்ரோஸ்கோப்' என்ற கருவி இதனை மிகவும் எளிதாக்கியுள்ளது. இக்கருவியினை நோயாளியின் முதுகில் சிறுதுவாரம் செய்து உட்செலுத்தி சிறிய கற்களை டார்க்டர்கள் அப்புறப்படுத்துகின்றனர். பெரிய கற்களை ஒலி அலைகளால் சிறு துண்டுகளாக்கி உடைக்கப்பட்ட சிறு துண்டுகளை இக்கருவியின் மூலம் வெளியே எடுத்து விடுகின்றனர். இச்சிகிச்சைக்கு 30 நிமிடங்களிலிருந்து 2 மணி நேரம் வரைதான் தேவைப்படுகிறது.

* அல்சர் என்னும் குடற்புண்ணை டாக்டர்கள் அக்குபஞ்சர் சிகிச்சை மூலம் குணப்படுத்துகிறார்கள்.

* அறுவைச் சிகிச்சையின்போது பிளவுபடும் மேல்சதை அல்லது உட்புறத் தசையை 'சுச்சர்' தையல் போட்டுச் சேர்க்கிறார்கள் அல்லவா? இந்தத் தையல் போடாமல் காந்த சக்தியைக் கொண்டு சதை-தசையை இணைக்கும் புதிய முறையை சோவியத் விஞ்ஞானிகள் கண்டுபிடித்து இருக்கிறார்கள்.

நன்றி: விஞ்ஞானச் சுடர்.

# முகிழ்ச்சி மலர்கள்



—புலவர் தணிகை உலகநாதன்

காலை மலர்ந்த ரோஜாமலர்
கனிந்து சிரிக்குது!
மாலை யிலே முல்லைமலர்
மகிழ்ந்து சிரிக்குது!

தோட்டத் திலே சம்பங்கியும்
சொகுசாய்ச் சிரிக்குது!
வாட்ட மின்றி மல்லிகையும்
மணந்து சிரிக்குது!

குளத்தி னிலே தாமரையும்
குலுங்கிச் சிரிக்குது!
நலமு டனே குவளைமலர்
நன்றாய்ச் சிரிக்குது!

செடிகளிலே கொடிகளிலே
செழித்த மரங்களில்
விடியலிலே மலர்கள்மணம்
வீசு கின்றன!

மலர்க ளைப்போல் நாமுமிங்கே
மகிழ்ச்சி கொள்ளுவோம்
கலக லென்று சிரித்துப்பழகக்
கற்றுக் கொள்ளுவோம்!

# இன்றே செய்!



—பூங்கோவன்

நாளை என்ற கனவுதனில்
நாட்கள் எல்லாம் போக்கிவிடும்
மூளை அற்ற செயல்தன்னை
மோதி வீழ்த்தி விடுதம்பி!

இன்றே முடிப்போம் விரைவென்று
எண்ணித் துணிந்தால் வெற்றியுண்டாம்!
நன்மை பயக்கும் நற்செய்கை
நாட்டில் செய்யத் தயங்காதே!

அன்று அண்ணலின் உழைப்பாலே
அடைந்தோம் இன்பச் சுதந்திரமே!
கன்று போன்று சுறுசுறுப்பாய்
கடமை ஆற்ற மறவாதே!

வெற்றி பெற்றோர் பின்னணியில்
விரைந்து முடித்த கதையுண்டு!
கற்ற பயனை அடைந்தவர்கள்
'காலம்' பொன்போல் மதித்தார்கள்!

ஒன்று செய்வாய் தம்பி! அதை
ஒழுங்காய் செய்வாய்! நலம்கூட்டும்!
இன்றே செய்தால் இயல்பாகும்
இனிமை தந்தால் உடன்பாடே!

# தெரிந்து கொள்வோம்!



சகாரா பாலைவனத்தில் உள்ள மணற் குன்றுகள் சில 1500 அடி உயரமும் 3மைல் நீளமும் உடையன.

உலகிலேயே மிகப் பெரிய தவளை இனம் மேற்குஆப்பிரிக்காவில் உள்ளது. இந்தத் தவளைகளுக்குப் பெயர் கோலியாத். இது இரண்டேகால் அடி நீளமுடையது.

இந்தியப் பெருங்கடலில் உள்ள கடல் முயல்கள் தன் வாழ்நாளில் 48 கோடி முட்டைகள் இடுகின்றன.

ஆப்பிரிக்காவில் டிஜிமோதி என்னுமிடத்தில் உள்ள அஸ்ஸால் என்ற ஏரிநீர் கடல் நீரைவிட 100 மடங்கு அதிக உப்பு தன்மையுடையது.

மாஸ்கரீன் தீவுகளில் உள்ள கோரைத் தென்னை மரங்களின் ஒவ்வொரு இலையும் 65 அடி நீளம் கொண்டது.

சீன மொழி டைப்ரைட்டரில் உள்ள மொத்த எழுத்துக்கள் 5850.

1. நெப்போலியன் இறுதியாகப் போரில் தோற்ற இடம் எது?
   வாட்டர்லூ.
2. பிக்பென் கடிகாரம் எங்கே இருக்கிறது?
   பிரிட்டிஷ் நகரத்தில்.
3. மிருகங்களில் எது அறிவுடையது?
   சிம்பன்சி.
4. கியூபா நாட்டின் தலைநகரம் எது?
   ஹவானா.
5. கனடா நாட்டின் தேசிய சின்னம் எது?
   வெள்ளை லில்லி.
6. பெரியார் சமவெளி எந்த மாநிலத்தில் உள்ளது?
   கேரளாவில்.
7. இறக்கை இல்லாத பறவை எது?
   கிவி.
8. எந்தநாடு 'வெள்ளை யானை'' என்று அழைக்கப்படுகிறது?
   தாய்லாந்து.

—தொகுப்பு:
உறந்தை பி. செல்வராஜ்

# குழந்தைகள் பூங்கா



சுற்றுலாவைத் தக்க வகையில் வளர்த்து வரும் தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் தீவுத்திடலில், சுற்றுலா வர்த்தகப் பொருட் காட்சியைச் சிறப்பாக நடத்தி, மக்களுக்குக் கேளிக்கை விருந்தையும் அறிவு விருந்தையும் வழங்கி வருவதுடன் நல்ல வருமானத்தையும் பெற்றுவருகிறது.

தீவுத்திடலில் ஓட்டல் தமிழ்நாடு என்ற திறந்தவெளி உணவகத்தை நிரந்தரமான முறையில் 1985ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தி வருகிறது. அதன் மூலம் குறைந்த விலையில் சுவை மிகுந்த உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.

இந்த ஆண்டு மற்றொரு புதுமையைச் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அறிமுகப்படுத்தியுள்ளது. தீவுத்திடலில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு அருகில் குழந்தைகள் பூங்காவை 8 ஏக்கர்பரப்பளவில் புதிய வசதிகளுடன் உருவாக்கியுள்ளது. மழலைச் செல்வங்கள் மனமகிழ்ந்து விளையாடும் வகையில், யானைச் சவாரி, குதிரைச் சவாரி, சிறுவர் ரயில், படகுப் பயணம் ஆகிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தச் சிறுவர் பூங்காவை நாடிவரும் குழந்தைச் செல்வங்களின் எண்ணிக்கை நித்தமும் அதிகரித்து வருகிறது.

குழந்தைகளின் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம், இசைக்கேற்ப அசைந்தாடும் வண்ண நீரூற்று இங்கே அமைக்கப்பட்டுள்ளது.

ஓட்டல் தமிழ்நாடு அருகில் அமைந்துள்ள அழகிய அரங்கில் நாள்தோறும் மாலைநேரத்தில் குழந்தைகள் நடன நிகழ்ச்சிகள், கிராமியக் கலை. நிகழ்ச்சிகள், மேல் நாட்டு நடன நிகழ்ச்சிகள், மேஜிக் காட்சிகள் ஆகியவை நடைபெறுகின்றன.

திருமண நிகழ்ச்சிகளுக்கு இந்த அழகிய அரங்கத்தை இலவசமாகத் தருவதற்கும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் முன்வந்திருக்கிறது.

சபாக்களின் செயற்குழுபோன்ற சிறிய கூட்டங்கள் நடைபெறுவதற்கும் இந்த அரங்கத்தை ஏற்பாடு செய்து கொள்ளலாம். தற்சமயம் மிகவும் குறைந்த கட்டணம் (ரூ.50) வசூலிக்கப்படுகிறது.

அண்மையில்கூட ஒரு திருமணம் இந்த அரங்கில் நடைபெற்றது.

சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் இந்தப் புதிய திட்டங்களின் மூலம் பலருக்கு வேலைவாய்ப்பும் கிடைத்துள்ளது.

தீவுத்திடல் - சிறுவர்களுக்கு மட்டுமல்ல; பெரியவர்களுக்கும் பெரு விருந்தளிக்கிறது என்றால் அது மிகையாகாது.



# தமிழகத்திலேயே மிக உயரமான தேர்!



ஆழ்வார்கள் திருத்தலமாம் ஸ்ரீவில்லிபுத்தூரில்சூடிக்கொடுத்த சுடர்க்கொடி ஆண்டாள் வாழும் திருக்கோவிலின் திருத்தேர் வரலாற்றுப் புகழ் பெற்றது.

தமிழகத்திலேயே மிக உயரமான தேர்! 100 அடி உயரம் கொண்ட இந்தத் தேர் சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னர் வானமாமலை ஜீயர் சுவாமிகளால் கொடுக்கப்பட்டது.

இந்தத் தேர் 9 சக்கரங்களையும், 9 அடுக்குகளையும் கொண்டது. 9 வடங்கள் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் பக்தர்கள் இதனை வடம் பிடித்து இழுத்து நிலைக்குக் கொண்டு வருவர். ஒவ்வொரு ஆண்டும் நிதி வசதியை முன்னிட்டு இத்தேரோட்டம் நிகழ்ந்து வந்தது.

இத்தேரின் சக்கரங்களை மிகவும் பலம் பொருந்தியதாக அதே நேரத்தில் இழுத்துச் செல்ல எளிதாகவும் பொருத்திவிட்டால் இத்தேரோட்டம் தங்கு தடையின்றி நடைபெறும் என்று கருத்து நிலவியது.

அதன் விளைவாக ஒரு நீண்ட கருத்துரு அரசுக்கு அனுப்பப் பட்டது. அதன்படி ரூபாய் 6 இலட்சம் செலவில் இத்தேரினைப் புதுப்பிக்கும் பணிக்கு அரசு அனுமதி அளித்தது. தமிழகக் கோயில்களின் நிதியில் இருந்து மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் உத்தரவின் மூலம் 3½ இலட்சமும், பழநி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோவில் சார்பாக 1 இலட்சமும், ஐகோர்ட் தர்ம ஸ்தாபன நிதியிலிருந்து ரூபாய் 50,000மும், பொதுமக்கள் மூலம் ரூபாய் 1 இலட்சமும் பெறப்பட்டது. திருச்சி 'பெல்' நிறுவனத்தார் இப்பணியை மேற்கொள்ளும்படிக் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.



இத்தேரின் பெரிய சக்கரங்கள் நான்கும் மிகப் பழமையானவை, மரத்தினால் ஆனவை. எனவே இவைகளை முற்றிலும் மாற்றிவிட்டு தற்போது படத்தில் உள்ளபடி எஃகினாலான அச்சும், சக்கரங்களும், ஹைட்ராலிக் பிரேக் ஆகியவைகளும் பொருத்தப்பட்டுள்ளன. இதில் அச்சு மட்டும் 4½ டன் எடை ஆகும். நான்கு சக்கரங்களும் 3½ டன் எடை ஆகும். இந்த ஆறு இலட்சம் ரூபாய் பணியைச் செய்து முடித்த 'பெல்' நிறுவனமே இதனைப் பொறுத்தும் பணியையும் மேற்கொண்டது. இப்பணியை மேற்கொள்ளுவதன் மூலம் ஏற்படும் செலவான ரூபாய் 1 இலட்சத்தையும் 'பெல்' நிர்வாகம் இலவசமாக ஏற்றுக் கொண்டு விட்டது. 'பெல்' கம்பெனி மேலாளர் தலைமையில் பொறியாளர்கள் 20 நாட்களாக இப்பணியில் ஈடுபட்டு வெற்றிகரமாக முடித்துள்ளார்கள்.

ஒரு வரலாற்றுச் சின்னம், நம் சரித்திர நாயகனின் ஆட்சியில் மேலும் புகழ் பெற்றதோடு, தொடர்ந்து தங்கு தடையின்றி இத்தேரோட்டம் ஓடும் என்ற நம்பிக்கையையும் அளித்துள்ளது.

**ரெ. இராவணன்**
உதவி செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
காமராஜர் மாவட்டம்.



# வழிகாட்டும் வெளிநாடுகள்

**திருமதி சுலோசனா சம்பத்**
**தலைவர், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம்**

**ஹா**னோவர் நகரம் 'Messe' என்ற - உலகத்திலேயே பெரிய பொருட்காட்சியை நடத்தும் பெருமை பெற்றுள்ளது. ஐந்து இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட இந்நகரத்தில்-பொருட்காட்சி நடக்கும் ஏப்ரல் மாதத்தில் - ஐந்து இலட்சம் பயணிகள் வருகை தருகிறார்கள். ஹானோவர் மட்டுமல்லாமல், அதைச் சுற்றியுள்ள பல சிற்றூர்களிலும் உள்ள விடுதிகளில் பல மாதங்களுக்கு முன்பே தங்கும் அறைகளுக்காகப் பதிவு செய்யப்படுகின்றன.

ஹானோவர் பொருட்காட்சியில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு நாடு 'Partner Countty' ஆகத் தேர்வு செய்யப்பட்டு, அதன பொருளாதாரத் தொழில் துறை முன்னேற்றத்தை உலகறியச் செய்கிறார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நம்நாடு அப்படிப் பங்காளி நாடாக இருந்திருக்கிறது, இந்த ஆண்டு பல்கேரியா தேர்ந்தெடுக்கப்பட்டது.

5000க்கும் மேற்பட்ட பல தொழில் நிறுவனங்கள் இப்பொருட்காட்சியில் பங்கு பெற்றன. தொழில்களை - பொறியியல், மின்துறை, பெரிய இயந்திர சாதனங்கள் கழிவுப் பொருள் சுத்திகரிப்பு எனப் பல்வேறு வகையாகப் பிரித்து, 24 கூடங்களிலும், மற்றும் திறந்த வெளிகளிலும், தொழில் நிறுவனங்கள் தங்கள் பொருட்களை விளம்பரப்படுத்துகின்றன. பல தொழில் நிறுவனங்கள் தங்களுடைய பொருட்கள் அனைத்தையும் அழகாக வசீகரமான முறையில் அலங்கரித்து வைத்து மக்களைக் கவருகிறார்கள். மக்களைக் கவரும் வழிமுறைகளை அவர்கள் தான் எவ்வளவு நுணுக்கமாக அறிந்திருக்கிறார்கள்!

**கோபன்ஹேகன்:**

காலையில் ஹானோவரிலிருந்து புறப்பட்டு, டென்மார்க்கின் தலைநகரமான கோபன்ஹேகனுக்குப் போக விமான நிலையத்திற்குச் செல்லவிருந்தபோது, ஹோட்டலில் சொன்னார்கள் - அங்குள்ள விவசாயிகளெல்லாம் சேர்ந்து தங்களுடைய உற்பத்திப் பொருட்கள் விற்பனை ஆகாததால் அவர்களுடைய ட்ராக்டர் மற்றும் வண்டிகளில் ஏறி நகரில் கண்டன ஊர்வலம் வருகிறார்கள் என்று! நம்மூரில் மட்டும்தான் இந்த ஊர்வலங்கள் என்று நினைத்த எனக்கு இது ஒரு இனிமையான அதிர்ச்சி! நல்ல வேளை, விமான நிலையத்திற்குச் சீக்கிரமே புறப்பட்டதால், நேரத்தில் போய்ச் சேர முடிந்தது.

சென்ற இதழ்த் தொடர்ச்சி

இந்த நிலப்பகுதி நல்ல கனிவளங்கள் பெரும்பாலும் பெற்றுள்ளதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. என்றாலும் இயற்கையை மாற்றக்கூடாது என்பதற்காகவும் 'இக்காலஜி' பாதிக்கப்படும் என்பதாலும் அந்தப் பகுதியை அமைதியாக விட்டு வைத்திருக்கிறார்கள். இந்த மாதிரி கவனம் அந்த மக்களிடையே தீவிரமாக இருக்கிறது. இங்கு இருக்கும் அரசு ஜனநாயக அரசு (கான்ஸ்ட்டிடியூஷனல் டெமாக்ரசி) என்றாலும் அரசர் அரசிக்கு மதிப்புக் கொடுத்து வருகிறார்கள். டென்மார்க்கிலிருக்கும் மக்கள் அவையில் கிரீன்

லாந்துக்கும் பிரநிதித்துவம் கொடுத்திருக்கிறார்கள்.

கோபன்ஹேகன் என்ற டேனிஷ் மொழிச் சொல்லின் அர்த்தம் என்ன என்று கேட்டபோது, வர்த்தகர்களின் துறைமுகம் என்று சொன்னார்கள். ஸ்காண்டி நேவியன் நாடுகளின் கேந்திர மாக கோபன்ஹேகன் இருப்பதால் இதை வர்த்தகர்களின துறை முகம் என்று அழைக்கிறாாகள். ஐரோப்பாவில் பெரும்பாலான நகரங்களில் மக்கள் தொகை பத்திலிருந்து பதினைந்து இலட்சம் வரை உள்ளது. கோபன் ஹேகனும் அதற்கு விதிவிலக் கல்ல. இங்கே மக்கள் தொகை 15 இலட்சம் மட்டுமே. இந் நகரம் கி.பி. 1167 ஆம் ஆண்டில் பிஷப் ஆப்சலான் என்பவரால் நிர்மாணிக்கப்பட்டது. இது ஒரு அரசு கேந்திரமாகவும இருந்து வந்திருக்கிறது. டென்மார்க், நெப்போலியனாலும் பிரிட்டிஷ் காரர்களாலும் தாக்கப்பட்ட போது கோபன்ஹேகன் பெரிதும் பாதிக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போரின்போதும் ஜெர் மானியர்கள் இந்நகரத்தைத் தங்கள் ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வந்தார்கள். இப்படியான தாக்குதல்கள் நடந்த பிறகும் இன்று இந்த நகரம் ஒரு பாதிப்புமே நடக்காதது போல மிக அழகாக இருக்கிறது.

ஐரோப்பிய நாடுகளில் அதிக சதவிகித விவசாயம் நடக்கிற இடம் டென்மார்க்காகும். கிட்டத் தட்ட 70 சதவிகிதம் நிலப்பகுதி விவசாயத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது என்றால் நம்பு வதற்கே கடினமாக இருக்கிறது. அதேபோல், பால், மற்றும் பாலைச்சார்ந்த மற்ற உணவுப் பொருட்கள் மிகவும் பிரசித்தம்.

மீன் வளம் அதற்கு அடுத்த இடத்தை வகிக்கிறது. கூட்டுறவுத் துறை மிகவும் வெற்றிகரமாக நடக்கிற இடம் டென்மார்க் காகும். எல்லாவிதமான தொழில் களிலும் கூட்டுறவுத் துறையை அடிப்படையாகக்கொண்டுள்ளது.

டென்மார்க்கின், வெண்ணெய் மீன் மற்றும் ரொட்டி போன்றவை மக்களால் மிகவும் விரும்பப் படுபவை.

டென்மார்க்கில் உள்ள இந்திய உணவுக் கூடத்திற்குச் சென்றேன். பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் நடத்தும் இந்த உணவு விடுதியில் வட இந்தியர்களுமாகச் சேர்ந்து உணவுக் கூடங்களை நடத்தி வரு கிறார்கள்.




**நார்வே:**

டென்மார்க்கின் தலைநகரான கோபன் ஹேகனிலிருந்து நார்வே யின் தலைநகரான ஆஸ்லோவிற்கு ஏப்ரல் 13 ஆம் நாளன்று போய்ச் சேர்ந்தேன். இங்கு எனக்கு அலு வலகப் பணிகள் இருந்தன. ஆஸ் லோவில் உள்ள 'டைனோ இண் டஸ்ட்ரீஸ்' உடனும் 'நார்க்ஸ் ஹைட்ரோ' என்ற நிறுவனத் துடனும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்கு உதவுவது குறித்த பேச்சு வார்த்தை திங்களன்று (14-4-1986) நடந்தது. இந்தப் பேச்சு வார்த்தை வெற்றிகரமாக நடந்தேறியது.

நார்வேயின் தலைநகரம் ஆஸ்லோ. ஸ்காண்டிநேவியன் நாடுகளில் நார்வே முக்கியமானது. நார்வேக்கு 'Land of Mid-Night Sun' அதாவது 'நடு இரவுச் சூரிய நாடு' என்று கூட ஒரு பெயருண்டு. இந்நாடு வட துரு வத்திற்கு அருகிலிருப்பதால் மே மாதத்திலிருந்து ஜூலை மாதம் வரை சூரியன் நடு இரவு வரை மறைவதில்லை! அதேபோல நவம்பர் மாதத்திலிருந்து ஜனவரி மாதம் வரை சூரியன் காலையில் மிகவும் நேரம் கழித்தே உதிக் கிறது!

ஒவ்வொருவருக்கும் வருவாய் அதிகமாகக் கிடைப்பதால் வீட்டு வேலை செய்ய ஆட்கள் வைத்துக் கொள்ளுவது என்கிற நிலையே அங்கு கிடையாது. இரண்டு பேருக்கு ஒரு கார் என்கிற நிலை இங்கு இருக்கிறது.

சாதாரணத் தொழிலாளிக்கும் உயர்ந்த அதிகாரிக்கும் ஊதியத் தில் பெரிய வித்தியாசம் இருப்ப தாகத் தெரியவில்லை. கணவன் மனைவி இருவருமே பெரும் பாலும் வேலைக்குப் போகி றார்கள். ஓய்வு பெறும்போது நான்கில் ஒரு பகுதி ஓய்வூதிய மாகப் பெறுகிறார்கள். தனியார் துறையில் வேலை செய்பவர்கள் கூட 'சோஷியல் செக்யூரிடி ஸ்கீம்' மூலம் ஓய்வு நிதி பெறு கிறார்கள். நடுத்தர வர்க்கத் தினரும் பணக்காரர்களும் ஆண் டுக்கு ஒருமுறை தங்கள் கார் களை மாற்றுகிறார்கள். கீழ் மட்டத்திலிருப்பவர்கள் நான்கு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தங்கள் வாகனங்களை மாற்று கிறார்கள். வீட்டை வெதுவெதுப் பான சூழ்நிலையில் வைத்துக் கொள்வதற்கு ஆகும் செலவு ஒவ்வொருவருடைய ஊதியத்தி லும் ஒரு முக்கியமான பகுதியை ஆக்கிரமித்துக் கொள்கிறது.

சமூகப் பாதுகாப்புத் திட்டத் திற்கும் சுகாதாரப் பாதுகாப்புத் திட்டத்திற்கும் அரசும் தனி யார் துறைகளும் நிறைய செலவு செய்கிறார்கள். இன்சூரன்ஸ் பணத்தைக் கூட தனியார்துறை யினர் கட்டிவிடுகின்றனர். குடி யிருப்பு வசதிக்கும் பணம் தரு கிறார்கள். இங்கு நான் குறிப் பாகக் கவனித்ததில் கீழ்மட்ட நிலையிலிருப்பவர்களும்கூட குடி யிருப்பு வசதிகளை மிக அழகாக வும் தூய்மையாகவும் சுற்றுப் புறத்தை நேர்த்தியாகவும் துப்புர வாகவும் வைத்திருக்கிறார்கள். இது விஷயத்தில் நாம் ஏன் பின் தங்கி நிற்கிறோம் என்பது புரி யாத புதிராகும்!

மற்றொரு முக்கியமான விஷயத்தையும் அங்கு நான் கவனித்தேன் - மிகப் பெரிய பணக்காரர்களாக இருந்தாலொழிய நகரங்களில் தனி வீடுகளில் வசிப்பது இயலாத காரியமாகும். ஆனால் நம்நாட்டிலோ நடு வர்க்கத்தினர் கூட அழகான சிறிய பெரிய மாளிகைகளில் வசிக்க முடிகிறது. வேலைக்காரர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ள முடிகிறது. வாகன ஓட்டிகளை அமர்த்திக் கொள்ள முடிகிறது. இதெல்லாம் அங்கே நினைத்துப் பார்க்கக்கூட முடியாத ஒன்றாகும்!

**ஸ்டாக்ஹோம்:**

பெரும் பணக்காரர்களைத் தவிர - தனியார்கள் தங்களுக்கெனக் கார் டிரைவர் அமர்த்திக் கொண்டிருப்பதை நான் எங்கேயும் பார்க்கவில்லை.

நார்வேயின் தலைநகரமான ஆஸ்லோவிலிருந்து ஸ்வீடன் நாட்டிற்குப் போய்ச் சேர்ந்தேன். ஸ்காண்டிநேவியன் நாடுகளில் ஸ்வீடன் பரப்பளவில் பெரிய நாடு. ஐரோப்பிய நாடுகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஸ்வீடன் நாடு நான்காவது இடத்தை வகிக்கிறது. நார்வேயும் ஸ்வீடனும் அண்டை நாடுகள். ஸ்வீடன் நாடும், வடகடலும், பால்டிக் கடலும் அருகிலிருக்க அமைந்த ஒரு நாடாகும். ஸ்வீடன் நாடும் 'கான்ஸ்டிடியுஷனல் மோனார்க்கி' - அதாவது அரசர் இருக்க குடியரசு கொண்ட ஒரு நாடு.

ஸ்வீடன் நாடு நல்ல கனிவளங்களும் காட்டு வளங்களும் மிகுந்த நாடு. அமெரிக்காவை ஒப்பிடும்படியான காட்டு வளங்கள் முன்னேற்றம் அடைந்த நாடு. ஸ்வீடனின் 'ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்ஸ்' உலகெங்கிலும் பிரபலமடைந்த ஒன்றாகும். உலகத்தில் மிக முக்கிய பேப்பர் தயாரிக்கிற நாடுகளில் ஸ்வீடன் நாடு மிக முக்கிய இடத்தை வகிக்கிறது. இங்கே இருக்கின்றவர்கள் பெரும்பாலும் கிறித்தவர்களாகவே இருக்கிறார்கள்.

ஸ்வீடன் நாட்டின் தலைநகரம் ஸ்டாக்ஹோம். ஸ்டாக்ஹோமில் தமிழ்நாட்டிலிருக்கிற தொழில் வளர்ச்சிக் கழகத்தைப் போல உள்ள அவர்களின் ஸ்வீடிஷ் தொழில் வளர்ச்சிக் கழகம் (அசோசியேஷன்) என்ற நிறுவனத்துடன் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்காக நிதி மற்றும் டெக்னிக்குகள் உதவிகள் பெறுவது பற்றிய பேச்சு வார்த்தைகள் நடத்தினேன்.

அதைப்போலவே ஸ்வீடனில் கார்ல்ஸ்கோசா என்ற நகரத்தில் நோபல் செமடூர் நிறுவனத்திடம் 'பென்டா எரித்ரிடால்' தயாரிக்கின்ற தொழிற்சாலைக்கான முன்னேற்றம் குறித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தினோம்.

ஸ்டாக்ஹோம் போய்ச் சேர்ந்தபோது மிகவும் குளிராக இருந்தது. சீதோஷ்ண நிலை 6° செல்சியஸ் ஆக இருந்தது. ஆனால் வானம் நிர்மலமாக இருந்ததால் சூரியனைக் காண முடிந்தது. நாம் கேரளாவில் காண்பதைப் போல கடல் நிலத்திற்குள் புகுந்து வருவதுபோல இங்கும் 'பேக் வாட்டர்ஸ்' 150 கிலோ மீட்டர்ஸ் கூட வருவதாக அறிந்தேன். இந்த 'பேக் வாட்டர்ஸ்களில்' கூட போக்குவரத்துக்காகவும், மற்றும் சாமான்கள் ஏற்றி அனுப்புவதற்காகவும் மிக அருமையான ஏற்பாடுகளைச் செய்து பயன்படுத்திக் கொள்கிறார்கள்.



ஸ்வீடன் நாடு வெல்பேர் சொசைட்டி அடிப்படையில் அமைந்த நாடு. அதனால் குழந்தைகள் தங்களுடைய 18-19 வயதிலேயே தங்களுடைய பெற்றோர்களைப் பிரிந்து அரசாங்கத்திடமிருந்து கடன் வாங்கிப் படிக்கிறார்கள். அரசிடமிருந்து பெற்ற பணத்தை அவர்களுக்கு வேலை கிடைத்தவுடன் சிறுகச் சிறுக திரும்ப அரசுக்குச் செலுத்தி விடுகிறார்கள். இந்த நல்ல திட்டத்தின் மூலம் ஒவ்வொருவரும் தனித்தன்மை அடைந்து முன்னேற வழி ஏற்படுகிறது. ஆனால் அதே சமயம் குழந்தைகள் பெற்றோரைப் பிரிந்து, அதன் பிறகு ஏதோ மூன்றாவது மனிதரைப் பார்ப்பது போலப் பார்க்கும் நிலை ஏற்படுகிறது. ஒரு வழியில் நன்மை தரத்தக்க ஒரு செயல் இன்னொரு விதத்தில் தீமையை ஏற்படுத்துகிற விந்தையை இங்கு நான் கண்டேன். நம்நாட்டிலும் சில காரியங்கள் அப்படித்தான் நடக்கிறது. குடிசை வாழ்வோருக்கான வீடு கட்டிக் கொடுத்தால் அதை வாடகைக்கு விட்டுவிட்டு மறுபடியும் குடிசையிலேயே வாழ்கிற மக்களை நாம் இங்கே பார்க்கிறோம். அதைப் போலத்தான் இதுவும்!

எல்லாவித நாகரிகமும் பாரிஸ் நகரிலிருந்துதான் உதயமாகிறது என்று சொல்கிறார்கள். அது மட்டுமல்ல; உலகத்தின் மிக முக்கிய நகரங்கள் என்று சொல்லும்போது, பாரிஸ், லண்டன், நியூயார்க், டோக்கியோ என்றுதான் வரிசைப்படுத்திச் சொல்லுவார்கள். அப்படி உலகின் அதி அற்புதமான நகரங்களில் ஒன்றான பாரிஸ் முழுவதையும் கடமையின் முக்கியத்துவத்தால் பார்க்க முடியாவிட்டாலும் பாரிஸை ஓரளவுக்குச் சுற்றிப் பார்த்தோம்.

பாரிஸ் ஓபரா ஹவுஸ், ஈபிள் டவரை அடுத்து குறிப்பிடத்தக்கது ஆகும். ஓபரா 1861-ல் ஆரம்பிக்கப்பட்டு கட்டி முடிக்கப்பட்டபோது அந்த ஓபரா ஹவுஸ் உலகத்திலேயே மிகப் பெரிய ஒன்றாக அமைந்தது. இதன் மேடையில் மட்டும் 450 பேர் அமர்ந்து படிக்க முடியும். என்பதை அறிந்தால் இந்த ஓபரா ஹவுசின் பெருமையை அறிய முடியும். அது மட்டுமல்லாமல் இந்த ஓபரா ஹவுஸ் அவ்வளவு அழகாக அலங்கரிக்கப்பட்டிருக்கிறது!

இங்கு இன்னொரு முக்கியமான இடம் 'வெற்றி வளைவுச் சின்னம்' (Arch of triumph). இந்த வெற்றி வளைவுச் சின்னத்திலிருந்து புறப்படுகிற எலிசிஸ்

நிழற்சாலை உலகத்திலிருக்கிற அழகுச் சாலைகளிலெல்லாம் மேலான அழகு வாய்ந்த ஒன்றாகும்.

இதைத் தவிர எத்தனையோ அரண்மனைகள், கட்டடங்கள் பாரிசில் மலிந்து கிடக்கின்றன. அவைகளைப் பற்றியெல்லாம் தனித்தனியே விரிவாக ஒரு புத்தகமே எழுதலாம்!

**பாசல்:**

ஸ்விட்சர்லாந்து மிகச் சிறிய நாடுதான். சொல்லப் போனால் இந்த மொத்த நாட்டையும் கிட்டத் தட்ட நான்கு அல்லது ஐந்து மணி நேரத்தில் இரயிலிலோ அல்லது காரிலோ கடந்து விட முடியும். அப்படியிருந்தும் ஸ்விட்சர்லாந்து உலக மறிந்த நாடாகத் திகழ்கிறது.

இந்நாடு பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்ட்ரியா, இத்தாலி ஆகிய நாடுகளின் ஒரு கூட்டுநாடு என்று சொல்லுகிறார்கள். இங்குள்ள மக்கள் பிரெஞ்சு மொழி, இத்தாலி மொழி, ஜெர்மனி மொழி ஆகியவற்றைப் பேசுகிறார்கள். 1291-ஆம் ஆண்டு முதல் இந்த நாடு தனித்து இயங்கி வருகிறது. இவர்களுடைய திறமை உலகப் புகழ்பெற்றஒன்றாகும். அவர்கள் அதற்குச் சொல்லும் முக்கியமான காரணம்-பேச்சுக்குறைவு; செயலில் நிறைவு என்பதே. ரஷியாவும், அமெரிக்காவும்சேர்ந்துபேச விரும்பினால் அவர்கள் ஸ்விட்சர்லாந்து நாட்டில் ஜெனிவா நகரத்தில் கூடுகிறார்கள்.

ஸ்விட்சர்லாந்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கு மூன்று காரணங்களைச்சொல்கிறார்கள். முதலாவது காரணம் - உலகத்தின் பல மூலைகளிலிருந்தும் பணக்காரர்கள் ஸ்விட்சர்லாந்து வங்கிகளில்தான் தங்கள் பணத்தைப் போட்டு வைக்கிறார்கள். அதற்குக் காரணம் இந்த வங்கிகளில் உள்ள அலுவலர்கள் யார் பணம் போட்டு இருக்கிறார்கள் என்பதை எவருக்கும் தெரிவிக்காமல் ரகசியமாக - நம்பிக்கையாக வைத்திருக்கிறார்கள்.

இரண்டாவது காரணம்-ஸ்விட்சர்லாந்து கடிகாரங்கள் உலகப் புகழ் பெற்றவை.

மூன்றாவது காரணம்-ஸ்விட்சர்லாந்து வரும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கையினால் அந்நாட்டுக்கு ஏற்படும் நன்மைகள்.

ஸ்விட்சர்லாந்து, கால்நடைப் பெருக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் பெயர் பெற்றது.

ஸ்விட்சர்லாந்து நகரமான பாசலில் கடிகாரங்கள் தயாரிப்பதற்கான பேச்சு வார்த்தைகள் தொழில் நுட்ப ஒப்பந்தம் ஆகியவைகளைச் சுமுகமாகப் பேசி முடித்தேன். நான் சென்றிருந்த நேரத்தில் பாசல் நகரில் கடிகாரக் கண்காட்சி நடந்துகொண்டிருந்ததால், தங்குவதற்கு ஓட்டலே கிடைக்கவில்லை. எனவே அங்கிருந்து 20 மைல் தொலைவில் இருக்கும் பிரான்ஸ் நாட்டின் சிறு நகரமான 'முல்ஹவுசில்' தங்கி ஒவ்வொரு நாளும் ஸ்விட்சர்லாந்து போய் வந்து கொண்டிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஸ்விட்சர்லாந்து வர்த்தக, கலாச்சார மேம்பாடுகளில் பாசல் நகரமே மிக முக்கியமானது என்று சொல்கிறார்கள்.

பாசல் நகரம் பிரெஞ்சு எல்லையில் இருப்பதால் பாசல் நகர ரயில் நிலையமும் பாசல் நகர விமான நிலையமும் இரண்டாகப் பிரிக்கப்பட்டு இருக்கின்றன. ஒரு பகுதி பிரெஞ்சு ரயில் நிலையமாகவும் மற்றொரு பகுதி ஸ்விட்சர்லாந்தாகவும் இருக்கிறது. அது போல ஒரு பகுதி ஸ்விட்சர்லாந்து விமான நிலையமாகவும் மற்றொரு பகுதி பிரெஞ்சு விமான நிலையமாகவும் இருக்கின்றன!

இரண்டாவது உலக மகா யுத்தத்தில் சேதமடையாத நாடான ஸ்விட்சர்லாந்திலிருக்கிற வங்கிகள் பல ஒன்று சேர்ந்து 'கன்சார்டியம்' என்ற முறையில் செயல்படுகின்றன. அப்படிச் செயல்படுவதால் பல நாடுகளின் அரசாங்கங்கள் கூட இந்த நாட்டு வங்கிகளில் கடன் வாங்குவதைக் காணலாம். அதேபோல ஸ்விட்சர்லாந்து நாட்டு மாநகராட்சி கூட, பாசல் நாட்டு வங்கிகளிலும் கடன் வாங்குகின்றன. எல்லா நாட்டுப் பணமும் இப்படி ஸ்விட்சர்லாந்து நாட்டுக்கு வந்து மறுபடியும் மற்ற நாடுகளுக்குப் போவது வேடிக்கையாக இருக்கிறது.



அதே சமயத்தில் ஸ்விட்சர்லாந்துக்கு இவை வருவாயாக அமைகின்றன.

பாசல் நகரத்தில் 'Bank for International settlement' என்ற ஒரு அமைப்பு இருக்கிறது.

இங்கே 'கார்னிவல்' மிகப் பிரசித்தம் பெற்றது. பாசல் நகரத்திலிருக்கும் மிருகக்காட்சி சாலையும் மிக உயர்வாகக் கருதப்படுகிறது.

**இத்தாலியின் முக்கிய நகரங்களில் எனது பணிகள்:**

இத்தாலி நாட்டின் வர்த்தக மையங்களில் தொழில் துறையில் எனக்காகப் பல பணிகள் காத்திருந்தன.

மத்தியதரைக் கடலுக்குள் வடமேற்கிலிருந்து தென்கிழக்காகச் சுமார் 725 மைல் நீண்டு கிடக்கும் நிலப் பரப்பே இத்தாலி ஆகும்.

இத்தாலியின் நில வளம் இந்திய நாட்டோடு சில வகைகளில் ஒத்துக் காட்சியளிக்கிறது. நமது நாட்டின் வட எல்லைக்கு இமய மலை அரணாக விளங்குவது போல், இத்தாலி நாட்டின் வடபாகத்தில் ஆல்ப்ஸ் மலைகள் அமைந்துள்ளன.

நமது நாட்டைப் போன்றே இத்தாலியின் தென் பகுதியான கடற்கரை நிலம், ஏறக்குறைய 8500 கிலோ மீட்டருக்குக் கடலைத் தொட்டுக்கொண்டிருக்கிறது. இந்தியாவைப் போன்று இத்தாலியும் ஓர் வேளாண்மை நாடு. தொழில் துறையிலும் இந்நாடு முன்னேற்றம் பெற்றுள்ளது.

இத்தாலியின் வட பகுதியிலும் ஏராளமான நவீன தொழிற்சாலைகளும் நவீன முறையில் தீவிரமாக நடைபெறும் விவசாயமும் வளர்ச்சியடைந்துள்ளன. அதே சமயத்தில் அந்நாட்டின் தெற்குப் பகுதியில் பண்டைக் கால முறையிலேயே விவசாயம் நடைபெறுகின்றது. நிலப் பிரபுத்துவ உறவுகளின் மீத மிச்சங்கள் இன்றும் நீடிக்கின்றன.

மேற்கு ஐரோப்பாவிலுள்ள பெரிய நாடுகளைக் காட்டிலும் கால தாமதமாகவே இத்தாலி முதலாளித்துவத் தொழில் வளர்ச்சிப் பாதையில் செல்லத் துவங்கியது. இத்தாலியின் தொழில் வளர்ச்சி, அதன் ஏகாதிபத்தியத் திட்டங்களோடும், உலகப் போர்களில் அது கொண்டிருந்த பங்கோடும் சம்பந்தப்பட்டிருந்தது.

போர் முடிந்த பிறகு, இத்தாலி தொழில் துறையில் வியக்கத் தக்க முறையில் வளர்ந்தது. உற்பத்தி வேகமாகப் பெருகியது இத்தாலியில் இன்று பொறியியல் இயந்திரங்கள், இரும்பு அல்லாத உலோகங்கள், இரசாயனப் பொருட்கள், தொகுப்புப் பொருட்கள் ஆகியவை முக்கியமாகப் பெருமளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

மோட்டார் வாகனங்கள், கப்பல் கட்டும் தொழில்கள் முன்னேற்றமாக நடைபெற்று வருகின்றன. அத்துடன், ஆடைகள், காலணிகள், சில உணவுப் பொருட்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதிலும் இத்தாலி சிறப்புடன் விளங்குகிறது.

உலகத்திலேயே அதிகமாக எலுமிச்சைப் பழ வகைகளை உற்பத்தி செய்யும் நாடு இத்தாலிதான்!

இத்தாலியின் பொருளாதாரத்திற்கு வெளிநாட்டு வணிகம் மிகமிக முக்கியமானதாகும். மூலப் பொருட்கள் போதிய அளவு உள்நாட்டில் கிடைக்காததால், ஏற்றுமதியைக் காட்டிலும் இறக்குமதி அதிகமாகஇருக்கிறது. எண்ணெய், இரும்பு, உலோகத் தாதுப் பொருட்கள், வார்ப்பு இரும்புப் பாளங்கள், பருத்தி, தோல் இன்னும் பல பொருட்களை இத்தாலி இறக்குமதி செய்கிறது. மோட்டார் வாகனங்கள் பலவகையான இயந்திரங்கள், மின் இயங்கிக் கருவிகள், ஆடைகள் பழவகைகள், மருந்துகள் ஆகியவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

ஸ்விட்சர்லாந்தின் முக்கிய நகரமான ஜூரிச்சிலிருந்து இத்தாலியின் வர்த்தக மையமான மிலான் நகரை 24-4-86 அன்று இரவு சென்றடைந்தேன். மிலான் சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு அருகிலுள்ள மைக்கேல் ஆங்கிலோ என்ற மிகப் பெரிய நவநாகரிகமான விடுதியில் தங்கினேன். மறுநாள் காலை அங்கு உலக நிறுவனமான 'பாஸ்டர் வீலர்' அலுவலகத்தில் ரீபாம்பஸின் என்ற முக்கியமான மருந்து தயாரிப்பதற்குரிய பேச்சு வார்த்தையைத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் நடத்தினேன். பேச்சு வார்த்தைகள் மிகச் சுமுகமான முறையில் நடந்தன.



ரீபாம்பஸின் என்ற இம்முக்கியமான மருந்து நம்நாட்டில் அடிமட்டத்திலிருந்தே ( Basic Stage ) தயாரிக்கப்படவிருக்கிறது. இது நம் மக்களுக்கு ஒரு மிக முக்கியமான மருந்தாகும். எலும்புருக்கி நோய்க்கும் (டி.பி.) தொழுநோய்க்கும் இந்த மருந்து நிவாரணியாக விரிவாகப் பயன்படுத்தப்படுகிறது. இம்மருந்து ஆண்டு ஒன்றுக்குக் கிட்டத்தட்ட 80-லிருந்து 100 டன் வரை தற்போது இறக்குமதி செய்யப்படுகிறது. இந்த அளவானது கிட்டத்தட்ட உலக உற்பத்தியில் பாதியானதாகும். இதை அறியும் போது நாம் இம்மருந்து தயாரிக்க முயல்வது எவ்வளவு அவசியமானது என்று அறிந்தேன்.

அதுவும் நம் தமிழ்நாட்டில் இந்த மருந்து தயாரிக்கப்பட்டு, இந்தியா முழுவதற்குமே விநியோகம் செய்யப்பட வேண்டும் என்ற பெரு நோக்கத்தோடு இந்தத் திட்டத்தில் ஈடுபடும் போது, பெரும் நிறைவு ஏற்படுகிறது. இந்தத் திட்டத்திற்கு நமது மதிப்பிற்குரிய தலைவர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்களின் முழு ஆசி உண்டு என்று நினைக்கும் போது பெரு மகிழ்ச்சி அடைந்தேன்.

பேச்சு வார்த்தைகள் நகரத்தின் மையத்தில் பாஸ்டர்வீலரின அலுவலகத்தில் காலை 11 மணி அளவில் ஆரம்பித்து மதியம் ஒரு மணி அளவில் நீடித்தது.

பேச்சு வார்த்தை நல்ல முறையில் நடந்தேறியது. கிட்டத்தட்ட நாலு மணிவரை இந்த ஓட்டலில் தங்கினேன். பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்டவர்களுக்குத் தமிழகத்திலிருந்து கொண்டுபோன கலைப்பொருட்களை அன்பளிப்பாக அளித்தேன். பேச்சு வார்த்தை முடிந்தபோது பாஸ்டர் வீலர் நிறுவனத்தார் பிரியாவிடை கொடுத்தனுப்பினார்கள்.

25-4-1986 அன்று இத்தாலியின் தேசிய விடுமுறை தினமாகும். இதை ஒரு முக்கிய விடுமுறை நாளாகக் கருதுகிறார்கள். ஐரோப்பாவில் விடுமுறை நாட்களில் எந்த அலுவலகமும் திறப்பதில்லை. அதேபோல எந்த அலுவலக அதிகாரியையும் சந்திக்கவும் முடியாது. வீட்டிலும் போய் யாரையும் பார்ப்பதும் மிகவும் அரிதானதாகும். அப்படி இருந்தும், 'பாஸ்டர் வீலர்' நிறுவனத்தார் அலுவலகத்தைத் திறந்து வைத்ததோடு மட்டுமல்லாமல் தொழில் வல்லுநர்களையும் அழைத்து வந்து அறிமுகம் செய்து வைத்துத் தங்கள் தொழில் துறையைப் பற்றி விளக்கங்கள்அளித்தார்கள்.

**ரோமாபுரி:**

ரோமாபுரியை நான் முதன் முதலில் அறிந்தது, அறிஞர் அண்ணா அவர்களின் எழுத்துக்களில்தான். ரோமாபுரியை நினைத்தாலே அரசியல் ரீதியாக நம் நினைவிற்கு வந்து நிற்போர் ஜூலியஸ் ஸீசர், மார்க் அந்தோணி, புரூட்டஸ், பாம்பே, அகஸ்டஸ், கிளாடியஸ், அறிஸயஸ், நீரோ ஆகியோரும் ரோம் அரசியலை ஆட்டிப் படைத்த கிளியோபாத்ராவும் ஆவர்.

இவர்கள் மட்டுமின்றி கி.மு. 754-ல் ரோம் நகரை உருவாக்கிய ரோமுலஸ் என்பாரும் நம் நினைவில் நிற்கத் தகுந்தவர். ரோமை ஆண்ட முதல் அரசரும் அவரே ஆவார்.

ரோமில் முக்கியமான இடங்களைப் பற்றி எழுதுவது என்றால் எதைப் பற்றி எழுதுவது, எதை விடுவது என்ற குழப்பமே மிஞ்சும்.

ஏப்ரல் 4-ஆம் தேதி - நான் என் கடமையின் காரணமாகத் தொடங்கிய வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் 30-ஆம் தேதியில் முடிவுற்றது. நான் சுற்றுப் பயணம் செய்தமேற்கு ஜெர்மன், டென்மார்க், நார்வே, ஸ்வீடன், பிரான்ஸ், ஸ்விட்சர்லாந்து, இத்தாலி ஆகிய நாடுகளில் நான் மேற்கொண்ட பயணம் அலுவல் ரீதியாக அமைந்தாலும், அங்கெல்லாம் கண்டதையும் கேட்டுணர்ந்ததையும் இதுவரை மிகச் சுருக்கமாக விவரித்தேன்.-'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற ரீதியில்! தொழில் வளர்ச்சியைப் பொறுத்தமட்டில், 'வழிகாட்டும் வெளிநாடுகள்' சென்று வந்த மகிழ்ச்சி என் நெஞ்சம் நிறைந்திருக்கிறது.

பார்த்தோம்! படித்தோம்!

1-8-'86 தமிழரசின் அட்டைப் படம் எல்லோரும் ஒற்றுமையுடன் வாழ வேண் டும் என்பதை மிகவும் சிறப் பாக எடுத்துக் காட்டிற்று. 'அறிவியல் சாளரம்' பகுதியில் கருத்து மிக்க செய்திகள் இரண்டு கண்டேன். 'தியாக தீபங்கள்' கூறியிருந்த கருத்துக் களையும் படித்து உணர்ந் தேன்.

—எஸ். பி. சந்தானகோபால், களப்பாள்.

'எல்லோரும் இந்தியரே' என்ற ஒருமைப்பாட்டுச் சின்ன மாதத் 'தமிழரசு' அட்டைப் படம் சித்திரிக்கப்பட்டது பாராட்டுக்குரியது.

—இடவை. செம்பியன், சீர்காழி.

சுதந்தர வேள்வியில் குதித்து உயிர் நீத்த நடிகர் திலகம் விஸ்வநாததாசின் தேசப் பற்றை எண்ணி எண்ணி இதயம் துடித்தது.

—ஆர். அத்தியப்பன், மூணுசாவடி.

முன்னாள் முதல்வர் திரு எம். பக்தவத்சலம் அவர்கள் 'தியாக தீபங்கள்' என்ற கட் டுரையில் தமது சுதந்திரப் போராட்ட நினைவு பற்றிக் கூறியதைப் படிக்கும்போது, நமது முன்னோர்கள் சுதந்திர இந்தியாவைக் காண எவ்வளவு துன்பங்களை அடைந்தார்கள் என்று உணர முடிந்தது.

—சொ. முத்தமிழ்வாணன், தஞ்சாவூர்.

விடுதலை இயக்கப் பாடல் கள் மற்றும் பாரதியின் பாடல் களை வெளியிட்டமைக்கு நன்றி.

—டி. கே. பாஸ்கரன், வேலூர்.

''பட்டொளி வீசும் பண்பாட் டுத்துறை'' தலைப்பில் தவத் திரு குன்றக்குடி அடிகளார் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு ''திருவள்ளுவர் விருதினை'' அளித்த செய்தியும், படமும் மிகச் சிறப்பாக வெளியிடப் பட்டிருந்தன.

—டி. சுப்பிரமணியன், கோயம்புத்தூர்.

# மாநில முதன்மைக் கணக்காயர் (கணக்கு மற்றும் பணிவரவு) தமிழ்நாடு

## 261, அண்ணாசாலை, சென்னை-600 018.

### அரசு ஊழியர் வருங்கால வைப்பு நிதி 1985-86ஆம் ஆண்டுக்கான கணக்கு அறிக்கைகள்

மாநில முதன்மைக் கணக்காயர், தமிழ் நாடு அவர்கள், மாநில அரசு ஊழியர்கள் அனைவருடைய பொது வருங்கால வைப்பு நிதியின் (GPF) 1985-86ஆம் ஆண்டுக்கான கணக்கு அறிக்கைகளை (அக்கௌண்ட் சிலிப்) அனுப்பத் தொடங்கியுள்ளார்கள்.

இந்த அறிக்கைகள், அரசு ஊழியர்கள் 1986ஆம் ஆண்டு மார்ச் மாதம் எந்த அலு வலகத்தில் பணிபுரிந்தார்களோ, அந்தந்த அலு வலகத் தலைமை அதிகாரிகளுக்கு அனுப்பப் பட்டு வருகின்றன. ஆகவே தமிழக அரசு ஊழி யர்கள் அனைவரும் சம்பந்தப்பட்ட அதிகாரி களுடன் தொடர்பு கொண்டு தத்தம் கணக்கு அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கணக்கு அறிக்கைகள் முழு அளவு நிறைவுடன் தயாரிக் கப்பட்டுள்ளன. தவிர்க்க முடியாத காரணங் களினால் சில கணக்கு அறிக்கைகளில் குறை பாடுகள் காணப்படலாம். அப்படி கணக்கு அறிக்கைகளில் ஏதாவது குறைகள் காணப் படுமேயானால், அந்தக் குறைகளை நிவர்த் திக்க, சம்பளப் பட்டியல் விவரங்களுடன் கீழ்க் கண்ட முகவரிக்கு எழுதும்படி கோரப்படு கிறார்கள். கணக்கு அறிக்கைகள் 30.9.86 வரை கிடைக்காவிட்டாலும் கீழ்க்கண்ட முக வரிக்கு உடனே எழுதவும்.

திரு டி. எம். பத்மனாபன்,
கணக்கு அலுவலர், (எப்.எம். I பிரிவு)
மாநில முதன்மைக் கணக்காயர் அலுவலகம்,
261, அண்ணா சாலை,
சென்னை-600 018.

## செஞ்சிச் செல்வன்

ஆசிரியர்: கோவி.மணிசேகரன்

வெளியீடு: மயிலவன் பதிப்பகம்
17, கங்கைஅம்மன்
கோயில் தெரு,
வடபழனி,
சென்னை-600 026

விலை : ரூ. 12.50. பக்:172

மாவீரன் தேசிங்கு ராஜனின் கதையும், குமரிக்கண்டத்தின் கதையுமாக இரண்டு குறுநாவல்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. சரித்திரச்சான்றுகளுடன் கற்பனையும் சேர்த்து தனக்கே உரிய பாணியில் மிக அழகாக எழுதி இருக்கிறார் ஆசிரியர்.

தேசிங்கின் அஞ்சா நெஞ்சம் மட்டுமல்ல, அவனது மென்மையான இதயத்தின் பாசம், நட்பு, காதல் ஆகியவையும் அழகுற விவரிக்கப்பட்டிருக்கின்றன. கதாநாயகியின் பெயர் சங்கராபரணி. மீண்டும்மீண்டும் சொல்லிப் பார்க்கத் தூண்டும் பெயர். இறுதியில் மகமத்கான், தேசிங்கிற்கு நேரும் முடிவுகள் நம் இதயத்தைக் கனக்க வைக்கின்றன.

விமானம் ஒன்றுடன் கடன்மாவில் புறப்பட்டு குமரித்தீவை வெற்றி கண்டு பரிசோடு திரும்பும் பாண்டிய இளவரசன் திருமாறனின் பராக்கிரமங்களைக் கூறுகிறது இரண்டாவது கதை.

ஆதிகாலத் தமிழர்களின் நடை, உடை, பண்பாடுகள் கதையோடு கதையாகச் சொல்லப்பட்டிருப்பது அழகு. இந்நூல் பொழுது போக்கிற்காகக் கதைபடித்தோம் என்றில்லாமல், வழக்கில் இல்லாத நல்ல பல புதிய தமிழ்ச் சொற்களையும் அறிந்து கொள்ள உதவுகிறது.

—மாலா

## ராமமூர்த்தி :

ஆசிரியர் : எஸ். வீ. வி.

வெளியீடு: அல்லயன்ஸ் கம்பெனி
த.பெ.எண். 617
மயிலாப்பூர்,
சென்னை-4.

பக்: 380. விலை ரூ. 28.

"நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்" என்று பாவேந்தர் பாரதிதாசன் கூறியுள்ளார். இளைய மனைவியின் முரண்பட்ட போக்கினால் அல்லலுறும் குடும்பத்தினரை அன்பு ஒன்றினாலேயே அரவணைத்துச் செல்லும் ஒரு குடும்பத் தலைவனின் கதை இது. பழமையினைப் பின்னணியாக வைத்து எழுதப்பட்டு இருந்தாலும் சுவையான சம்பவங்களினால் விறுவிறுப்பாகச் செல்கிறது.

இந்நாவலின் நாயகி உமா சிறிய பெண்ணாக இருப்பினும் தன் மனதுக்கு இசைந்தவனை மணக்கும் முன் குடும்பத்தில் அவன் பொறுப்புகளை உணரச் செய்து பெற்றோரும் உற்றவரும் மகிழும் வண்ணம் அவனை மனிதனாக்குகிறாள்.

இத்தகைய நல்ல கதையம்சம் உள்ள இதுபோன்ற நாவல்கள் பெரிதும் வரவேற்கப்பட வேண்டியவை. பொறுப்புணர்ந்து செயல்பட இதுபோன்ற நல்ல நூல்களே நமக்கு வழிகாட்டும். இக்கால இளைய தலைமுறையினர் கட்டாயம் படிக்க வேண்டிய நூல் இது.




## முல்லாவின் வேடிக்கைக் கதைகள்

ஆசிரியர் : முல்லை பி. எல். முத்தையா.

வெளியீடு: நியூ செஞ்சுரி புக்
ஹவுஸ் பிரைவேட்
லிமிடெட்,
41பி சிட்கோ
எஸ்டேட்,
சென்னை-600 098.

பக் 192 விலை ரூ12

முல்லாவின் கதைகள் பல மொழியினராலும் பல நாட்டவராலும் விரும்பி வரவேற்கப்படுபவை. கதைகள் மிகச் சிறியதானாலும் ஒவ்வொன்றும் அரிய கருத்தினைக் கொண்டுள்ளது. இத்தொகுப்பில் 130 கதைகள் உள்ளன.

கேலியும் நகைச்சுவையும் கலந்த இக்கதைகள் சிறந்த நீதிகளைப் போதிக்கின்றன. முல்லாவின் கதைக்கே உரிய தனிச் சிறப்பு இது! சிறுசிறு நிகழ்ச்சிகளைக் கொண்ட இச்சிறுகதை சிரிக்க மட்டுமின்றி நம்மைச் சிந்திக்கவும் வைக்கின்றன. வெறும் பொழுதுபோக்கிற்கு உதவுவதுடன் தெளிவான சிந்தனையையும் தூண்டிவிடக் கூடிய இத்தகைய கதைகள் அவசியமானவை என்றே கூறலாம்.

எந்தப் பருவத்தினரும் எத்தகைய சூழ்நிலையிலும் படித்து இன்புறத் தக்க இனிய சிறுகதைகளின் தொகுப்பு இது.

—ஜி. பாஸ்கரன்

## இந்திய எரிசக்தி வளங்களின் மேம்பாடு சோவியத் உதவி

ஆசிரியர்: எஸ்.ராமச்சந்திரன்,
(மாண்புமிகு தமிழக மின்துறை அமைச்சர்)

வெளியீடு: நியூ செஞ்சுரி புக்
ஹவுஸ் பிரைவேட்
லிமிடெட்,
41பி, சிட்கோ
எஸ்டேட்,
சென்னை-600098

விலை ரூ. 10 பக்: 97

ஒரு நாட்டின் சக்தித் தேவைகள் அனைத்தும் பிரதானமாக நிலக்கரி, பெட்ரோலியம், எரிவாயு, மின்சாரம் ஆகியவற்றின் மூலமே நிறைவு பெறுகின்றன.

'எகிப்தின் பிரம்மாண்டமான பிரமிட் ஒன்றை உருவாக்குவதற்கு இருபது ஆண்டுகள் பயன்படுத்திய சக்தியினை, சாட்டர்ன்-5 ராக்கெட் ஏவப்பட்ட இரண்டு நிமிடங்களில் பயன்படுத்தியது' என்பன போன்ற புள்ளி விவரங்கள் நம்மை வியக்க வைக்கின்றன.

சுதந்திரத்திற்குப்பின் நம் நாடு எரிசக்தித் துறையில் அடைந்துள்ள முன்னேற்றத்தையும், அதற்காக உலகின் முதல் சோஷலிச நாடான சோவியத் யூனியன் எந்த அளவுக்கு உதவி புரிந்திருக்கிறது என்பதையும் விளக்கும் முயற்சியே இந்நூல் என்று முன்னுரை கூறுகிறது. அம்முயற்சி மிகச்சிறந்த முறையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

## வெறும் மனிதர்கள்

ஆசிரியர் :
ஹேமா ஆனந்ததீர்த்தன்

வெளியீடு: மயிலவன் பதிப்பகம்,
17, கங்கை அம்மன்கோயில் தெரு,
வடபழனி,
சென்னை-600026.

விலை ரூ. 8.00 பக்கம் 112

தமிழ்நாட்டின் பெயர் பெற்ற எழுத்தாளர்களில் இந்நூலாசிரியரும் ஒருவர். ஆனால் அண்மைக் காலமாக இவர் எழுத்துக்களில் கவர்ச்சி நெடி வீசுவதாகக் கூறப்படுகிறது. அதைப் பொய்யாக்குவதுபோல் நயம்பட எழுதப்பட்டிருக்கிறது இந்தப் புதினம்.

'அக்காளைப் பெண் பார்க்க வருகிற மாப்பிள்ளை தங்கையிடம் மனதைப் பறிகொடுத்து விடுகிறான். இன்னொரு விசேஷம் அந்தத் தங்கையும் அவனை அத்திம்பேரே என்பதைவிட அத்தான் என்று அழைத்து உரிமை கொண்டாடவே விரும்புகிறாள். கடைசியாக அக்காள் தனியாக, அவனும் அவளும் ஒன்றாகிறார்கள்!'

—இதுதான் இப் புதினத்தின் முக்கிய இழை. சம்பவங்கள் கதையைப் பெரிதாக்குகின்றன.

கதாபாத்திரங்கள் -அட்டைப் படத்தோடு மட்டுமல்ல; நம் மனதோடும் ஒட்டவில்லை. கதாநாயகன், முன்பகுதியில் ஒருவிதமாகவும் பின்பகுயில் வேறொரு விதமாகவும் பணிபுரிவதாகக் காட்டப்படுகிறான். இடையில்ஒரு அத்தியாயத்தில் ஊரறிந்த எழுத்தாளனாகவும் பேசப்படுகிறான். அவனுக்கு மட்டுமல்லாமல் இப்படிப்பட்ட மனத்தடுமாற்றங்கள் நமக்கும் உண்டாகின்றன.

தங்குதடையில்லாத நடையில் கதை சொல்லப்படுகிறது; சில இடங்கள் நம் நெஞ்சையும் நெருடுகிறது; ஆனாலும் நாவல் மிகமிக சாதாரணம்தான்.

—அ. மருது

## புலனடக்கம்

ஆசிரியர்: மகாத்மாகாந்தி.

வெளியீடு: காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை-652020,

விலை ரூ. 7 பக்கம்: 150

மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த, குடும்ப நலத்தைக் கடைப்பிடிக்க உலகமே முனைப்புடன் செயலாற்றி வருகிறது. அதற்காகக் கருத்தடைச் சாதனங்களும் உள்ளன. அறுவைச் சிகிச்சைகளும் செய்யப்படுகின்றன. என்றாலும், மேலும் மேலும் குழந்தைகள் பெறுவதைத் தடுக்கப் புலனடக்கத்தாலும் முடியும். ''எண்ணம், சொல், செயல் மூன்றிலும் எந்தக் காலத்திலும், எந்த இடத்திலும் எல்லாப் புலன்களையும் அடக்கி யாளுவதே பிரம்மச்சரியம்'' என்பது காந்தியடிகள் கொள்கை.

அதிகக்குழந்தைகளைப்பெற்றுக் கொள்வதைத் தடுத்துக் கொள்ளவும், உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளவும், அதன் மூலம் நீண்ட ஆயுளைப் பெறவும் புலனடக்கம் ஒன்றாலேதான் முடியும் என்பதை இந்நூல் உறுதியாகக் கூறுகிறது.

அண்ணல் காந்தியடிகள் 'யங் இந்தியா' ,'ஹரிஜன்' ஆகிய இதழ்களில் எழுதிய சில கட்டுரைகளின் தொகுப்பாக விளங்கும் இந்நூலில்—

''நீங்கள் மணமானவர்களாக இருந்தால் ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். உங்களுடைய மனைவி, போகம் துய்ப்பதற்கான ஒரு கருவியல்ல; அவள் உங்களுடைய சிநேகிதை; துணைவி; உங்களுடன் சேர்ந்து வேலை செய்யும் ஒரு சகபாடி'' என்று வரும் வாசகத்தைக் கோடிட்டுக் கொள்ள வேண்டும்.

—பி. வி. கிரி

## சிந்தனைப் பூக்கள்

ஆசிரியர்: ஆர்.சி.தமிழன்பன்,

வெளியீடு: கோமதி பதிப்பகம்;
247, அவ்வைசண்முகம்சாலை
சென்னை-86,

விலை ரூ.10 பக்கம்:112

மனித இனத்திடம் குடிகொண்டிருக்கும் பண்புகள் குறித்தும் மனிதனைச் சுற்றிச் சூழ்ந்துள்ள சில பொருள்கள் குறித்தும் தமது சிந்தனைத் தேரை ஓடவிட்டு, அரிய செய்திகளை அளித்திருக்கிறார் நூலாசிரியர்.

நிலம் முதல் மகிழ்ச்சிவரை 46 தலைப்புகளில் சிந்தனை வைரத்தை வாரி இறைத்திருக்கிறார். ஒரு வாக்கியம் ஒரு பாரா என்ற முறையில் தெள்ளுதமிழில், உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வகையில் எழுதியிருக்கிறார்.

ஒவ்வொரு கருத்தும் உன்னதமான சிந்தனையின் விளைவு என்று சொல்லலாம். குறிப்பாக, அன்னை என்னும் அன்புருவிற்கு அவர் சாற்றியுள்ள புகழ்மாலை எண்ணி எண்ணி இன்புறத்தக்கது.

''தாய்மையே தியாகக் களஞ்சியம்''
''பெண்மையின் முழுமையே தாய்மையாகும்''
''தமிழகத்தின் தலைநகரம் சென்னை; தகைமையின் தலைநகரம் அன்னை.

இப்படி ஒவ்வொரு தலைப்பிலும பலப்பல கருத்துத் தத்துவங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

இந்நூலின் நடை, இனிமையை இன்பத்தை நல்குகிறது. உரை நடை நூல்தான் என்றாலும் கட்டுரைகளின் வரிகள் கவி நடையில் அமைந்துள்ளது இந்நூலின் சிறப்பம்சம் ஆகும்.

—தமிழ்ப்பித்தன்

## குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்

ஆசிரியர். வீ.செல்வராஜ்

வெளியீடு: காந்திய இலக்கியச் சங்கம்,
தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, மதுரை-625020.

விலை: ரூ. 2.00 பக்கம்: 34.

நம்முடைய அன்றாட வாழ்வில் சந்திக்க நேரிடும் சாதாரண பிரச்சினைகளை விஸ்வரூபம் எடுக்க விடாமல் தடுத்தாட் கொள்ளும் வகையில் எட்டு நிகழ்ச்சிகளைத் தொகுத்தளித்துள்ளார் ஆசிரியர்.

'கோழி கூவிற்று' எனும் கட்டுரையில் சமுதாயத்தில் நாம் பெறும் நன்மைகளை எவ்வாறு ஏற்றுக் கொள்கிறோமோ அதே போல் அதனால் ஏற்படும் தீமைகளையும் சமாளிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று அழகுற விளக்கியுள்ளார். —கு. மல்லிகா



# தீரர் சத்தியமூர்த்தி

*[தீரர்சத்தியமூர்த்தி 19-8-1887-ல் திருமயத்தில் பிறந்தார் இளம் வயதில் தந்தையை இழந்து. தனது சொந்த முயற்சியினால் புதுக்கோட்டையிலும் சென்னையிலும் கல்வி கற்று வழக்கறிஞரானார். மகாத்மா காந்தி அவர்களின் தலைமையில் நடந்த இந்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்டு அகில இந்திய அளவில் பெயர் பெற்று விளங்கினார். தான் பிறந்த புதுக்கோட்டை சமஸ்தானத்திலும் விடுதலை உணர்வையும், ஆங்கிலேய எதிர்ப்பு இயக்கத்தையும் உண்டாக்கத் தீரர் சத்தியமூர்த்தி மேற்கொண்ட முயற்சிகளும், அது தொடர்பான நிகழ்ச்சிகளும் கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன.]*

**1948**-ஆம் ஆண்டிற்கு முற்பட்ட தமிழகத்தில் மன்னராட்சி நிலவி வந்த ஒரே சமஸ்தானம் புதுக்கோட்டை! புதுக்கோட்டை சமஸ்தானத்தைத் தொண்டைமான் பரம்பரையினர் ஆண்டு வந்தனர். இவர்கள் ஆங்கிலேயருடன் நெருங்கிய நட்புறவு கொண்டிருந்தனர். மன்னருக்கு எல்லா அதிகாரங்களும் இருந்த போதிலும் ஆங்கிலேய ஆதிக்கத்திற்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டே ஆட்சி நடத்த வேண்டியிருந்தது. ஆகவே ஆங்கிலேயரின் ஆட்சிக்கு எதிரான எந்த விதமான கிளர்ச்சிகளையும் தங்களது சமஸ்தானத்தில் அனுமதிக்கவில்லை. அதுபோன்ற கிளர்ச்சிகள் தலை தூக்கும் போதெல்லாம் அவற்றை ஒடுக்குவதற்குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

> **சுப்ரமணிய பாரதியாரின் மேதையினால் தமிழர்கள் திரும்பவும், இந்தியாவின் அரசியல் வாழ்க்கையிலும், கலை வாழ்க்கையிலும் ஒரு உயர்ந்த ஸ்தானத்தைப் பெற்று வருகின்றனர். தமிழர்கள் தங்களைத் தாங்களே தாழ்வாகக் கொள்ளாமல் தங்களுக்குள் ஒற்றுமையை வளர்த்துக் கொண்டால் இன்னும் மேலான ஸ்தானத்தை யடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை.**
>
> **—சத்தியமூர்த்தி**

அப்போது புதுக்கோட்டை சமஸ்தானத்தை ராஜா மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான் (1886-1928) ஆண்டு வந்தார். இவர் 1915-ஆம் ஆண்டு எஸ்மி மோலி பிங்க் (Esme Moly Fink) என்னும் ஆஸ்திரேலியப் பெண்மணியைத் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்குப் பிறந்த ஆண் குழந்தைக்கு "சிட்னி மார்த்தாண்டன்" எனப் பெயரிடப்பட்டது. மார்த்தாண்டபைரவத் தொண்டைமான் தமது வாழ்நாளில் பெரும்பகுதியை மேலை நாடுகளிலேயே கழித்துவந்தார். பின்பு நிரந்தரமாகவே அந்நாடுகளில் தங்கி விட்டார். சமஸ்தானத்தின் ஆட்சியை அவரது சகோதரர் விஜயரகுநாத துரைராஜா கவனித்து வந்தார்.

சுதேச சமஸ்தானங்களில் காங்கிரஸ் இயக்கக் கிளைகள் தேவையில்லை என, காங்கிரஸ் கட்சியின் கொள்கைக்கு ஏற்ப புதுக்கோட்டையிலும் காங்கிரஸ் கட்சி இருக்கவில்லை. ஆனால் அருகிலுள்ள பகுதிகளில் ஏற்பட்ட போராட்டங்களின் பயனாக ஆட்சியில் மக்களுக்கும் மிகுந்த பங்கு வேண்டுமென்ற கருத்து வேரூன்றத் தொடங்கியது. ஆகவே புதுக்கோட்டையில் 'மகாஜனசபை' ( People's Conference ) என்ற இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் மகாத்மா காந்திஜியின் தலைமையில் நடைபெறும் போராட்டங்களுக்கு ஆதரவளித்துப் பேசி வந்தனர். மன்னரிடத்திலும் மன்னராட்சியிலும் மிகுந்த நம்பிக்கையும் பக்தியும் கொண்டிருந்த மக்கள் மத்தியில் இவ்வியக்கம் மெள்ள பரவத் தொடங்கியது. மகாஜனசபையின் முதல் மாநாடு 27-4-1920-ல் பூவரசகுடி என்ற கிராமத்தில் நடைபெற்றது. சமஸ்தான ஆட்சி நடவடிக்கைகளில் மக்களுக்கும் பங்கு வேண்டுமென்ற கோரிக்கையை முதன் முதலில் ஒலித்தது. அடுத்துவரும் மாநாட்டிற்கு அகில இந்திய அளவில் புகழ்பெற்று விளங்கும் புதுக்கோட்டை ஈன்றெடுத்த தீரர் சத்தியமூர்த்தி அவர்களை அழைக்க முடிவு செய்தனர். மகாஜனசபையின் இரண்டாவது மாநாடு 12-11-1920-ல் புதுக்கோட்டை நகர்மன்றத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்குத் தீரர் சத்தியமூர்த்தி தலைமை வகித்து புதுக்கோட்டை மக்களிடையே முதன் முதலில் உரை நிகழ்த்தினார். சத்தியமூர்த்தியைக் கண்டதும் மக்களுக்கு ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டது. தமது உரையில் தீரர் சத்தியமூர்த்தி அப்போது கூறியதாவது :—

''திருமயத்தில் பிறந்த நான், எந்த ஊரில் இருந்தாலும் இச்சமஸ்தான மக்கள் நலனில் அக்கறை உள்ளவனாக உள்ளேன். தூரவிடங்களில் சென்று உயிர் வாழும்படியான விதி எனக்கு ஏற்பட்டுவிட்டது.

''நீங்கள் ஊமைகள் அல்ல, நமது ராஜீய அந்தஸ்து நமது கையில்தான் உள்ளது. சுயராஜ்யம் நமது பிறப்புரிமை. ஆங்கிலேய ஆதிக்கக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு நடக்கும் சமஸ்தான ஆசியின் கீழ் உள்ள மக்களுக்கும் சுயராஜ்யம் வேண்டும். அது ஒரேநாளில் கிடைத்துவிடாது. சுயராஜ்யம் காண மக்களுக்குப் பயிற்சியளித்து அதற்கானமுட்டுக்கட்டைகளைத் தகர்த்தெறிய வேண்டும்.''

''உங்களது ராஜா சமஸ்தானத்தை விட்டு வெளிநாடுகளிலேயே வெகுகாலம் தங்கியுள்ளார். இதுகுறித்து உங்களது துக்கத்தை நான் அறிவேன். புதுக்கோட்டை ராஜாவைப்போல் தமது பொறுப்பை உணராதவரும், தமது பிரஜைகளை அவமதிப்பவரும் எங்குமில்லை. உங்கள் ராஜா காட்டிவரும் அசிரத்தைக்கு நீங்கள் கண்டனம் தெரிவிக்க வேண்டும். நமது ராஜாவின் பிள்ளை சிட்னி மார்த்தாண்டனுக்குப் பட்டம் கிடையாது என்று வற்புறுத்தி நீங்கள் கிளர்ச்சிசெய்யவேண்டும். இந்துதர்மப்படியும் உங்கள் ஜாதி வழக்கப்படியும் உங்கள் ராஜா தமக்குப் பின் ஒருவரைப் பட்டத்திற்குத் தெரிந்தெடுக்க வேண்டுமென்று நீங்கள் கிளர்ச்சி செய்ய வேண்டும்.''

—சத்தியமூர்த்தியின் பேச்சு மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

சுயராஜ்ய உரிமை கோரி சமஸ்தான மக்கள் கிளர்ச்சி செய்ய வேண்டுமென்ற வாதத்தைப் பற்றி சமஸ்தான நிர்வாகம் அதிகம் கவலைகொள்ளவில்லை. ஆனால் மன்னரைப் பற்றியும், ஆஸ்திரேலியப் பெண்மணிக்குப் பிறந்த சிட்னி மார்த்தாண்டனுக்கு வாரிசுரிமை அளிக்கக் கூடாது என்றும் சத்தியமூர்த்தி பேசிய பேச்சு நிர்வாகத்திற்குக் கோபத்தை ஏற்படுத்தியது. சலனமற்றுக் கிடந்த புதுக்கோட்டை சமஸ்தான மக்களைப் புரட்சிப் பாதைக்கு இழுத்துச் சென்று விடுவார் என்று அஞ்சிய

நிர்வாகம் சத்தியமூர்த்தி புதுக்கோட்டைக்குள் நுழையத் தடை விதித்து 2-2-1921-ல் ஒரு ஆணை பிறப்பித்தது. மேலும் மகா ஜனசபைத் தலைவர்கள் பலர் கடும் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

பொது மக்கள் பற்பலஇடங்களில் கூட்டம் கூடி சத்தியமூர்த்திக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்ய மன்னரிடம் விண்ணப்பித்துக் கொண்டனர்.
தடை உத்தரவை ரத்து செய்ய சமஸ்தான நிர்வாகம் மறுத்து விட்டது(புதுக்கோட்டை தர்பார் உத்தரவு கோப்பு எண்: 809/சி 1921 நாள் : 2-6-21).

சத்தியமூர்த்தி எடுத்துரைத்த சுதந்திர உரிமை வேட்கையும் சமஸ்தான வாரிசுப் பிரச்னையும் மக்கள் மனதில் ஒரு பாதிப்பை ஏற்படுத்தியிருந்த இந்த சந்தர்ப்பத்தில் மகாத்மா காந்திஜி 1921-ல் புதுக்கோட்டை வழியாகச் செட்டிநாடு செல்வதாக இருந்தது. புதுக்கோட்டை மக்கள் அவருக்கு ஒரு வரவேற்புக் கொடுக்கத் திட்டமிட்டனர். காந்திஜி ''ஆங்கிலேயரின் ஆட்சிக்கு எதிரி'' எனக்கூறி புதுக்கோட்டைக்குள் நுழையத் தடை விதித்து 18-11-1921-ல் ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. காந்திஜி மதுரை வழியாகக் காரைக்குடி சென்றடைந்தார். மகாஜனசபை பிரதிநிதிகள் காரைக்குடிக்குச் சென்று புதுக்கோட்டை நகர மக்கள் சார்பில் காந்திஜிக்கு ஒரு வரவேற்பு அளித்தனர். இதற்காக ஜி. சுந்தரேச சாஸ்திரி, எஸ். விஸ்வநாத அய்யர் ஆகியோரது சட்டசபை உறுப்பினர் பதவியும், நகர்மன்ற உறுப்பினர் பதவியும் பறிக்கப்பட்டன

இரண்டு ஆண்டுகள் கழித்து சத்தியமூர்த்திமீது இருந்த தடையுத்தரவு ரத்து செய்யப்பட்டது. அவர் மீண்டும் 2-12-1926-ல் நடைபெற்ற மகாஜனசபைக் கூட்டத்தில் உரை நிகழ்த்தினார். இக்கூட்டத்திலும் மக்களை மக்களே ஆள வழிவகை காண வேண்டுமெனவும், குடிப்பழக்கத்தை விட்டொழிக்கும்படியும், தமிழ் சமஸ்தான ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமெனவும், பெண்கள் கல்வியையும், அருங்கலைகளையும் ஊக்குவிக்க வேண்டுமெனவும், புதுக்கோட்டை மன்னர் வெளிநாடுகளில் தங்கிவிட்டதைக் கண்டித்தும், சமஸ்தானத்தின் வாரிசுரிமை இந்து தர்மப்படி நிர்ணயிக்க வேண்டுமென்வும் எடுத்துரைத்தார்.

இத்தருணத்தில் சத்தியமூர்த்திக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு பிரம்மாண்டமாக இருந்தது. ''அரசனைக் கண்டு அகமகிழும் ஆனந்த வெள்ளமும், அத்யந்த பக்தியும், ஆசாரியார்களைக் கண்டு அன்புடன் அடிபணியும் திரிகரண சுத்தியும் மக்களிடத்தில் காணப்பட்டன'' என 'ஜனமித்திரன்' நாளேடு சத்தியமூர்த்தியின் வருகையைச் சித்தரித்து எழுதியது. (ஜனமித்திரன், தேச ஊழியன் இரண்டும் புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்த செய்தித் தாள்கள்).

மக்கள் எழுச்சி வாரிசுரிமை குறித்தே அதிகம் கவனம் செலுத்தியது. சத்தியமூர்த்தியின் வாரிசுரிமை குறித்த பேச்சுக்களையும் கட்டுரைகளையும் பிரசுரித்த காரணத்திற்காக ஜனமித்திரன் செய்தித்தாள் ஆசிரியருக்குத் தேசதுரோகக் குற்றம் என்ற பெயரில் ஆறு மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. சிட்னி மார்த்



தாண்டனுக்கு எதிராக மகா ஜனசபை மக்கள் கருத்தைத் திரட்டி வந்தது.

21-11-1927-ல் மகாத்மா காந்திஜி புதுக்கோட்டைக்கு வருகை தந்தபோது (இம்முறை சமஸ்தான நிர்வாகம் தடை விதிக்கவில்லை)அவருக்குப் பொது மக்கள் சிறப்பான வரவேற்பளித்தனர். காந்தியின் பேச்சும் மக்களிடையே எழுச்சி மிகுந்த உற்சாகத்தை ஏற்படுத்தியது.

மன்னர் மார்த்தாண்ட பைரவத் தொண்டைமான் 28-5-28-ல் பாரிஸ் நகரத்தில் காலமானார். புதுக்கோட்டை சமஸ்தான வாரிசு உரிமை குறித்து முடிவெடுக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை ஆங்கிலேய அரசுக்கு ஏற்பட்டது. இந்நிலையில் சிட்னி மார்த்தாண்டனுக்கு மன்னர் பதவி அளிக்கக்கூடாது என இந்து (Hindu) சுதேசமித்திரன். சுயராஜ்யா போன்ற பத்திரிகைகள் பொதுமக்கள் கருத்தைப் பிரதிபலித்து எழுதின. சத்தியமூர்த்தியும் இச்சந்தர்ப்பத்தில் தனது முந்தைய கருத்துக்களை வலியுறுத்தி அறிக்கை வெளியிட்டார். தேச ஊழியன், ஜனமித்திரன் ஆகிய பத்திரிகைகள் வாரிசுரிமை குறித்து எழுதத் தடைவிதிக்கப்பட்டது. சத்தியமூர்த்தியின் பேச்சுக்களையும், கட்டுரைகளையும் வெளியிட்டதற்காகத் தேச ஊழியன் ஆசிரியர் ஏ. எஸ். நாகரெத்தினம் நாடுகடத்தப்பட்டார். சத்தியமூர்த்தி புதுக்கோட்டை சமஸ்தானத்திற்குள் நுழைய தடைவிதித்து இரண்டாம் முறையாக ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது (1928). மீறினால் கைது செய்ய ஆணையும் பிறப்பிக்கப்பட்டது. ஆங்கிலேய அரசு என்ன செய்யப்போகிறது என்று அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர் சமஸ்தான மக்களின் உணர்ச்சிகளைப்புரிந்து கொண்ட ஆங்கிலேய அரசு 6-வயது மைனராக இருந்த ராஜகோபாலத் தொண்டைமான் அவர்களைப் புதுக்கோட்டை சமஸ்தான மன்னராக 1-11-28-ல் நியமித்தது. (இவர் இறந்துபோன மன்னரின் இளைய சகோதரியின் பேரன்).

புதிய மன்னர் 19-11-1298-ல் பதவியேற்றுக் கொண்டார்.

18-10-29ல் சத்தியமூர்த்தி மீது பிறப்பிக்கப்பட்டிருந்த தடை உத்தரவு பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க ரத்து செய்யப்பட்டது. வாரிசுரிமை சுமூகமாக தீர்க்கப்பட்டபோதும் இந்தியா சுயராஜ்யமாகும்போது சமஸ்தானங்களும் சுயராஜ்யமாக வேண்டுமென எடுத்துரைத்தார். புதுக்கோட்டைக்கு காவிரிநீரைக் கொண்டு வர சென்னை அரசாங்கத்தை வலியுறுத்துவதாக உறுதியளித்தார்.

புதுக்கோட்டை சமஸ்தானம் இந்திய யூனியனுடன் 3-3-1948 இல் இணைந்தது. சத்தியமூர்த்தியின் கனவும் நனவானது.

''ஒரு ஊரில் பிறக்கும் மக்களால் அம்மண்ணுக்குப் பெருமை.'' சத்தியமூர்த்தி புதுக்கோட்டையில் பிறந்ததால் அதற்குப் பெருமை.

**ஜெ. ராஜாமுகமது,**
**காப்பாட்சியர்,**
**அரசு அருங்காட்சியகம்,**
**புதுக்கோட்டை.**





## வறட்சி நிவாரணப் பணிகள்:

# மத்திய நிபுணர் குழு திருப்தி

தமிழ்நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் நிலையை நேரில் பார்வையிடவும், மத்திய நிதி உதவி குறித்து முடிவு செய்யவும் மத்திய நிபுணர் குழு ஒன்று 22-8-86 அன்று சென்னை வந்தது.

மத்திய அரசின் வேளாண்மைத் துறை கூடுதல் செயலர் திரு. சுனில் சூட், இ.ஆ.ப., அவர்கள் தலைமையிலான இக்குழுவில் மத்திய அரசின் நிதித்துறை அலுவலர் திரு கஜேந்திர ஹால்டியா, மத்திய திட்டக்குழுவின் துணை ஆலோசகர் டாக்டர் பி.எஸ். சங்குவான், கிராமப்புற வளர்ச்சித் துறையின் உதவி ஆலோசகர் திரு ஏ. கே கோஷ் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

இவர்கள் இரு குழுக்களாகப் பிரிந்து மாவட்டங்களில் நிலவும் வறட்சிநிலை, குடிநீர்த் தட்டுப்பாடு, மேற்கொள்ளப்பட்டுள்ள துயர் துடைப்புப் பணிகள் ஆகியவற்றைப் பார்வையிட்டனர். ஒரு குழு கோயம்புத்தூர், பெரியார், சேலம், தர்மபுரி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் பயணம் மேற்கொண்டது. இக்குழுவினருடன் துயர்

துடைப்பு ஆணையாளர் திரு. ஹரிபாஸ்கர், இ.ஆ.ப., அவர்களும், வணிகவரித்துறைச் சிறப்பு ஆணையர் திரு என். கிருஷ்ணமூர்த்தி இ.ஆ.ப., அவர்களும் உடன்சென்றனர்.

மற்றொரு குழு மதுரை, அண்ணா, காமராஜர், பசும்பொன் முத்துராமலிங்கம், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் பயணம் மேற்கொண்டது. இக்குழுவினருடன் நிலச் சீர்திருத்த சிறப்பு ஆணையர் திரு பி. வெங்கிடகிருஷ்ணன் இ.ஆ.ப., அவர்கள் உடன் சென்றார்.

மத்திய வேளாண்மைத்துறை கூடுதல் செயலாளர் திரு சுனில் தலைமையிலான 4 உறுப்பினர் அதிகாரிகள் குழு மதுரை மற்றும் காமராஜர் மாவட்டங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சுற்றிப் பார்த்தது.

திரு சுனில் பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோது, ''வறட்சி நிலைமை பற்றி முழுதாக ஆய்வு செய்துவிட்டு அரசுக்கு அறிக்கை தருவோம். உடனடியாக நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக 'இடைக்கால நிவாரணம்' தருவது பற்றிப் பரிந்துரை கூறக் குழு பரிசீலிக்கும்'' என்று தெரிவித்தார்.

பின்னர் மத்திய நிபுணர் குழுவினர் 25-8-86 அன்று சென்னை திரும்பி, தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலர், வறட்சி நிவாரண ஆணையர் மற்றும் உயர் அலுவலர்களுடன் ஆலோசனை நடத்தினர்.

இது குறித்துத் தலைமைச் செயலர் திரு ஏ. பத்பநாபன், இ.ஆ.ப. அவர்கள் செய்தியாளர்களிடம் பேசுகையில்,

''மத்திய நிபுணர் குழு தமிழ்நாட்டில் நடந்து வரும் வறட்சி நிவாரணப் பணிகள் பற்றித் திருப்தி தெரிவித்துள்ளது. முக்கியமாகக் குடிநீர் வழங்குவது, வறட்சிப் பகுதிகளில் வேலை வாய்ப்புத் திட்டங்கள் ஆகியவற்றைப் பாராட்டியுள்ளது.

''தமிழகத்தில் பல பகுதிகளில் கடும் வறட்சி நிலவுவதைப் பார்த்திருக்கிறார்கள். கடந்த வடகிழக்குப் பருவமழை போதிய அளவில் இல்லை. இப்போதைய தென்மேற்குப் பருவ மழையும் சரியாக இல்லை. ஆகவே வறட்சி நிவாரணப்பணி தொடர வேண்டுமென்று கருத்துத் தெரிவித்துள்ளார்கள். ஏற்கெனவே நாம் அறிக்கை கொடுத்திருக்கிறோம். அதற்கான கூடுதல் விவரங்களைக் கேட்டிருக்கிறார்கள். அவை இன்று தரப்படுகின்றன.

''பொதுவாக இங்கு நடைபெறும் வறட்சி நிவாரணப் பணிகள் குறித்துத் திருப்தி தெரிவித்திருக்கிறார்கள். குடிநீருக்காகவும் வேலைவாய்ப்புத் திட்டங்களுக்காகவும் மத்திய அரசின் உதவியை எதிர்பார்த்து 34 முதல் 35 கோடி வரை நாம் நிதி ஒதுக்கி இருக்கிறோம்.

''மத்திய நிபுணர்கள் குழு விரைவில் மத்திய அரசிடம் அறிக்கை அளிக்கும். இக்குழுவை அனுப்பியதற்கு மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்திருக்கிறோம். குறிப்பாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சார்பில் நன்றி தெரிவித்துள்ளோம்'' என்று கூறினார்.

---

## செய்தித் திரட்டு

அரசு ஊழியர்கள் வீடுகள் கட்டிக் கொள்ள வழங்கப்பட்டு வந்த கடனுதவியின் உச்ச அளவு உயர்த்தப்பட்டுள்ளது. தற்போது ரூ. 1 இலட்சத்து 50 ஆயிரம் வரை வழங்கப்பட்டு வரும் இக்கடனுதவி இனி ரூ. 1 இலட்சத்து 75 ஆயிரம் வரை வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளது. ஆண்டுதோறும் அரசு ஊழியர்களின் குடியிருப்பு வசதிக்காகத் தமிழ்நாடு அரசு ரூ. 8 கோடி வரை செலவு செய்து வருகிறது.

தமிழ்நாடு சர்க்கரைக் கழகமும் தமிழ்நாடு அரசும் மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகளின் காரணமாகத் தமிழ்நாட்டில் சர்க்கரை உற்பத்தி அதிகரித்துள்ளது. இதன் காரணமாக வெளிநாடுகளிருந்து ரூ 30 கோடி அளவுக்குச் சர்க்கரை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை தவிர்க்கப்பட்டு அந்நியச் செலாவணி மிச்சமாகி உள்ளது. மாண்புமிகு பிரதமர் அவர்கள் தமிழ்நாடு அரசின் இச்செயல் திறனைப் பாராட்டி உள்ளார்.

கன்னியாகுமரி, உதகமண்டலம், இராமேஸ்வரம், மகாபலிபுரம் ஆகிய இடங்களை நவீன சுற்றுலா மையமாக்க ரூ. 73 கோடி செலவில் தமிழ்நாடு அரசு பெருந்திட்டம் ஒன்று தீட்டி உள்ளது.

கன்னியாகுமரிக்கென ரூ. 18 கோடி செலவிலும், இராமேஸ்வரம், உதகமண்டலம், மகாபலிபுரம் ஆகிய இடங்களுக்கென ரூ. 55 கோடி செலவிலும் தீட்டப்பட்ட இத்திட்டங்கள் மத்திய அரசின் அனுமதிக்கென அனுப்பப்பட்டுள்ளதாக மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தெரிவித்துள்ளார்.



# வறட்சியை வெல்வோம்!



## கோயம்புத்தூர் மாவட்டத்தில்...

**மு. அபுல்ஹசன், இ.ஆ.ப.**
**மாவட்ட ஆட்சித் தலைவர்,**
**கோயம்புத்தூர்.**

**கோ**வை மாவட்டத்தில் தொடர்ந்து போதிய மழையின்மையின் காரணமாக அநேகப் பகுதிகளில் உள்ள குடிநீர்க்கிணறுகளின் நீர் மட்டம் குறைந்தும், வறண்டும் விட்டது. ஆழ்குழாய்க் கிணறுகளிலும் நிலத்தடி நீரின் செழுமை குறைந்தது. நிலத்தடி நீரைப் பெருக்கி, தண்ணீர் ஊற்றத்தை அதிகரித்துப் போதிய அளவு ஆழ்குழாய்க் கிணறுகளின் மூலம் மக்கள் தண்ணீர் பெற இயலாத சூழ்நிலையும் உருவாயிற்று. இம்மாவட்டத்தில் குறிப்பாக அவிநாசி, பல்லடம் வட்டங்களில் இவ்வறட்சி நிலை ஏற்பட்டுள்ளது.

1986-87 மாறுபட்ட பருவ நிலைத் திட்டத்தின் கீழ் தற்போது பணிகள் போர்க்கால அடிப்படையில் விரைவாக நடைபெற்று வருகின்றன.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றியங்களில் குடிநீர்க் கிணறுகள் ஆழப்படுத்தும் பணி ரூ. 62.40 லட்சம் ஒதுக்கீட்டில் நடைபெற்று வருகின்றது. கோவைக் கோட்டத்தில் ரூ.11.65லட்சம் செலவிலும், பொள்ளாச்சிக் கோட்டத்தில் ரூ. 16.70 லட்சம் செலவிலும், திருப்பூர்க் கோட்டத்தில் ரூ. 34.05 லட்சம் செலவிலும் ,989 பணிகள் நடைபெற்று வருகின்றன. கோவைக் கோட்டத்தில் 44 பணிகளும் பொள்ளாச்சிக் கோட்டத்தில் 83 பணிகளும், திருப்பூர்க் கோட்டத்தில் 199 பணிகளும் ஆக இதுவரை 326 பணிகள் ரூ. 42.19 லட்சம் செலவில் முடிவடைந்துள்ளன.

நகரப் பேரூராட்சிகளில் குடிநீர்க் கிணறுகள் ஆழப்படுத்தும் பணிக்காக ரூ. 6.50 லட்சம் ஒதுக்கீட்டில் 104 பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது 23 பணிகள் ரூ. 0.18 லட்சம் செலவில் முடிவடைந்துள்ளன.

புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றியங்களில் 160 பணிகளும், பேரூராட்சிகளில் 100 பணிகளும், நகராட்சிகளில் 80 பணிகளும், ஆக 340 பணிகள் எடுக்கப்பட்டு தற்போது ஊராட்சி ஒன்றியங்களில் 160 பணிகளும், பேருராட்சிகளில் 83 பணிகளும், நகராட்சிகளில் 67 பணிகளும் ஆக இதுவரை 295 பணிகள் முடிவு பெற்றுள்ளன.

திருப்பூர்க் கோட்டத்தில் 24 புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் ரூ. 6 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

ஊராட்சி ஒன்றியங்களில் புதிய திறந்த வெளிக் கிணறுகள் வெட்டும் திட்டத்தின் கீழ் ரூ. 10 லட்டம் செலவல் 23 பணிகள் நடைபெற்று வருகின்றன. கோவைக் கோடடத்துறகு 5 பணிகளுக்கு ரூ. 2 லட்சமும், பொள்ளாசசிக் கோட்டத்திற்கு 6 பணிகளுக்கு ரூ 2 லட்சமும, திருப்பூர்க் கோட்டத்திற்கு 12 பணிகளுக்கு ரூ.6 லட்சமும ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நகராட்சிகளில் ஏற்கெனவே உள்ள ஆதாரங்களை மேம்பாடு செய்யும் திட்டத்தின் கீழ் பொள்ளாச்சி நகராட்சிக்கு 2 பணிகளுக்கு ரூ. 0.75 லட்சமும், திருப்பூர் நகராட்சிக்கு 37 பணிகளுக்கு ரூ. 2.50 லட்சமும், உடுமலை நகராட்சிக்கு 7 பணிகளுக்கு ரூ. 1.50 லட்சமும், மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு 5 பணிகளுக்கு ரூ. 1.25 லட்சமும் ஆக மொத்தம் 51 பணிகளுக்கு ரூ



திருப்பூர் ஊராட்சி ஒன்றியம் வாவிபாளையத்தில் குட்டை தூர் எடுக்கும் பணி.

6 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட் பட்டு, பணிகள் நடைபெற்று வரு கின்றன.

நகராட்சிகளில் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் திட்டத்தின் கீழ் பொள்ளாச்சி நகராட்சிக்கு ரூ. 1.50 லட்சமும், திருப்பூர் நகராட்சிக்கு ரூ. 2.50 லட்சமும், உடுமலை நகராட்சிக்கு ரூ. 0.28 லட்சமும், மேட்டுப் பாளையம் நகராட்சிக்கு ரூ.0.72 லட்சமும் ஆக மொத்தம் ரூ.5 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை ரூ. 2.82 லட்சம் செலவிடப்பட்டு, பணிகள் முடிக் கப்பட்டுள்ளன.

பேரூராட்சிகளில் லாரிகள் மூலம் குடிநீர் வழங்கும் திட்டத் தின் கீழ் ரூ. 3.75 லட்சம் ஒதுக் கீடு செய்யப்பட்டு இதுவரை ரூ. 1.06 லட்சம் செலவிடப்பட்டுள் ளது.

வேலைவாய்ப்புத் திட்ட நிவா ரணப் பணிகளின்கீழ் குட்டைகள் மேம்பாடு செய்யும் பணிக்கு கோவைகோட்டத்திற்கு 10 பணி களுக்கு ரூ. 2.24 லட்சமும், பொள்ளாச்சிக் கோட்டத்திற்கு 50 பணிகளுக்கு ரூ. 4.17 லட்ச மும், திருப்பூர்க் கோட்டத்திற்கு 78 பணிகளுக்கு ரூ. 7.04 லட்ச மும் ஆக இம்மாவட்டத்தில் 138 பணிகளுக்கு ரூ. 13.45 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

பாதைகள் செப்பனிடும் பணி யின் கீழ் பொள்ளாச்சிக் கோட் டத்தில் 56 பணிகளுக்கு ரூ.28.36 லட்சமும், திருப்பூர்க் கோட்டத் தில் 20 பணிகளுக்கு ரூ. 6.41 லட்சமும் ஆக இம்மாவட்டத்தில் 76 பணிகளுக்கு ரூ. 34.77லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

புதிய பாதைகள் அமைக்கும் பணியின் கீழ் கோவைக் கோட் டத்தில் 3 பணிகளுக்கு ரூ. 0.75 லட்சமும், பொள்ளாச்சிக் கோட் டத்தில 4 பணிகளுக்கு ரூ. 2.70 லட்சமும், திருப்பூர்க் கோட்டத் தில் 34 பணிகளுக்கு ரூ. 6.74 லட்சமும் ஆக இம்மாவட்டத்தில் 41பணிகளுக்குரூ. 10.19 லட்சம்

**வறட்சி நிவாரணப் பணிகளை செய்தியாளர்கள் மற்றும் அலுவலர்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவர் பார்வை யிடுகிறார்.**



ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதுபோன்ற திட்டங்கள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருவதன் காரணமாக இம்மாவட்டத்தில் தற்போது குடிநீர்த் தட்டுப்பாடு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டு விட்டது. இப்பணிகள் யாவும் சிறப்புத் திட்டத்தின் அடிப்படையில் செயல்பட்டு வருகின்றனவெனினும் பகுதி மக்களுக்கு நிரந்தரப் பலன் தருகின்ற விதத்தில் தொலைநோக்குத் திட்டங்களாக இவை நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

## கன்னியாகுமரி மாவட்டத்தில்...

குமரி மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. குமரி மாவட்டத்தில் வறட்சி நிவாரணத் திட்டங்களை நிறைவேற்றிட 6.61 கோடி ரூபாயில் திட்டங்கள் தயார் செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இதுவரை வறட்சிநிவாரணப்பணிகளுக்கு அரசு 36 லட்சம் ரூபாய் அனுமதி அளித்துள்ளது. குமரி மாவட்டத்தில் வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் திட்டத்தின் கீழ் 8,611 பேர் பயன் பெற்று வருகின்றார்கள்.

குமரி மாவட்டத்தில் 115 கிணறுகள் அமைக்க ரூ. 28.75 லட்சம் ஒதுக்கப்பட்டு இருந்தது. அதில் இதுவரை சுமார் ரூ. 25 லட்சம் செலவில் 104 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. 150 கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டவேலை முடிவடைந்துள்ளது. கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 4.45 லட்சம். இதுவரை செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 3.68 லட்சம். எட்டு புதிய திறந்த வெளிக் கிணறுகள் அமைக்கும் பணி நடந்துவருகிறது. அதற்காக இதுவரை செலவிடப்பட்ட தொகை ரூ. 13 ஆயிரம்.

மேலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் குடி தண்ணீர் வசதிக்காக இந்த ஆண்டு ரூ. 1.20 கோடி செலவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. 35 லட்சம் ரூபாய் செலவில் மேலும் 17 திறந்தவெளிக்கிணறுகள் தோண்டப்படும். ஆழ்குழாய்க் கிணறுகள் 760 தோண்ட ரூ. 1.09 கோடி திட்டமிட்டுள்ளது.

நகரப் பஞ்சாயத்துக்களில் 44, கிராமப் பஞ்சாயத்துக்களில் 516, நகராட்சியில் 20 ஆழ்குழாய்க் கிணறுகளும் தலா ரூபாய் 25 ஆயிரம்செலவில் தோண்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் நிலச்சீர் திருத்தச் சிறப்பு ஆணையாளர் திரு இரகுபதி. இ.ஆ.ப., அவர்கள் குமரி மாவட்டத்தில்நடைபெற்று வரும் வறட்சி நிவாரணப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு எஸ்.முனீர் ஹோதா இ.ஆ.ப., மற்றும் மாவட்ட அலுவலர்களுடன் பல்வேறு இடங்களுக்குச் சென்று பார்த்தார். குமரிமாவட்டத்தில் வறட்சி நிவாரணத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை முறையாகச் செலவிடப்பட்டு மக்களும், அரசும் திருப்தியடையும் வகையில் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன என்றார்.

**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**

**கன்னியாகுமரி மாவட்டம்.**

திறந்தவெளிக் கிணறு தோண்டும் பணி நடைபெறுகிறது.





## சென்ற இதழில்....

மகளிர்குல மணிவிளக்காய் விளங்கிய அமரர் டாக்டர் திருமதி முத்துலட்சுமி ரெட்டி அவர்களின் திருவுருவப் படத்தை சென்ற இதழ் (16.8.86) அட்டை அலங்கரித்தது.

# பழம்பெரும் நடிகர் எம். ஜி. சக்கரபாணி மறைவு



**மா**ண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் தமையனாரும் சிறந்த நடிகரும், பட அதிபருமான திரு எம்.ஜி.சக்கரபாணி அவர்கள் 17.8.86 அன்று மறைவெய்தினார்.

மேதகு ஆளுநர், மாண்புமிகு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிப் பெருமக்கள், பொதுமக்கள் அனைவரும், அன்னாரின் இல்லத்திற்குச் சென்று அவரது உடலுக்கு மலர் வளையங்களும் பூமாலைகளும் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

தமது தமையனாரைப் பிரிந்த துயரத்துக்கு ஆளான மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, மேதகு ஆளுநர் எஸ்.எல்.குரானா அவர்கள் ஆறுதல் கூறினார்.

1911 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பிறந்த சக்கரபாணி அவர்கள் தமிழ்த் திரையுலகில், அழுத்தமான நடிப்பினாலும், தெளிவான வசன உச்சரிப்பினாலும் தமக்கெனத் தனி இடம் தேடிக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் பெரும்பாலும் வில்லன் பாத்திரமேற்று நடித்தாலும் பொதுமக்களின் இதயத்தில் இடம் பிடித்தவர்.

சென்னை ரெய்னி மருத்துவ மனையிலுள்ள குடும்ப நலப் பிரிவுக்கு மேற்கு ஜெர்மனி அரசு தொலைக்காட்சிப் பெட்டியும், வீடியோவும் வழங்கியது. சென்னையிலுள்ள மேற்கு ஜெர்மனியின் தூதர் என். மார்ட்டின் அதை ரெய்னி மருத்துவ மனையின் தலைமைப் பொறுப்பாளர் டாக்டர் விஜயகுமாரிடம் 27.8.86 அன்று வழங்கினார். மேற்கு ஜெர்மனியின் துணைத் தூதர் திரு ஆர். வால்கே, தமிழக மாநிலத் திட்டக் குழுத் தலைவர் திரு டி. வி. அந்தோணி, இ.ஆ.ப., குடும்ப நலத்துறை இயக்குநர் திருமதி ஒ. பி. சோசம்மா, இ.ஆ.ப., ஆகியோர் உடன் உள்ளனர்.




ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி - மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


Exotic Designs for
the New Year
A new range added in
Chiffon, Polyester, Silk
and Cotton sarees for you.
Visit Co-optex showroom.
Co-optex
Handlooms
DIPR/Efficient

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

